# யொவுன்புரய 2018

# நிக்கவெரட்டிய

# கைநூல்

## எதிர்காலம் - ஆரம்பம்

Yowun Puraya
2018 @ NIKAWERATIYA
Future began

கருத்திட்ட முகாமைத்துவ, இளைஞர் நடவடிக்கைகள் மற்றும்
தெற்கு அபிவிருத்தி அமைச்சு

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்

இலங்கை இளைஞர் கழக சம்மேளனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

#YPYF2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யொவுன்புர நிகழ்ச்சிக்கான கைநூல்

## ஒன்பதாவது

## யொவுன்புரய

## 2018

2018 மார்ச் 28 ஆந்திகதி தொடக்கம் ஏப்பிறல் 01 ஆந்திகதி வரை

நிகவெரட்டிய – எத்துகல்புர

**எதிர்காலம் ஆரம்பம் !**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் மாண்புமிகு ஜனாதிபதி அவர்களின் வாழ்த்துச் செய்தி

கௌரவ பிரதமர் ரணில் விக்ரமசிங்ஹ அவர்களின் எண்ணக்கருவின் அடிப்படையில், 1984 ஆம் ஆண்டில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புலஸ்திபுரய நகரில் தொடங்கி வைக்கப்பட்ட யொவுன்புரய தேசிய நிகழ்ச்சித்திட்டம் 06 வருட காலமாக வருடாந்தம் நடாத்தப்பட்டு பல்வேறு காரணங்களின் அடிப்படையில் இடைநிறுத்தப்பட்டதுடன், 2015 ஆம் ஆண்டில் எமது அரசு ஆட்சிக்கு வந்ததன் பின்னர் தேசிய இளைஞர்களின் அபிவிருத்தியின் விருத்திக் கட்டத்தில் ஒரு அடி முன்னே நின்று, "எதிர்காலம் ஆரம்பம்" என்ற தொனிப்பொருளின் கீழ் 2016 ஆம் ஆண்டில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சீகிரியா நகரினை மையமாகக்கொண்டு நடாத்த கிடைத்தமை எம் நாட்டின் இளைஞர்கள் பெற்ற சிறந்ததொரு வெற்றியாக நான் கருதுகின்றேன்.

இந்த நிகழ்ச்சித்திட்டம் கடந்த வருடத்திலும் மிகவும் வெற்றிகரமான முறையில் திருகோணமலை நகரினை மையமாகக்கொண்டு நடாத்தப்பட்டதுடன் இங்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு இளைஞர் யுவதிகளின் அறிவு, ஆற்றல் மற்றும் உளப்பாங்கு என்பவற்றினை கூடியளவில் விருத்தி செய்வதற்கும் அவ்வாறே நவீன தொழிநுட்பத்தின் ஊடாக தனது அனுபவங்களை சீர்தூக்கிப் பார்க்கும் வாய்ப்புக்களை அவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கவும் எமக்கு ஆற்றல் கிடைத்தது.

.

**"எதிர்காலம் ஆரம்பம்"** என்ற தொனிப்பொருளின் கீழ் 9 ஆவது யொவுன்புர தேசிய நிகழ்ச்சித்திட்டம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த எத்துகல்புர நகரின் நிகவெரட்டிய பிரதேசத்தில் கால்நடை வளங்கள் அபிவிருத்தி நிலைய வளாகத்தில் நடாத்தக் கிடைத்தமை தொடர்பாக நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்துகொள்ளும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு இளைஞர் யுவதிகளுக்கு இம்முறை யொவுன்புர நிகழ்ச்சியின் ஊடாக தனது இளமையினை வெல்வதற்காக ஏராளமான அனுபவங்கள் கிடைக்கட்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

மேற்படி யொவுன்பர நிகழ்ச்சியினை வெற்றியடையச் செய்வதற்காக பங்களிப்பு வழங்கிய கருத்திட்ட முகாமைத்துவ, இளைஞர் நடவடிக்கைகள் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சினதும் மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினதும் மொத்த அலுவலர் குழாத்தினருக்கும், இலங்கை இளைஞர் கழக சம்மேளனத்தின் சகல இளைஞர் யுவதிகளுக்கும், ஏனைய அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் மொத்த அலுவலர் குழாத்தினருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மைத்திரிபால சிரிசேன,
ஜனாதிபதி,
இலங்கை சனநாயக சோசலிஷக் குடியரசு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் கௌரவ பிரதமர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

இளைஞர்களின் வாழ்க்கையினை வலுவூட்டி, புதிய உலகினை வெல்லும் மார்க்கங்களைக் காட்டுவதற்காக மூன்று தசாப்த காலங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டு எல்லாக் காலங்களுக்கும் பெறுமதி மிக்க ஒரு நிகழ்ச்சியாக யொவுன்புரய நிகழ்ச்சியினை தொடர்ந்தும் நடாத்திச் செல்ல முடிந்துள்ளமை மிகவும் மகிழ்ச்சிக்குரிய ஓர் விடயமாகும். எத்துகல்புர நகரின் நிகவெரட்டிய பிரதேசத்தினை மையமாகக்கொண்டு 09 ஆவது தடவையாகவும் நடாத்தப்படும் யொவுன்புர நிகழ்ச்சித்திட்டம் இந்நாட்டின் இளைஞர் யுவதிகளின் வாழ்க்கையினை மிளிரச் செய்வதற்கான உன்னத வாய்ப்பொன்றாக அமையும்.

கலாச்சாரம்,விளையாட்டு,ஊடகங்கள்,அரசியல், பொருளாதாரம், சமூகம் என்ற வகையில் பல்வேறுபட்ட துறைகளின் ஊடாக யொவுன்புர வாசிகளான இளைஞர் யுவதிகளின் ஆற்றல் விருத்திக்கும், நவீன உலக அறிவு தொழிநுட்பம் என்பவற்றுடன் அவர்களை இணைப்பதற்கும் பல்வேறு செயற்பாடுகள் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளமை பாராட்டப்பட வேண்டிய விடயங்களாகும்.

இலங்கையினை இந்து சமுத்திரத்தின் கேந்திர நிலையம் என்ற நிலையினை அடையச்செய்து, உலகின் எந்தவொரு அபிவிருத்தியடைந்த நாட்டுடனும் தோளோடு தோள் நின்று நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய இளைஞர் சமுதாயம் ஒன்றினைக் கட்டியெழுப்பும் தேசிய பொறுப்பு இன்று எம்மிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது. அதனை வெற்றியடையச் செய்வதற்காக அர்த்தமுள்ள முன்மொழிவுகள், கருத்துக்கள் முன்வைக்கப்படும் மேடை ஒன்றாகவும், இளைஞர் சமுதாயம் தமது வாழ்க்கையினை வெற்றிகொள்வதற்கான பிரவேச வாய்ப்புக்களை அடையாளங் காண்பதற்கான அவகாசங்களை வழங்கும் மார்க்கம் ஒன்றாகவும் யொவுன்புர நிகழ்ச்சி அமைய வேண்டும் என்பது எனது எதிர்பார்ப்பு ஆகும்.

இன, மத, அரசியல் பேதங்கள் இன்றி இளைஞர்களுக்கு சக்தி ஒன்றாக அமையும் வகையில் யொவுன்புர நிகழ்ச்சித் திட்டத்தினை வெற்றியடையச் செய்து கொள்வதற்காக தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், கருத்திட்ட முகாமைத்துவ, இளைஞர் நடவடிக்கைகள் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு மற்றும் இலங்கை இளைஞர் கழக சம்மேளனம் என்பவற்றின் மொத்த அலுவலர்கள் மேற்கொள்ளும் முயற்சியினைப் பாராட்டுகின்றேன்.

நாட்டின் நாலா பக்கங்களில் இருந்தும் யொவுன்புர நிகழ்ச்சியில் ஒன்று சேரும் ஏழாயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர் யுவதிகளுக்கு தனது சொந்தத் திறமைகளை வெளிக்காட்டுவதற்கு யொவுன்புர நிகழ்ச்சி சிறந்த வாய்ப்பு ஒன்றாக அமையட்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

ரனில் விக்ரமசிங்ஹ

பிரதமர்

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருத்திட்ட முகாமைத்துவ, இளைஞர் நடவடிக்கைகள் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், இலங்கை இளைஞர் கழக சம்மேளனம் என்பன ஒன்றிணைந்து, அப்போதைய, இளைஞர் விவகார அமைச்சர் கௌரவ ரனில் விக்ரமசிங்ஹ அவர்களின் வழிகாட்டலின் கீழ் இலங்கை நாட்டின் இளைஞர்களுக்கு இடையில் பரஸ்பர புரிந்துணர்வு, நட்புறவு, ஒற்றுமை, மத மற்றும் தேசிய நல்லிணக்கம் என்பவற்றினை ஏற்படுத்தும் உயரிய நோக்குடன் 1984 ஆம் ஆண்டின் புலசிதிபுர நகரில் யொவுன்புர நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. நாட்டின் இளைஞர் யுவதிகளுக்கு புதியதோர் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டாலும், மேற்படி கருத்திட்டத்தினை மீண்டும் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் "எதிர்காலம் ஆரம்பம்" என்ற தொனிப் பொருளின் கீழ் ஆரம்பிப்பதற்கு கௌரவ ரனில் விக்ரமசிங்ஹ அவர்களின் வழிகாட்டல் கிடைக்கப் பெற்றது. யொவுன்புர நிகழ்ச்சியினை நடாத்துதல் மொத்த இளைஞர் கழக வியாபாரத்திற்காகவும் மேற்கொள்ளப்பட்ட பாரியதோர் நடவடிக்கையாக நான் கருதுவதுடன், அவ்வாறான ஓர் நிகழ்ச்சிக்காக வாழ்த்துச் செய்தியினை வழங்கக் கிடைத்தமை நான் பெற்ற பாக்கியம் ஒன்றாகக் கருதுகின்றேன்.

இன,மத,குல பேதங்கள் இன்றி சகல இளைஞர்களும் ஒரே முகாமில் ஒத்துழைப்புடன் செயற்பாடுகளில் ஈடுபடுதல் மேற்படி கருத்திட்டத்தின் விஷேட இயல்பு ஒன்றாகும். அதற்கமைய சக வாழ்வுடனான இளைஞர் சமுதாயம் ஒன்றினைத் தோற்றுவிப்பதற்கு மேற்படி கருத்திட்டம் உறுதுணை ஒன்றினை வழங்குகின்றது.

எதிர்காலம் தொடங்கி விட்டது என்ற தொனிப் பொருளினை அடிப்படையாகக் கொண்டு 7000 இளைஞர் யுவதிகளின் பங்களிப்பில் வரலாற்றுச் சிறப்பு மிக்க எத்துகல்புரபுர நகரில் நடாத்தப்படும் யொவுன்புர நிகழ்ச்சியின் ஊடாக நவீன உலகினை வெல்லக்கூடிய சக்தி மிக்க இளைஞர் சமுதாயம் ஒன்றினை நாட்டிற்கு வழங்குவதற்கான அடித்தளம் ஒன்றாக அமையட்டும் எனப் பிரார்த்தனை செய்கின்றேன்.

சாகல ரத்னாயக்க,
பிரதமரின் அலுவலர் குழாம் தலைவர்/ கருத்திட்ட முகாமைத்துவ, இளைஞர் நடவடிக்கைகள் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர்,
கருத்திட்ட முகாமைத்துவ, இளைஞர் நடவடிக்கைகள் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**<u>கருத்திட்ட முகாமைத்துவ, இளைஞர் நடவடிக்கைகள் மற்றும் தெற்கு அபிவிருத்தி ராஜாங்க அமைச்சர் அவர்களின் வாழ்த்துச் செய்தி</u>**

கருத்திட்ட முகாமைத்துவ, இளைஞர் விவகார மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் இலங்கை இளைஞர் கழக சம்மேளனம் என்பன ஒன்றிணைந்து 7000 இளைஞர் யுவதிகளின் பங்களிப்பில் நிகவெரட்டிய நகரில் நடாத்தப்படும் யொவுன்புர - 2018 தேசிய இளைஞர்களின் முகாமிற்காக வாழ்த்துச் செய்தி ஒன்றினை வழங்கக் கிடைத்தமை தொடர்பாக பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

தேசத்தின் உயிர்நாடியாகக் கருதப்படும் நாட்டின் இளைஞர் சமுதாயம் ஒற்றுமை,சகவாழ்வு மற்றும் அபிவிருத்தி என்பவற்றிற்காக முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய காலகட்டத்தில் சகல இனங்களையும் பிரிதிநிதித்துவம் செய்யும் வகையில் இவ்வாறான ஒரு தேசிய இளைஞர்களின் முகாமினை ஏற்பாடு செய்தல் காலத்தின் தேவைப்பாடு ஒன்றாகக் நான் கருதுகின்றேன்.

சில நாட்கள் தொடரும் முகாமிடல் வாழ்க்கையில் இருந்து கிடைக்கப்பெறும் அனுபவங்களின் அடிப்படையில் சகல இனங்களுக்கும் இடையில், நிலவும் கலாச்சார மற்றும் சமய ரீதியான தொடர்புகளைப் புரிந்துகொண்டு ஒவ்வொரு இனங்களுக்கும் உரித்தான பழக்கவழக்கங்கள் மற்றும் மானிட சம்பிரதாயங்கள் தொடர்பாக கிடைக்கப்பெறும் யதார்த்த அறிவின் ஊடாக நாட்டின் சமாதானம் மற்றும் சகவாழ்வு என்பவற்றிற்காக இளைஞர் யுவதிகளுக்கு கைகோர்க்க முடியும் என நம்புகின்றேன்.

யொவுன்புர 2018 தேசிய இளைஞர் முகாமிற்காக இலங்கையின் நாலா பக்கங்களிலும் இருந்தும் வருகை தரும் சிங்களம்,தமிழ்,முஸ்லிம் மற்றும் ஏனைய இன இளைஞர் யுவதிகளுக்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன், 2018 யொவுன்புர தேசிய இளைஞர் முகாமினை வெற்றியடையச் செய்து கொள்வதற்காக பல வகையிலும் ஒத்துழைப்பினை வழங்கிய சகலருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பியசேன கமகே ,

கருத்திட்ட முகாமைத்துவ, இளைஞர் நடவடிக்கைகள் மற்றும் தெற்கு அபிவிருத்தி ராஜாங்க அமைச்சர்,

கருத்திட்ட முகாமைத்துவ, இளைஞர் நடவடிக்கைகள் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சுச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

கருத்திட்ட முகாமைத்துவ, இளைஞர் நடவடிக்கைகள் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் இலங்கை இளைஞர் கழக சம்மேளனம் என்பன ஒன்றிணைந்து 7000 இளைஞர் யுவதிகளின் பங்களிப்பில் நிகவெரட்டிய நகரில் நடாத்தப்படும் யொவுன்புர -2018 தேசிய இளைஞர்களின் முகாமிற்காக வாழ்த்துச் செய்தி ஒன்றினை வழங்கக் கிடைத்தமை மகிழ்ச்சிக்குரிய ஒரு விடயமாகும்.

எதிர்காலம் தொடங்கி விட்டது என்ற தொனிப் பொருளினை அடிப்படையாகக் கொண்டு நடாத்தப்படும் யொவுன்புர தேசிய இளைஞர் முகாமிற்காக நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் கலந்துகொள்ளும் இளைஞர் யுவதிகள் சில நாட்களாக கழிக்கும் முகாம் வாழ்க்கையின் ஊடாக அவர்கள் பெற்றுக்கொள்ளும் அனுபவங்கள் அவர்களுக்கு என்றுமே மறக்க முடியாத நினைவு ஒன்றாக அமையும்.

யொவுன்புர தேசிய இளைஞர் முகாமானது, கல்வி,ஆய்வுகள், விளையாட்டு,மதம் மற்றும் விவசாய நிகழ்ச்சித்திட்டங்கள் உட்பட இளைஞர் யுவதிகளின் தலைமைத்துவம் மற்றும் ஆளுமை ஆகிய குணவியல்புகளை எடுத்துக் காட்டுதல் மற்றும் தேசிய சகவாழ்வினை நோக்காகக்கொண்ட தேசிய இளைஞர்களின் முகாம் ஒன்றாக அமைவதுடன், மேற்படி இளைஞர் முகாமிற்காக பங்குபற்றும் இளைஞர்கள் அதன் ஊடாக எதிர்பார்க்கும் பயன்களைப் பெற்றுக்கொள்வதில் கவனம் செலுத்துவார்கள் என எதிர்பார்க்கின்றேன்.

மேற்படி தேசிய இளைஞர்களின் முகாமினை வெற்றியடையச் செய்வதற்காக ஒத்துழைப்பினை வழங்கிய சகலருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதுடன், யொவுன்புர நிகழ்ச்சித்திட்டம் சிறந்த முறையில் வெற்றியடையட்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

கே.டீ.எஸ்.ருவன் சந்திர,
செயலாளர்,
தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பணிப்பாளர் நாயகம் அவர்களின் வாழ்த்துச் செய்தி

கருத்திட்ட முகாமைத்துவ, இளைஞர் நடவடிக்கைகள் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், இலங்கை இளைஞர் கழக சம்மேளனம் என்பன ஒன்றிணைந்து 09 ஆவது தடவையாகவும் ஏற்பாடு செய்யும் யொவுன்புரய - 2018 நிகழ்ச்சித்திட்டத்திற்காக இதயபூர்வமான மகிழ்வுடன் வாழ்த்துச் செய்தியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நாலா பக்கங்களிலும் சிதறிப் பரந்து காணப்படும் இளைஞர் யுவதிகளுக்கு தாம் கழிக்கும் நாளாந்த வாழ்க்கை முறைகளில் இருந்து விடுபட்டு நாட்டின் பல்வேறு திசைகளில் இருந்தும் வருகை தரும் பல்வேறு கலாச்சாரங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இளைஞர் யுவதிகளை அடையாளங் கண்டு அவர்களுக்கு இடையே கருத்துக்களைப் பரிமாற்றம் செய்துகொள்ளவும்,பல்வேறு இனங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் இளைஞர் யுவதிகளுக்கு இடையில் ஒத்துழைப்பு மற்றும் நல்லிணக்கம் என்பவற்றினை விருத்தி செய்யவும், அவர்களுக்கு இடையில் நட்பு மற்றும் ஒற்றுமை என்பவற்றினை விருத்தி செய்வதற்கும், வள முகாமைத்துவத்தின் ஊடாக சவால்களை வெற்றிகொள்ளும் அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளவும், யொவுன்புர நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக வாய்ப்புக் கிடைக்கும் என நான் எண்ணுகின்றேன்.

1984 ஆம் ஆண்டில் அப்போதைய இளைஞர் விவகார மற்றும் தொழில் வாய்ப்புக்கள் அமைச்சராகக் கடமையாற்றிய தற்போதைய பிரதமர் ரணில் விக்ரமசிங்ஹ அவர்களின் எண்ணக்கருவிற்கு ஏற்ப உருவாக்கப்பட்ட யொவுன்புர நிகழ்ச்சித்திட்டத்தினை நாம் நவீன இளைஞர்களுக்கு வழங்குவது "எதிர்காலம் தொடங்கி விட்டது" என்ற தொனிப்பொருளில் ஆகும். யொவுன்புர நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்ட 80 ஆம் தசாப்தங்களில் இருந்த இளைஞர்களிலும் பார்க்க தற்கால இளைஞர்கள் மாற்றமடைந்து உள்ளதுடன், அதற்கமைய புதிய தொழிநுட்ப உலகில் காணப்படும் வாய்ப்புக்களை வெற்றிகொள்வதற்காக கல்வி மற்றும் அறிவு என்பவற்றினைப் பெற்றுத்தரும் கருத்தரங்குகள்,கண்காட்சிகள்,செயன்முறைப் பயிற்சிச் சந்தர்ப்பங்கள்,கலாச்சாரக் கண்காட்சிகள்,இணையத்தள வசதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகமாக ஒழுங்கமைக்கப்பட்டு இருத்தல் என்பன யொவுன்புர எண்ணக்கருவின் விருத்தியடைந்த ஒரு கட்டமாக நான் காண்கின்றேன்.

விஷேடமாக யொவுன்புரய, இளைஞர்களுக்கு மாத்திரம் கிடைக்கப்பெறும் ஒரு வரப்பிரசாதமாக நான் கருதுவதில்லை என்பதுடன், அது மொத்த இளைஞர்களிக் அபிவிருத்திக்காக சகல நிறுவனங்களினதும் பங்களிப்புடன் நிறைவேற்றப்படும் பொறுப்பு வாய்ந்த ஒரு செயற்பாடாகும். அவ்வாறே யொவுன்புர நிகழ்ச்சி நடைபெறும் பிரதேசங்களில் வீதிகளை அபிவிருத்தி செய்தல், வாழ்வாதார விருத்தி, மின்சாரம் மற்றும் நீர் வசதிகளை வழங்குதல், பாடசாலைகள் மற்றும் வைத்தியசாலைகள் என்பவற்றை புதுப்பித்தல்,வீடுகளை அமைத்தல் போன்ற பொதுமக்களின் வரவேற்பைப் பெற்ற உன்னத பணி ஒன்று என்ற நிலையினையும் இது அடைந்துள்ளது.

அதற்கமைய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த எத்துகல்புர இராசதானி நகரில் நிகவெரட்டிய பிரதேசத்தினை மையமாகக்கொண்டு 09 ஆவது தடவையாகவும் ஏற்பாடு செய்யப்படும் இந்த யொவுன்புர நிகழ்ச்சித்திட்டத்தினை வெற்றியடையச் செய்வதற்காக உதவிகளை வழங்கிய சகலருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், நாட்டின் எதிர்காலத்தினை சௌபாக்கியத்தினை நோக்கிக் கொண்டுசெல்லும் உன்னதமான பயணத்திற்காக இலங்கை நாட்டின் இளைஞர்களுக்கு ஆற்றல்,சக்தி மற்றும் ஆக்கபூர்வத்தன்மை என்பவற்றினைப் பெற்றுக்கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டம் ஒன்றாக இந்த நிகழ்ச்சி அமையட்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

சட்டதரணி டபிள்யு.ஜீ.எஸ்.எரந்திக

தலைவர்/பணிப்பாளர் நாயகம்,

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்.

மஹரகம.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை இளைஞர் கழக சம்மேளனத்தின் செயலாளர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

எதிர்காலம் ஆரம்பம் என்ற தொனிப்பொருளினை அர்த்தமுள்ளதாக்கிய வகையில் நாடு பூராகவும் பரவிக் காணப்படும் சிங்களம், தமிழ், முஸ்லிம் இளைஞர்களுக்கு இடையில் மத மற்றும் இன ரீதியான நல்லிணக்கம், நட்புறவு, ஒற்றுமை மற்றும் பரஸ்பர புரிந்துணர்வு என்பவற்றினை ஏற்படுத்தும் உயர்ந்த அபிலாஷையில் எத்துகல்புர நகரில் நடாத்தப்படும் யொவுன்புர 2018 நிகழ்ச்சித்திட்டத்திற்காக வாழ்த்துச் செய்தியினை வழங்க முடிந்துள்ளமையினை நான் பெற்ற அதிஷ்டமாகக் கருதுகின்றேன்.

1984 ஆம் ஆண்டில் புலசித்திபுர நகரிலிருந்து தொடங்கி யொவுன்புர நிகழ்ச்சித்திட்டம் 1989 ஆம் ஆண்டில் கிராந்துரு கோட்டையில் நடைபெற்ற யொவுன்புர நிகழ்ச்சித் திட்டத்துடன் முடிவடைந்தது. அவ்வாறான ஒரு பின்னனியில் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் மாண்புமிகு பிரதமர் ரனில் விக்ரமசிங்ஹ அவர்களின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களின் கீழ் மீண்டும் யொவுன்புர நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 2016 ஆம் ஆண்டில் மாத்தளை சீகிரியா நகரிலும் 2017 ஆம் ஆண்டில் திருகோணமலை நகரிலும் நடாத்தப்பட்டமை ஒட்டு மொத்த இளைஞர் கழக இளைஞர்களினதும் அபிவிருத்திக்காக எடுக்கப்பட்ட பாரியதோர் நடவடிக்கையாக நான் காண்கின்றேன்.

இம்முறை எத்துகல்புர நகரில் ஒன்றுகூடும் இலங்கை இளைஞர் கழக சம்மேளனத்தினைச் சுற்றி இணைந்துள்ள இளைஞர் கழகத்தின் இளைஞர்களுக்கு ஒற்றுமை, நட்புறவு, ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி எனும் அபிமானமிக்க தொனிப்பொருளினை தத்துவமாகக்கொண்ட நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கங்களை வெற்றியடையச் செய்துகொள்வதற்கு சக்தியும் மற்றும் தைரியமும் கிடைக்கட்டும் எனப் பிரார்த்தனை செய்கின்றேன்.

இப்பணியினை வெற்றியடையச் செய்வதற்காக சக்தியினையும் ஊக்கத்தினையும் வழங்கிய, கௌரவ பிரதமர் அவர்களுக்கும், கருத்திட்ட முகாமைத்துவ, இளைஞர் நடவடிக்கைகள் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் உட்பட அலுவலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழாத்திற்கும், இளைஞர்களின் வழிகாட்டியாகிய தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பணிப்பாளர் நாயகம்/ கௌரவ தலைவர் மற்றும் அலுவலர் குழாத்திற்கும் இலங்கை இளைஞர் கழக சம்மேளனத்தின் 2017-2019 தேசிய சம்மேளனத்தின் சகல சகோதர சகோதரிகளுக்கும் மற்றும் மேற்படி அலுவலர் குழாத்திற்கும் சகல இளைஞர் கழக மாவட்ட சம்மேளனம், பிரதேச சம்மேளனங்களின் தலைவர் தலைவிகளுக்கும் மற்றும் இந்த யொவுன்புர நிகழ்ச்சித் திட்டத்துடன் இணைந்துள்ள சகல இளைஞர் யுவதிகளுக்கும் எனது இதய பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஷெஹான் கோஷில கன்னங்கர

செயலாளர்,

இலங்கை இளைஞர் கழக சம்மேளனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னுரை

இலங்கை நாட்டில் வாழும் சகல இனங்களுக்கும் இடையில் பரஸ்பர புரிந்துணர்வு, ஒத்துழைப்பு என்பவற்றுடன் கூடிய நல்லாட்சியினை நிறுவுவதற்காக தேசிய இளைஞர் சேவைகள் மன்றமானது, இளைஞர் சமுதாயத்தினரை சகல ஆற்றல்களினாலும் வலுவூட்டுவதற்காக ஏராளமான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் 1984 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட யொவுன்புர நிகழ்ச்சி பிரதான நிகழ்ச்சித்திட்டம் ஒன்றாகும்.1984 தொடக்கம் 1989 வரை தொடர்ச்சியாக 06 யொவுன்புர நிகழ்ச்சித்திட்டங்கள் இளைஞர் யுவதிகளின் பங்களிப்புடன் மிகவும் வெற்றிகரமான முறையில் நடாத்தப்பட்டது. 2015 ஆம் ஆண்டில் புதிய அரசாங்கம் ஆட்சியினைப் பொறுப்பேற்றதன் பின்னர் யொவுன்புர நிகழ்ச்சித்திட்டத்தின் காரணகர்த்தாவாகிய கௌரவ பிரதமர் ரனில் விக்ரமசிங்ஹ அவர்கள் மீண்டும் யொவுன்புர நிகழ்ச்சியினை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டமை மிகவும் பாராட்டப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

அதற்கமைய, கௌரவ பிரதமர் அவர்களின் ஆலோசனைகளின் கீழ் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர்/ பணிப்பாளர் நாயகம் சட்டதரணி டபிள்யு.ஜீ.எஸ்.எரந்திக அவர்களின் வழிகாட்டலின் கீழ் ஏழாவது யொவுன்புர நிகழ்ச்சித்திட்டம் 2016 ஆம் ஆண்டில் சீகிரியாவிலும், எட்டாவது யொவுன்புர நிகழ்ச்சித்திட்டம் 2017 ஆம் ஆண்டில் திருகோணமலையிலும் மிகவும் வெற்றிகரமான முறையில் நடாத்தப்பட்டது. இம்முறை ஒன்பதாவது யொவுன்புர நிகழ்ச்சித்தட்டம் நிகவெரட்டிய பிரதேசத்தில் 2018 மார்ச் மாதம் 28 ஆந்திகதி தொடக்கம் ஏப்பிறல் மாதம் 01 ஆம் திகதி வரை 7000 இளைஞர் யுவதிகளின் பங்களிப்பில் வதிவிட நிகழ்ச்சியாக நடாத்துவதற்கு சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

அங்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு ஒத்துழைப்பினை வழங்கும் அரசியல் தலைமைத்துவம் மற்றும் சகல அரச மற்றும் தனியார் நிறுவனங்கள்,அரச சார்பற்ற நிறுவனங்கள் உட்பட சகல அலுவலர்களினதும் ஒத்துழைப்புடனும் மற்றும் இளைஞர் யுவதிகளின் பங்களிப்பிலும் இந்த யொவுன்புர நிகழ்ச்சித்திட்டம் வெற்றிகரமான ஏற்பாடு செய்வதற்கு முடிந்துள்ளமை தொடர்பாக மிகவும் மகிழ்ச்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைகின்றேன். மேற்படி நிறுவனங்கள், ஒழுங்கமைப்புக்கள் உட்பட சகல அலுவலர்கள் மற்றும் இளைஞர் தலைவர்களின் ஒத்துழைப்பினை மிகவும் நன்றியுடன் நினைவு கூறுவதுடன் மேற்படி சகலரினதும் ஒத்துழைப்புடன் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அலுவலர்கள், இலங்கை இளைஞர் கழக சம்மேளனத்தின் தேசிய சம்மேளனத்தின் பிரதிநிதிகள், இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் யொவுன்புர நகர சபை உறுப்பினர்களின் நெறிப்படுத்தலின் கீழ் நிகவெரட்டிய யொவுன்புர நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்படுகின்றது.

யொவுன்புர நிகழ்ச்சித்திட்டம் தேசிய நல்லிணக்கம் மற்றும் புலனெறி மரபுமுறைமை என்பன தொடர்பாக இளைஞர் யுவதிகளுக்கு இடையில் பரஸ்பர புரிந்துணர்வு,ஒற்றுமை மற்றும் சகவாழ்வு என்பவற்றினை ஏற்படுத்துதல் என்பன தொடர்பாக வெளிநாட்டு இளைஞர் யுவதிகளுடன் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளல், தகவல் தொழிநுட்பம் மற்றும் ஊடகங்களின் பாவனை என்பவற்றினை விரிவுபடுத்தல் தேசிய கொள்கைகள் மற்றும் அபிவிருத்தி என்பன தொடர்பாக இளைஞர்களின் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகள் என்பவற்றினைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னோடிகளாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஆயத்தம் செய்தல் ஆகிய 06 நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டு இம்முறை யொவுன்புர நிகழ்ச்சித்திட்டம் நிகவெரட்டியப் பிரதேசத்தில் அபிமானத்துடன் நடாத்தப்படவுள்ளது.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த எத்துகல்புர இராசதானியின் நிகவெரட்டியப் பிரதேசத்தில் நடாத்தப்படும் யொவுன்புர நிகழ்ச்சித்திட்டத்தினை இளைஞர் சமுதாயத்தினரிற்கு வழங்குவதற்காக கருத்திட்ட முகாமைத்துவ,இளைஞர் விவகார மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு,ஏனைய அமைச்சுக்கள் மற்றும் ஏனைய திணைக்களங்கள், நிறுவனங்கள்,அலுவலர்கள் ஆகியோரிடமிருந்து கிடைக்கப் பெற்ற ஒத்துழைப்பினை மிகவும் உயர்ந்ததாகக் கருதுகின்றேன். யொவுன்புர நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்யும்போது தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மொத்த அலுவலர் குழாம், இலங்கை இளைஞர் கழக சம்மேளனம் மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யொவுன்புர நகர சபை என்பன வழங்கிய ஒத்துழைப்பினை நன்றியுடன் நினைவு கூறுகின்றேன்.

யொவுன்புர கை நூலினைத் தயாரிக்கும்போது தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் திட்டமிடல் மற்றும் அபிவிருத்திப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் உள்ளிட்ட அலுவலர் குழாத்தினர் ஆற்றிய கடமைப் பொறுப்புக்களை மிகவும் பாராட்டுவதுடன் யொவுன்புர நிகழ்ச்சியினை வெற்றியடையச் செய்வதற்காக பங்குபற்றும் இளைஞர் யுவதிகளுக்கு இந்தக் கைநூல் மிகவும் உறுதுணையாக அமையும் என எண்ணுவதுடன் 2018 நிகவெரட்டிய யொவுன்புர நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் இளைஞர் சமுதாயத்தின் அபிலாஷைகளை வெற்றிகரமான வகையில் நிறைவேற்றிக்கொள்ளும் ஆற்றல் கிடைக்கட்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

சமன் அபேரத்ன,
உதவிப் பணிப்பாளர்,
விஷேட கருத்திட்டப் பிரிவு,
தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளடக்கம்


இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் மாண்புமிகு ஜனாதிபதி அவர்களின்

வாழ்த்துச்செய்தி ........................................ III

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் கௌரவ பிரதமர் அவர்களின்

வாழ்த்துச்செய்தி ........................................ IV

கருத்திட்ட முகாமைத்துவ, இளைஞர் நடவடிக்கைகள் மற்றும் தெற்கு அபிவிருத்தி

அமைச்சரின் வாழ்த்துச் செய்தி........................................ V

கருத்திட்ட முகாமைத்துவ, இளைஞர் நடவடிக்கைகள் மற்றும் தெற்கு அபிவிருத்தி

இராஜாங்க அமைச்சரின் வாழ்த்துச் செய்தி ........................................ VI

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சரின்

வாழ்த்துச் செய்தி ........................................ VII

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பணிப்பாளர் நாயகம் அவர்களின்

செய்தி ........................................ VIII

இலங்கை இளைஞர் கழக சம்மேளனத்தின் செயலாளர் அவர்களின் செய்தி

முன்னுரை ........................................ XII

உள்ளடக்கம் ........................................ XV

1. நிகழ்ச்சித்திட்ட அறிமுகம்........................................ 01

1.1. யொவுன்புர எண்ணக்கரு........................................ 01

1.2. இம்முறை யொவுன்புர நிகழ்ச்சியின் நோக்கங்கள் ........................................ 06

1.3. யொவுன்புர ஏற்பாட்டுக் கட்டமைப்பு........................................ 07

1.3.1.தலைமைக் கடமைப் பொறுப்பு அலுவலர்........................................ 07

1.3.2. யொவுன்புர நகர சபை ........................................ 07

2. அடிப்படை ஏற்பாட்டு நடவடிக்கைகள்........................................ 10

2.1. முன்னோடிக் குழுக்கள் ........................................ 10





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.2. கலந்துகொள்பவர்களைப் பதிவு செய்தல் .................................................. 12

2.3. கலந்துகொள்பவர்களுக்கான கூட்டிணைவு................................................... 14

2.4. முன் பிரச்சார நடவடிக்கைகள் ....................................................... 15

2.5. யொவுன்புர கைநூல்,கணக்கெடுப்பு மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை

மதிப்பீடு செய்தல் .......................................................................... 16

3. முகாம்களின் திடல் செயற்பாடுகள்........................................................ 18

3.1. அறிமுகம் ......................................................................................... 18

3.2. கல்வி நிகழ்ச்சிகள் ............................................................................ 18

3.3. விளையாட்டு நிகழ்ச்சிகள் ................................................................ 22

3.4. கலாச்சாரப் போட்டிகள் மற்றும் நிகழ்ச்சிகள்........................................... 28

3.5. சிரமதான நிகழச்சிகள் ........................................................................ 32

3.6. மரம் நடுகை ...................................................................................... 32

3.7. ஆய்வு நிகழ்ச்சிகள் ............................................................................ 33

3.8. விவசாய விற்பனை கூடங்கள் ............................................................ 33

3.9. தொழில் முயற்சி,வழிகாட்டல் மற்றும் ஆலோசனை நிகழ்ச்சித் திட்டங்கள் .. 34

3.10 வர்த்தகக் கண்காட்சி மற்றும் களியாட்டம்............................................... 35

3.11 தொழில் சந்தை,தொழில்சார் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை நிகழ்ச்சித்

திட்டங்கள்........................................................................................... 36

3.12 யொவுன்புர புகைப்படப் போட்டித்தொடர் மற்றும் கண்காட்சி.................. 36

3.13. விஷேட வலயங்கள் ............................................................................ 38

4. முகாம்களின் பொது வசதிகள் ................................................................ 46

4.1. நீர்ப் பாவனை ..................................................................................... 46

4.2. மின் பாவனை ..................................................................................... 47



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4.3. கூடாரங்கள் .................... 47

4.4. சுகநலன் பேண் நடவடிக்கைகள் .................... 48

4.5. யொவுன்புர வளாகத்தினை சுத்தம் செய்யும் நடவடிக்கைகள் .................... 49

4.5. வைத்திய மற்றும் முதலுதவிகள் .................... 49

5. சிறந்த மாவட்டத்தினைத் தெரிவு செய்தல் .................... 51

6. பொது ஆலோசனைகள் .................... 52

6.1. சிரமதானங்கள் மற்றும் பகுப்பாய்வு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்பவர்களுக்கான அறிவுறுத்தற் கோவை .................... 54

7. பாதுகாப்பு மற்றும் ஒழுக்கம் தொடர்பான அறிவுருத்தல்கள் .................... 54

7.1. முகாமிடல் வளாகத்தின் உள்ளக பாதுகாப்பு நடவடிக்க.................... 57

7.2. பாதுகாப்புத் துறைகளின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் .................... 58

நாளாந்த நேர அட்டவணை .................... 60

யொவுன்புர, 2018 தேசிய நிகழ்ச்சித் திட்டத்துடன் இணைந்த வகையில் இளைஞர்களின் பங்களிப்பில் ஏனைய நிறுவனங்கள் மேற்கொண்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் .................... 74

நினைவுக் குறிப்புக்கள் .................... 79



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. நிகழ்ச்சித்திட்ட அறிமுகம்

### 1.1. யொவுன்புர எண்ணக்கரு

"இளைஞர் அபிவிருத்தி நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தும்போது இளைஞர் யுவதிகளுக்காக சுயாதீன அமைப்பொன்றின் அவசியத்தை அடையாளங் கண்ட தற்போதைய கௌரவ பிரதமர் ரனில் விக்ரமசிங்ஹ அவர்கள் கல்வி, இளைஞர் விவகார மற்றும் தொழில்வாய்ப்புக்கள் கௌரவ அமைச்சராக 1979 ஆம் ஆண்டில் இளைஞர் கழக வியாபாரத்தினை ஆரம்பித்து வைத்தார்."

இளைஞர் கழக வியாபாரத்தின் ஊடாக இளைஞர் யுவதிகளுக்கு தலைமைத்துவம் தொடர்பான செயற்பாட்டு அனுபவங்களைப் பெற்றுக்கொண்டு தமது ஆளுமை விருத்தி,விளையாட்டுக்கள், கலாச்சார மற்றும் கலை, கல்வி, தொழில் முயற்சியாண்மை, தொழில் சார் பயிற்சிகளுக்கான வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வந்தது. இவ்வாறு இளைஞர்களுக்கான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் பரவிச் செல்லும்போது உள்நாட்டில் மாத்திரமன்றி சர்வதேச மட்டத்திலும் இளைஞர் யுவதிகள் ஏராளமான எண்ணிக்கையானோர் தேசிய இளைஞர் சேவைகள் சபையினைச் சுற்றி இணைந்துகொண்டனர்.

இளைஞர் யுவதிகளுக்கு ஒன்றாக இணைந்து தத்தமது கருத்துக்களை பரிமாறிக்கொள்வதற்கும்,பல்வேறு இனத்தவர்கள் அங்கத்துவம் வகிக்கும் இளைஞர் யுவதிகளுக்கிடையில் ஒத்துழைப்பு மற்றும் நல்லிணக்கத்தினை விருத்தி செய்வதற்கும் ,அவர்களுக்கிடையில் நட்புறவினையும் மற்றும் ஒற்றுமையினையும் விருத்தி செய்வதற்கும்,வள முகாமைத்துவத்தின் ஊடாக சவால்களை வெற்றி கொள்ளும் அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதற்கும்,ஒழுக்கம் மற்றும் கீழ்ப்படிவு தொடர்பாக சுய புரிந்துணர்வொன்றினை பெற்றுக்கொள்வதற்கும்,பல்வேறு ஆற்றல்களை விருத்தி செய்துகொள்ளவும் மற்றும் அவற்றினை மதிப்பீடு செய்வதற்கும் ,தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்குரிய கொள்கைகளை உருவாக்கும்போது கலந்துரையாடல்களின் மூலம் இளைஞர்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்கும்,1984 ஆம் ஆண்டில் கல்வி இளைஞர் விவகார மற்றும் தொழில்வாய்ப்புக்கள் கௌரவ அமைச்சர் ரனில் விக்ரமசிங்ஹ அவர்களின் எண்ணக்கரு ஒன்றாகிய "யொவுன்புரய" நிகழ்ச்சித்திட்டம் உருவாகியது.1984 ஆம் ஆண்டு தொடக்கம் 1988 ஆம் ஆண்டு வரை முறையே பொலன்னறுவை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளியாப்பிட்டிய,மாத்தளை,அனுராதபுரம், பண்டாரவளை மற்றும் கிராந்துருகோட்டே ஆகிய யொவுன்புர நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டதோடு,1989 ஆம் ஆண்டின் பின்னர் 2016 ஆம் ஆண்டில் மீண்டும் ஆரம்பிக்கப்படும் யொவுன்புர நிகழ்ச்சித்திட்டம் ஐந்து பிரதான நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு "எதிர்காலம் தொடங்கி விட்டது" என்ற தொனிப் பொருளின் கீழ் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சீகிரியா நகரில் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை வரலாற்றில் கேந்திர நிலையம் ஒன்றாக முக்கியத்துவம் பெறும் திருகோணமலையினை மையமாகக் கொண்டு எட்டாவது யொவுன்புர நிகழ்ச்சி 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டது.

இலங்கை நாட்டு இளைஞர்களின் அபிலாஷைகளுக்கு உறுதுணை வழங்கும் வகையில் ஒன்பதாவது யொவுன்புர நிகழ்ச்சித்திட்டம் 2018 ஆம் ஆண்டில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகவெரட்டிய (எத்துகல்புர) பிரதேசத்தினை மையமாகக்கொண்டு நடாத்துவதற்கான நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளன. இளைஞர் கழகத்தினை சுற்றி இணைந்திருக்கும் இலங்கைய இளைஞர் யுவதிகளுக்கு புதியதோர் அனுபவத்தினை வழங்கி பல்வேறு வகையான கலாச்சார அடையாளங்களுக்கு உரிமைகோரும் பல்வேறு இளைஞர் குழுக்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும்,கல்வி,அழகியல் கலை மற்றும் தொழில் சார் வாய்ப்புக்களை இந்த யொவுன்புர நிகழ்ச்சியில் பெற்றுக்கொள்ளவும் மீண்டும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. மேலும் யொவுன்புர நகர சபையின் ஊடாக பாரியளவிலான நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தவும் மற்றும் தீர்மானங்களை மேற்கொள்ளவும் இளைஞர் குழுவிற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.இங்கு அனுபவமிக்க அலுவலர்களுடனும் மற்றும் ஏனைய நிறுவனங்களுடனும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கும் அவர்களுக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

தேசிய நிகழ்ச்சித்திட்டம் ஒன்றாக யொவுன்புர நிகழ்ச்சித் திட்டத்தில் சிரமங்களையும் மற்றும் சவால்களையும் வெற்றிகொள்வதற்கு சந்தரப்பத்தினைப் பெற்று குறிப்பிட்டளவான வளத்தினைக்கொண்டு தமது நாளாந்த செயற்பாடுகள் மற்றும் திறன்களை விருத்தி செய்துகொள்ளல் என்பவற்றிற்காக சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்துகொள்ளும் சந்தர்ப்பத்தினையும் வழங்கியுள்ளது.7,000 இளைஞர் யுவதிகளின் பங்களிப்பில் நடாத்தப்படும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் தமது ஒழுக்கம் மற்றும் கீழ்ப்படிவு என்பவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த முறையில் சமூகத்திற்கு எடுத்துக்காட்டுவதற்கும் இலங்கை நாட்டு இளைஞர்களின் பெறுமதியினை சமூக மயப்படுத்துவதற்கும் இது ஓர் அரிய சந்தர்ப்பமாகும்.

கடந்த யொவுன்புர நிகழ்ச்சித்திட்டத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிகவும் கடினமான சிரமங்களைத் தவிர்த்துக்கொள்வதுடன் நவீன தொழிநுட்பத்தினைச் சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கும் பல்வேறு சந்தர்ப்பங்கள் தோன்றியுள்ளன. அதற்காக பல்வேறு செயன்முறைச் சந்தர்ப்பங்கள் ஏராளமாகக் காணப்படுகின்றன.

நிகழ்ச்சித்திட்டம் நடைபெறும் பிரதேசத்தில் தமது குழுவிற்காக ஏற்கும் பொறுப்புக்களை ஒரு நாள் தமது சமூகத்தின் பொறுப்புக்களை சிறந்த முறையில் ஏற்பதற்கான ஒரு பயிற்சியாக அமையும்.மேலும், மரம் நடுதல்,ஆய்வுகள்,சிரமதானங்கள் ஆகிய நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் தேசிய அபிவிருத்திப் பணிக்கு இளைஞர் கழகம் வகிக்கும் பங்களிப்பு மென்மேலும் அதிகரிக்கும். சூழலுடன் கூருணர்வுடைய இளைஞர் சமுதாயம் சமூக ஒழுங்கமைப்புடன் இங்கு நடவடிக்கைகளை மேற்கொள்வர். தேசிய இளைஞர் அபிவிருத்திச் செயற்பாட்டில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் இலங்கை இளைஞர் கழக சம்மேளன்ம் என்பன முன்னனி வகித்து செயற்படுவதுடன் ஏனைய நிறுவனங்கள் மற்றும் அலுவலர்கள் ஆகியோரின் உச்ச பங்களிப்பு மற்றும் உதவி என்பவற்றை இந்நிகழ்ச்சித்திட்டத்தில் மிகவும் கூடியளவில் வழங்குவதுடன் அதனூடாக மொத்த சமூக அமைப்பிலும் இந்நிலைமையினை மென்மேலும் பரவச் செய்தலும் நடைபெறும்.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் தேவையான சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளும்போது குறிப்பிட்ட அரச நிறுவனங்கள் சிறந்த புரிந்துணர்வுடனும் மற்றும் பிணைப்புடனும் ஒன்றிணைந்து செயற்படுவதுடன் அது மொத்த தேசத்திற்கும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு சிறந்ததோர் எடுத்துக்காட்டினை வழங்குகின்றது.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தினை நடாத்துவதற்கு இணைந்த வகையில் குருணாகல் மாவட்டத்தின் நிகவெரட்டிய பிரதேசத்திலும், அவ்வாறே வடமேல் மாகாணத்திலும் பல்வேறு வகையான ஒழுங்கமைக்கப்பட்ட பணிகள் பெருமளவில் மேற்கொள்ளப்படும். தொழில்சார் பயிற்சி நிறுவனங்கள், ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்புடைய பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் ஒருங்கிணைப்பின் கீழ் செயற்படுத்தப்படும். அது வெறுமனே இளைஞர்களின் அபிவிருத்திக்கு மாத்திரம் வரையருக்கப்படாது பிரதேசத்தில் முதியவர்களின் ஆழமான கவனத்தினை ஈர்ப்பதற்கும் காரணமாய் அமையும் ஓர் விடயமாகும்.

யொவுன்புர நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும் இளைஞர் யுவதிகள் தமது நாளாந்த நுகர்விற்குத் தேவையான சகலவற்றையும் மற்றும் முகாம்களின் செயற்பாட்டிற்குத் தேவையான பெரும்பாலான வளங்களையும் தாமாகவே பெற்றுக்கொள்வர்.இங்கு கிராமத்திலுள்ள இளைஞர் கழகம், பிரதேச மற்றும் மாவட்ட சபைகள் என்பவற்றின் இளைஞர் யுவதிகளின் தலைமைத்துவத்தினை சிறந்த முறையில் எடுத்துக்காட்டி மாவட்டமொன்றாக நிகழ்ச்சித்திட்டத்தில் போட்டித் தன்மையுடன் செயற்பட நேரிடும். அதனூடாக தலைமைத்துவ விருத்தி, போட்டித் தன்மைக்கு முகங்கொடுக்கும் ஆக்க பூர்வத் தன்மையான சந்தர்ப்பம் என்பன கிடைக்கப்பெறும். அதாவது தமது குழு முகங்கொடுக்கும் பிரச்சினைகள் மற்றும் சாவல்களுக்கு ஒன்றிணைந்து முகங்கொடுக்கவும் வலுவான ஓர் குழுவாக செயற்படவும் பயிற்சிகள் கிடைக்கும்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் இலங்கை இளைஞர் கழக சம்மேளனம் என்பன ஒன்றிணைந்து தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் வழிகாட்டலின் கீழ் யொவுன்புர நிகழ்ச்சித் திட்டத்தினை நடாத்துவதன் ஊடாக மேற்படி மூன்று நிறுவனங்கள் மீதும் பாரியளவில் பொதுமக்களின் கவனம் ஈர்க்கப்பட முடிகின்றது. ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது இதனூடாக விரிவானதொரு பெறுபேற்றினை எதிர்பார்க்க முடிகின்றது.

யொவுன்புர நிகழ்ச்சித் திட்டத்தின் உள்ளடக்கத்தினை, எண்ணக்கரு சார்பில் மிகவும் கூடியளவில் பொருளுடையதாக்குவதற்காக கௌரவ பிரதமர் ரனில் விக்ரமசிங்ஹ அவர்களின் தேசிய தலைமைத்துவமானது தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு பாரியதோர் சக்தியாகும். இந்த நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக வழிகாட்டலினை வழங்கும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் ராஜாங்க அமைச்சர் நிரோசன் பெரேரா அவர்கள் மற்றும் அவ்வாறே அமைச்சின் செயலாளர் கே.டீ.எஸ் ருவன் சந்திர அவர்கள் மற்றும் இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கு மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு தலைமை வகிக்கும் தலைவர்/ பணிப்பாளர் நாயகம் சட்டதரணி டபிள்யு.ஜீ.எஸ்.எரந்திக வெலிஅங்கே அவர்கள் உட்பட இந்த அமைச்சினதும் மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினதும் வினைத்திறன் மிக்க அலுவலர் குழாமும் இந்நிகழ்ச்சித்திட்டதிற்கு பாரியதோர் சக்தி ஆகும்.

ஜகத் அதிகாரி

பணிப்பாளர் (அபிவிருத்தி)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.2. இம்முறை யொவுன்புர நிகழ்ச்சியின் நோக்கங்கள்

முகாம்களில் வசிக்கும் அனைவருக்கும் மற்றும் ஏற்பாட்டுப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் சகலருக்கும் தனியாள் அல்லது குழுக்கள் ரீதியான நோக்கங்கள் உள்ளன.தமது நோக்கங்களின் ஊடாக நிறுவன ரீதியான நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேற்படி யொவுன்புர நிகழ்ச்சியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பல்வேறு வகையான செயற்பாடுகளின் மூலம் தங்களுக்கு வழங்கப்படும் வாய்ப்பின் ஊடாக தங்களது தனியாள் மற்றும் குழு ரீதியான நோக்கங்கள் நிறைவேற்றப்படுவதன் மூலம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள 06 நிறுவன ரீதியான நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்

I. தேசிய நல்லிணக்கம் மற்றும் இணக்கப்பாடு பற்றிய புரிந்துணர்வு மற்றும் அனுபவங்கள் என்பவற்றை பரிமாறிக்கொள்வதற்கான வாய்ப்பினை வழங்கல்.

II. பரஸ்பர புரிந்துணர்வு விருத்திக்கு உதவும் வகையில் கல்வி,விளையாட்டு,கலாச்சாரம் மற்றும் பொழுதுபோக்கு போன்ற நிகழ்ச்சிகளில் ஒற்றுமையுடனும் சகவாழ்வுடனும் ஈடுபடும் சந்தர்ப்பத்தினை வழங்குதல்.

III. இளைஞர்களின் அபிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக வெளிநாட்டு இளைஞர் யுவதிகளுடன் அனுபவங்களைப் பரிமாறிக் கொள்ளும் சந்தர்ப்பத்தினைப் பெற்றுக் கொடுத்தல்.

IV. இளைஞர்களின் அபிவிருத்தியில் தகவல் தொழிநுட்பத்தினையும் மற்றும் ஊடகப் பாவனையினையும் விரிவுபடுத்தல்.

V. தேசிய கொள்கைகள் மற்றும் அபிவிருத்தி தொடர்பாக இளைஞர் யுவதிகளுக்கிடையில் கலந்துரையாடலை ஏற்படுத்துவதன் ஊடாக இளைஞர்களின் கருத்துக்களையும் மற்றும் முன்மொழிவுகளையும் பெற்றுக்கொள்ளல்.

VI. போதைப்பொருட்களின் ஒழிப்பினை தேசிய நிகழ்ச்சித் திட்டத்தில் முன்னோடியாக செயற்படுத்துவதற்கு மேற்படி முகாம் வாசிகளை ஆய்த்தமாக்கல்.

மேற்படி யொவுன்புர நிகழ்ச்சித் திட்டத்தின் மொத்த செயற்பாடுகளிலும் தங்களது செயலூக்கத்துடனான பங்களிப்பின் மூலம் நிகழ்ச்சியினதும் அவ்வாறே தங்களது வெற்றியின் ஊடாகவும் இறுதியில் தேசிய அபிவிருத்திச் செயற்பாட்டிற்காக தலைமைத்துவ ஆளுமை நிறைந்த 7000 இளைஞர் யுவதிகள் ஒன்றாக அணி திரள்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.3. யொவுன்புர ஏற்பாட்டுக் கட்டமைப்பு

### .1.3.1. தலைமைக் கடமைப் பொறுப்பு அலுவலர்

| விடயம் | அலுவலரின் பெயர் மற்றும் பதவி | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|
| வழிகாட்டல் | டபிள்யு.ஜீ.எஸ்.எரந்திக,பணிப்பாளர் நாயகம் / தலைவர்,தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் | 0773797001 |
| மேற்பார்வை நடவடிக்கைகள் | திரு.ரோஹன சேனாரத்ன பணிப்பாளர் (நிருவாகம்) | 0716832661 |
| | திரு.ஏ.எம்ஜே.கே.என்.அதிகாரி பணிப்பாளர் (அபிவிருத்தி) | 0710554408 |
| | திரு.ஜீ.டீ.ரீ.எஸ்.துஷார பெரேரா பணிப்பாளர் (நிதி) | 0718738832 |
| | திரு.சுனில் கருணாரத்ன - பணிப்பாளர் (பயிற்சிகள்)- | 0718386729 |
| முகாம்களின் செயற்பாட்டு நடவடிக்கைகள் | திரு.பிரபாத் லியனகே – பிரதிப்.பணிப்பாளர் (அபிவிருத்தி) | 0718045477/ 0702753412 |
| | திரு.சமன் அபேவர்தன- உதவிப் பணிப்பாளர் (மி.கருத்திட்டம்) | 0718425010 |

இதற்கு மேலதிகமாக, ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் பொறுப்பான அலுவலர்கள் தொடர்பான தகவல்களை யொவுன்புர தகவல்கள் அலுவலகத்தின் ஊடாக பெற்றுத்தருவதுடன் தேவையான சந்தர்ப்பங்களில் அவர்களை ஒருங்கிணைப்பு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் என பணிவுடன் அறியத்தருகின்றேன்.

### 1.3.2. யொவுன்புர நகர சபை

"பத்தாயிரம் பேர் கலந்துகொள்வதனால் இது வெறுமனே பங்குபற்றும் வாய்ப்பொன்றாகத் தோன்றினாலும் சரியான பங்களிப்பு என்பது செயற்பாட்டுடன் கூடிய தலைமைத்துவத்தின் ஊடாக பொறுப்புக்களை ஏற்று பங்களிப்புச் செய்வதாகும். அவ்வாறு பொறுப்புக்களை ஏற்று அவற்றை உரிய முறையில் நிறைவேற்றல் பங்குபற்றும் வாய்ப்பொன்றாவதுடன் இளைஞர் யுவதிகளின் முகாமின் நிருவாக செயற்பாடுகளுக்கும் முழுமையாக பங்குபற்றுதல் வேண்டும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி உதாரணத்தின் மூலம் எடுத்துக் காட்டப்படுவது என்னவெனில் பங்குபற்றல் எனும் எண்ணக்கருவின் முக்கியத்துவத்தினை விளக்குவதாகும்.மேலும் பங்குபற்றல் என்பது வெறுமனே முகாமில் பங்குபற்றல் என்ற வரையறைக்கு உட்படாது அதற்கும் மேல் முகாமின் நிருவாக ரீதியான தீர்மானம் மேற்கொள்ளல் வரை ஆழமாக வேரூன்றிச் செல்லல் வேண்டும் என்பதனை மேற்படி கூற்று சான்று பகர்கிறது.

யொவுன்புரய முகாம்களின் நிருவாகத்திற்காக இளைஞர்களாகிய தங்களுக்கு பங்குபற்றக்கூடிய பிரதான காரணி நகர சபையாகும்.

1. யொவுன்புரய நிருவாக நடவடிக்கைகள் கலந்துகொள்பவர்களினால் நிறைவேற்றப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் இரண்டு நகர சபை உறுப்பினர்களைக்கொண்ட நகர சபை ஒன்றின் ஊடாக மேற்படி நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட உள்ளன.அதற்கமைய நகர சபையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 52 ஆகும்.

2. நகர சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்யும்போது ஆண்,பெண் இரு பாலாரினதும் சம பங்களிப்பு உறுதி செய்யப்படுதல் வேண்டும்

3. யொவுன்புரய நிகழ்ச்சியுடன் இணைந்த வகையில் உத்தியோகபூர்வக் கூட்டம் ஒன்றினை நடாத்தி வரவழைத்து உபசரிக்கும் மாவட்டத்திலிருந்து நகர பிதாவினைத் தெரிவு செய்வதுடன் ஏனைய உறுப்பினர்களிலிருந்து பிரதி நகர பிதா மற்றும் ஏனைய அலுவலர் குழாத்தின் 10 உறுப்பினர்களுக்காக தலைமை வகிப்பவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

4. யொவுன்புர நகர சபையின் பணியகங்கள்
   - i பாதுகாப்பு மற்றும் அனர்த்தங்களைக் கட்டுப்படுத்தும் பிரிவு
   - ii கல்வி மற்றும் ஆளுமை விருத்திப் பிரிவு
   - iii விளையாட்டுக்கள் மற்றும் பொழுதுபோக்குகள் பிரிவு
   - iv சுகநலன் பேணல் மற்றும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டுப் பிரிவு
   - v உணவுப் பாதுகாப்பு மற்றும் நீர் முகாமைத்துவப் பிரிவு
   - vi இன வேறுபாட்டு ஒருமைப்பாடு,பரஸ்பர நல்லுறவு விருத்தி மற்றும் இணக்கப்படுத்தல் பிரிவு
   - vii சூழல் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திப் பிரிவு
   - viii தொலைத்தொடர்பு மற்றும் ஊடகப் பிரிவு
   - ix கலாச்சார அலுவல்கள் பிரிவு
   - x பெண்கள் உரிமைகள் பாதுகாப்பு மற்றும் சித்திரவதையினை ஒழித்தல் மற்றும் கண்ணியத்தைப் பாதுகாத்தல் தொடர்பான பிரிவு

5. நகர சபையின் அலுவல்களை கூடியளவு முறைமைப்படுத்தல் மற்றும் நகர சபையில் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களை அலுவலர்கள் மட்டத்தில் நடைமுறைப்படுத்துவதனை எளிதாக்குதல் என்பவற்றிற்காக யொவுன்புர நகர சபைக்கு நகர சபை ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்படுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. நகர சபையானது ஒவ்வொரு நாளும் பி.ப.4.00 மணி தொடக்கம் 6.00 மணி வரையான காலப்பகுதியில் முன்னர் தீர்மானிக்கப்பட்ட நேரத்தில் கூட்டப்படுவதுடன் தேவையானபோது அவசர காலகட்டங்களிலும் கூட்டப்படலாம்.

7. யொவுன்புர நிகழ்ச்சியின் நாளாந்த நடவடிக்கைகள் உரிய முறையில் நடைபெற்றுள்ளதா? குறைபாடுகள் காணப்படுகின்றதா? எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் அடையப் பெற்றுள்ளதா? எதிர்கால நடவடிக்கைகளுக்காக முன் ஆயத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா? அந்தந்த பிரிவுகளுக்குரிய பொறுப்புக்கள் உரிய முறையில் நிறைவேற்றப்படுகின்றனவா? என்பது பற்றி ஆராய்தல். அறிக்கைகளை முன்வைத்தல் பரிந்துரைகளை வழங்குதல் உட்பட முகாமின் நிருவாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் நகர பையின் கடமைப்பொறுப்பாகும்.

8. யொவுன்புர நகர சபையில் பிரதான நகர சபை உறுப்பினர்கள் இரண்டு பேருக்கு மேலதிகமாக ஒரு மாவட்டத்திலிருந்து துணை நகர சபை உறுப்பினர்கள் மூன்று பேர்களை நியமிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அவர்களது பொறுப்பு பிரதான நகர சபை உறுப்பினர்கள் இருவருக்கும் தமது மாவட்டத்தில் தேவையான உதவியினை வழங்குவதாகும்.

09. தமது மாவட்டத்தினை பிரதிநிதித்துவம் செய்து யொவுன்புர நிகழ்ச்சியினை செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நகர சபை உறுப்பினர்களுக்குத் தேவையான உதவியினை வழங்குதல் மாவட்ட அலுவலர்கள் உட்பட பங்குபற்றும் சகலரினதும் பொறுப்பாகும். மொத்த யொவுன்புர நிகழ்ச்சியில் பொறுப்புகளுக்காக அர்ப்பணிப்புடன் பணி புரியும் நகர சபை உறுப்பினர்களுக்கு சிலவேளை தமது மாவட்டத்திற்காக சிறந்த முறையில் அர்ப்பணிப்புடன் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிரமங்கள் ஏற்படின் அவர்களுக்காக தேவையான உதவியினை பங்குபற்றும் மாவட்டத்தின் ஏனைய உறுப்பினர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் வழங்குதல் வேண்டும்'

10. நகர சபை உறுப்பினர்கள் சகலரும் இயலுமான சகல வேளைகளிலும் தமது மாவட்டத்திற்காகவும் தேவையான பங்களிப்பினையும் மற்றும் உதவியினையும் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. ஆரம்ப ஏற்பாட்டு நடவடிக்கைகள்

## 2.1. முன்னோடிக் குழுக்கள்

யொவுன்புர முகாமின் ஆரம்பப் பணிகளை இலகுபடுத்திக்கொள்வது முன்னோடிக் குழுக்கள் மூலம் மேற்கொள்ளப்படும்.

1. சகல முன்னோடிக் குழுக்களும் 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆந்திகதி உரிய முகாமிடல் வளாகத்திற்கு சமூகமளித்து முன் ஏற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பித்தல் வேண்டும்.

2. முன்னோடிப் பயணத்தில் பங்குபற்றும் ஆட்கள் மாவட்டத்திற்காக ஒதுக்கப்பட்டு உள்ள இளைஞர்களின் பங்களிப்பில் உள்ளடங்குமாறு தெரிவுசெய்தல் வேண்டும்.(முன்னோடிப் பயணத்திற்காக பங்குபற்றும் குழுவினை ஏனைய பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கையுடன் ஒன்று சேர்த்ததன் பின்னர் மாவட்ட இலக்குகளை மிகைத்துவிடக் கூடாது.) இங்கு பங்குபற்றும் இளைஞர்கள் அல்லாத ஏனைய நுட்பக்கலை ஆற்றல்களைக் கொண்ட உதவி ஆட்களை பங்குபற்றச் செய்தல் கூடாது.

3. முன்னோடிக் குழுக்களுக்கான உணவு பானங்கள் மற்றும் போக்குவரத்து வசதிகள் என்பன உரிய மாவட்டங்களினால் ஏற்பாடுசெய்து கொள்ள வேண்டியதுடன் மாவட்டத்தின் முகாமிடல் வளாகத்திற்கு அருகிலுள்ள நிர்மாணிப்புக்கள் மற்றும் ஏனைய ஆக்கங்கள் என்பவற்றிற்கு அவசியமான பொருட்கள் / உபகரணங்கள் / பண்டங்கள் என்பன உரிய மாவட்டத்தினால் கொண்டு வரப்படுதல் வேண்டும்.

**முன்னோடிப் பயணத்தில் பங்குபற்றுபவர்களின் ஆவணம்**

| தொடரிலக்கம் | மாவட்டம் | பங்குபற்றுபவர்கள் | முன்னோடிக் குழு | முன்னோடி அலுவலர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | கொழும்பு | 165 | 20 | 2 |
| 02 | நகர இளைஞர் | 70 | 15 | 1 |
| 03 | கம்பஹா | 515 | 25 | 2 |
| 04 | களுத்துறை | 330 | 20 | 1 |
| 05 | காலி | 360 | 20 | 3 |
| 06 | மாத்தறை | 260 | 20 | 2 |
| 07 | அம்பாந்தோட்டை | 265 | 20 | 2 |
| 08 | கண்டி | 565 | 25 | 3 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 09 | மாத்தளை | 210 | 20 | 2 |
| 10 | நுவரெலியா | 225 | 20 | 2 |
| 11 | மொனராகலை | 155 | 20 | 2 |
| 12 | பதுளை | 310 | 20 | 2 |
| 13 | கேகாலை | 360 | 20 | 2 |
| 14 | இரத்தினபுரி | 275 | 20 | 2 |
| 15 | குருணாகல் | 725 | 25 | 3 |
| 16 | புத்தளம் | 195 | 20 | 2 |
| 17 | அநுராதபுரம் | 330 | 20 | 2 |
| 18 | பொலன்னறுவை | 125 | 20 | 2 |
| 19 | திருகோணமலை | 185 | 20 | 2 |
| 20 | மட்டக்களப்பு | 320 | 20 | 2 |
| 21 | அம்பாறை | 360 | 20 | 2 |
| 22 | வவுனியா | 80 | 15 | 1 |
| 23 | மன்னார் | 145 | 20 | 2 |
| 24 | கிளிநொச்சி | 80 | 15 | 1 |
| 25 | முல்லைத்தீவு | 80 | 15 | 1 |
| 26 | யாழ்ப்பாணம் | 210 | 20 | 2 |
| | **மொத்தம்** | 6900 | 515 | 51 |

**கடமைப் பொறுப்பு**

I. முகாம் அமைந்துள்ள பிரதேசத்தில் தமது மாவட்டத்திற்குரிய முகாம்களின் எல்லைகளை அமைத்துக்கொள்ளல்

II. முகாம்களைத் திட்டமிடல்.

III. கூடாரங்களை நிர்மாணித்தல்.

IV. உணவு சமைத்தலுக்காக சமையலறையினையும் அவ்வாறே உணவு உட்கொள்வதற்கான சாப்பாட்டறையினையும் அமைப்பதற்குத் தேவையான சகல வகையான பொருட்களையும் மற்றும் உபகரணங்களையும் கொண்டு வருதல் வேண்டும்.

V. கலந்துகொள்பவர்கள் வருகை தரும்போது அவர்களுக்காக தேநீர் உபசாரத்தினை ஆயத்தம் செய்தல்.

**கொண்டு வரப்பட வேண்டிய உபகரணங்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I. கூடாரங்கள் மற்றும் அதற்குத் தேவையான பொருட்கள் / மேலதிக மடுவங்களை அமைக்கத் தேவையான பொருட்கள் மற்றும் உபகரணங்கள்,உணவு சமைப்பதற்குத் தேவையான பொருட்கள் மற்றும் உபகரணங்கள்.

உதா -: மண்வெட்டிகள்,வீச்சு வாள்கள்,கத்திகள், அளவாங்குகள்,சிறிய ஏணி ஒன்று,கூடையொன்று, கம்புத் துண்டங்கள்,தென்னோலை ஆகியன.

II. முன்னோடிக் குழுக்களினால் கொண்டு வரப்படும் பொருட்கள் தொடர்பான ஆவணம் ஒன்று கொண்டுவரப்பட வேண்டியதுடன் அது 02 பிரதிகளில் கொண்டு வரப்படுதல் வேண்டும். முதலாவது பிரதி பாதுகாப்புப் பிரிவிடமும், இரண்டாவது பிரிவு தமது மாவட்டத்திடமும் வைத்துக்கொள்ளல் வேண்டும்.

III. இக்குழுவின் சகல நடவடிக்கைகளையும் 2018.03.28 ஆந்திகதி மு.ப.10.00 மணிக்கு முன்னர் பூர்த்தி செய்தல் வேண்டும்.

IV. முன்னோடிக் குழு,முகாம்கள் ஆரம்பிக்கும் தினத்திற்கு 07 நாட்களுக்கு முன் பங்குபற்ற வேண்டியதுடன் தமது மாவட்டத்தின் முகாமைக் கட்டியெழுப்பும் ஆற்றலின் அடிப்படையில் அதற்காகப் பங்குகொள்ள முடியும்.

V. முகாம்களில் கலந்துகொள்ளும் சகலருக்குமாக முகாம்களின் சட்ட விதிகள் ஏற்புடையதாவதுடன் நிருவாக ஒழுக்கக் கட்டுப்பாட்டினை விட சுய ஒழுக்கக் கட்டுப்பாடு கூடிய விளைதிறனை அளிக்கும்.

## 2.2. பங்குபற்றுபவர்களைப் பதிவு செய்தல்.

I. மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இலக்குகளுக்குரிய எண்ணிக்கைளுக்குச் சம எண்ணிக்கையில் கலந்துகொள்பவர்களின் எண்ணிக்கையினை பங்குபற்றச் செய்தல் உரிய மாவட்டத்தின் பொறுப்பாகும்.

II. மாட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ள மாதிரிப் படிவங்களைப் பயன்படுத்தி பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் கையொப்பப் பத்திரங்களைப் பூர்த்தி செய்து அவற்றின் மூன்று பிரதிகளுடன் யொவுன்புர நிகழ்ச்சியில் பங்குபற்றுதல் வேண்டும்.

III. பங்குபற்றும் அலுவலர்களின் ஆவணம் ஒன்றினை மாவட்டத்திற்குப் பொறுப்பான உதவிப் பணிப்பாளரின் பரிந்துரையுடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

IV. யொவுன்புர நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும் சகலருக்கும்,தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் கலந்து கொள்பவர்களுக்கான அடையாள அட்டை ஒன்று வழங்கப்படுவதுடன் பங்குபற்றுபவர்கள் மேற்படி அடையாள அட்டையினை நிகழ்ச்சி பூராகவும் அணிந்திருத்தல் கட்டாயமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

V. யொவுன்புர நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்காக முகாம்கள் அமைக்கப்பட்டுள்ள பிரதேசத்திற்குள் நுழையும்போது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆளடையாள ஆவணம் ஒன்றினைச் சமர்ப்பித்து பங்குபற்றுபவர்கள் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

## பங்குபற்றுவதற்கான அடையாள அட்டையினை வழங்குதல்.

I. இளைஞர் கழக உறுப்பினர்களுக்கான அடையாள அட்டைகளைத் தயாரிப்பதற்காக வழங்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தினை சரியான முறையில் பூர்த்தி செய்து உறுதிப்படுத்தலுடன் புகைப்படங்களையும் இணைத்து ஒப்படைத்தல் வேண்டும்.

II. நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும்போது தேசிய அடையாள அட்டையினைக் கட்டாயமாக கைவசம் வைத்திருத்தல் வேண்டும்.

III. நாளாந்த நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும்போது மற்றும் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ள பிரதேசத்திலிருந்து வெளியே செல்லும்போது Barcode Reader ஊடாக கணனிக் கட்டமைப்பிற்குச் சேர்த்தல். (தொழிநுட்ப உதவி வழங்கப்படும்)

IV. உரிய அடையாள அட்டைகளை இலங்கை இளைஞர் கழக சம்மேளனம் மற்றும் தகவல் தொழிநுட்பப் பிரிவு என்பவற்றின் ஊடாக வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

V. ஏனைய இளைஞர் அமைப்புக்களுக்கு அடையாள அட்டைகளை வழங்குவதற்கு வழங்கப்பட்டுள்ள விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து தத்தமது புகைப்படங்களுடன் மார்ச் மாதம் 10 ஆந்திகதிக்கு முன்னர் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

VI. பங்குபற்றுபவர்கள் இங்கு தங்கியிருப்பார்களா அல்லது இல்லையா என்பதனையும் மற்றும் நிகழ்ச்சிகளில் பங்குபற்றுகிறார்களா அல்லது இல்லையா என்பது தொடர்பாகவும் அடையாள அட்டையின் ஊடாக தீர்மானிக்கப்படுவதுடன் அதனை நிதமும் பாதுகாப்பாக வைத்துக்கொள்ளல் கட்டாயமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.3. கலந்துகொள்வதற்கான இணைவு

இளைஞர் பாராளுமன்ற வாக்குரிமை உள்ள இளைஞர்களின் கலந்துகொள்வதற்கான கூட்டிணைவு கீழே காட்டுப்பட்டுள்ளது.

| இளைஞர்களின் பங்களிப்பு | கலந்துகொள்பவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| இளைஞர் கழகத்தின் ஆண்/பெண் உறுப்பினர்கள் | 6700 |
| பாடசாலை மாணவ தலைவர்கள் | 200 |
| வெளிநாட்டு இளைஞர் யுவதிகள் | 100 |
| மொத்தம் | 7000 |

| தொடரிலக்கம். | மாவட்டம் | பங்குபற்றுபவர்கள் | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | இளைஞர் கழகம் | பாடசாலை மாணவர் தலைவர்கள் | |
| 01 | கொழும்பு | 160 | 05 | 165 |
| 02 | நகர இளைஞர் | 67 | 03 | 70 |
| 03 | கம்பஹா | 500 | 15 | 515 |
| 04 | களுத்துறை | 320 | 10 | 330 |
| 05 | காலி | 350 | 10 | 360 |
| 06 | மாத்தறை | 252 | 08 | 260 |
| 07 | அம்பாந்தோட்டை | 257 | 08 | 265 |
| 08 | கண்டி | 550 | 15 | 565 |
| 09 | மாத்தளை | 205 | 05 | 210 |
| 10 | நுவரெலியா | 220 | 05 | 225 |
| 11 | மொனராகலை | 150 | 05 | 155 |
| 12 | பதுளை | 300 | 10 | 310 |
| 13 | கேகாலை | 350 | 10 | 360 |
| 14 | இரத்தினபுரி | 267 | 08 | 275 |
| 15 | குருணாகல் | 700 | 25 | 725 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 16 | புத்தளம் | 190 | 05 | 195 |
| 17 | அநுராதபுரம் | 320 | 10 | 330 |
| 18 | பொலன்னறுவை | 120 | 05 | 125 |
| 19 | திருகோணமலை | 180 | 05 | 185 |
| 20 | மட்டக்களப்பு | 311 | 09 | 320 |
| 21 | அம்பாறை | 352 | 08 | 360 |
| 22 | வவுனியா | 78 | 02 | 80 |
| 23 | மன்னார் | 141 | 04 | 145 |
| 24 | கிளிநொச்சி | 78 | 02 | 80 |
| 25 | முல்லைத்தீவு | 78 | 02 | 80 |
| 26 | யாழ்ப்பாணம் | 204 | 06 | 210 |
| 27 | வெளிநாட்டு | - | 100 | - |
| | **மொத்தம்** | 6700 | 300 | 6900 |

## 2.4. முன் பிரச்சார நடவடிக்கைகள்

ஊடகத் துறையின் ஊடாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள செயன்முறைகளினூடாக யொவுன்புர நிகழ்ச்சியின் ஏற்பாடுகளின் ஆரம்ப கட்டம் தொடக்கம் மக்களை அறிவூட்டல்.

- ஊடகங்களைச் சந்தித்தல் மற்றும் கலந்துரையாடல்களை நடாத்துதல்.
- சகல மாவட்டங்களையும் தழுவும் வகையில் கட் அவுட் அடித்தல் (20 அடி x 15 அடி அளவிலான கட் அவுட்கள் 26 ஆகும்)
- யொவுன்புர மாவட்டங்களில் பயணிக்கும் வீதிகளின் ஊடாக 1 ½ x 2 அடி அளவிலான சிறிய கட் அவுட் போடுதல்.
- மார்ச் 01- 27 வரை அரச மற்றும் தனியார் தொலைக்காட்சிகளில் 30 - செக்கன்கள் தொலைக்காட்சி அறிவித்தல் ஒன்றினை பிரச்சாரம் செய்தல்
- சகல பத்திரிகைகளிலும் மார்ச் மாதம் 11,18 மற்றும் 25 ஆகிய வார இறுதி நாட்களில் ½ பக்க அளவான வர்ண பத்திரிகை அறிவித்தல்களைப் பிரசுரித்தல்.
- அச்சு ஊடகங்களில் கடிதங்கள் மற்றும் செய்திகளைப் பிரசுரித்தல்.
- வானொலி அலை வரிசைகளின் ஊடாக செய்தி ஒன்றாக பிரச்சாரம் ஒன்றினை வழங்குதல்.
- ஸ்கோர்பார் மூலம் பிரச்சாரம் ஒன்றினை வழங்குதல்.
- சமூக வலையமைப்பு இணையத்தளங்களின் மூலம் பிரச்சாரம் ஒன்றினை வழங்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ சகல கட்புல,செவிப்புல,அச்சு ஊடகங்களின் ஊடாகவும் செய்திகளை வெளியிடுதல்.

## 2.5. யொவுன்புர கைநூல், கணக்கெடுப்பு மற்றும் நிகழ்ச்சித்திட்ட மதிப்பீடு



தேசிய இளைஞர் சேவைகள் சபையில் நடைமுறைப்படுத்தப்படும் பிரதான நிகழ்ச்சித்திட்டமாகிய யொவுன்புர நிகழ்ச்சித் திட்டத்தில் யொவுன்புர கைநூல் மற்றும் நாளாந்த நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்தல்,யொவுன்புர நிகழ்ச்சித்திட்டம் மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏனைய நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பாக இளைஞர் யுவதிகளின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்கெடுப்பு ஒன்றினையும், யொவுன்புர நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகள் மற்றும் மொத்த நிகழ்ச்சித் திட்டத்தினையும் மதிப்பீடு செய்யவும் திட்டமிடப்பட்டு உள்ளது. அது கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு நடைமுறைப்படுத்தப்படும்.

### யொவுன்புர நிகழ்ச்சித் திட்டத்தின் நேரஅட்டவணை

யொவுன்புர நிகழ்ச்சி நடாத்தப்படும் கால எல்லையில் மேற்கொள்ளப்படும் சகல செயற்பாடுகள் மற்றும் நேரங்கள் என்பவற்றை உள்ளடக்கிய யொவுன்புர நிகழ்ச்சிகளின் நாளாந்த நேர அட்டவணை தயாரிக்கப்பட்டு உள்ளது. பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ள பிரிவுகள் மற்றும் மாவட்ட அலுவலர்கள் ஆகியோர் உரிய நேரங்களில் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தவும் மற்றும் இளைஞர் யுவதிகளை பங்குபற்றச் செய்யவும் கடப்பாடுள்ளவர்களாவர்.

### கைநூல் – யொவுன்புர வழிகாட்டி

யொவுன்புர நிகழ்ச்சித் திட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பல்வேறு செயற்பாடுகளை விரிவாக உள்ளடக்கிய வகையில் இந்தக் கைநூல் தயாரிக்கப்படுகின்றது. பல்வேறு செயற்பாடுகள் தொடர்பான சுருக்கமான தகவல்களை இளைஞர் யுவதிகளின் கைகளில் ஒப்படைத்தல் அவ்வாறே யொவுன்புர பிரதேசத்தில் நடைபெறும் செயற்பாடுகள் நிலைப்படுத்தப்பட்டுள்ள விதம் என்பவற்றை இப்புத்தகம் பிரதிபலிக்கும். யொவுன்புர நடைபெறும் பிரதேசத்திற்குள் நுழையும் ஒருவருக்கு செயற்பாடுகள் தொடர்பான ஆரம்ப வழிகாட்டலிற்காக இப்புத்தகம் தயாரிக்கப்படுகின்றது.

மேலும் நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்துகொள்ளும் முன்னர் இந்தப் புத்தகத்தை கலந்துகொள்பவர்களின் கைகளில் கிடைக்கச் செய்ய திட்டமிடல் மற்றும் அபிவிருத்திப் பிரிவு மற்றும் மாவட்ட அலுவலர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணக்கெடுப்புப் பத்திரங்களைப் பூர்த்தி செய்வதன் ஊடாக தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்

யொவுன்புர நிகழ்ச்சித் திட்டத்தில் கலந்துகொள்ளும் 7,000 இளைஞர் யுவதிகள் மற்றும் இலங்கையின் மொத்த இளைஞர் சமுதாயத்தினரும் கலந்துகொள்ளக் கூடிய வகையில் கணக்கெடுப்பு நடைமுறைப்படுத்தப்படும்.

## கணக்கெடுப்பிற்காக தரவுகளை வழங்குவதன் ஊடாக பங்களிப்பு வழங்கக் கூடியது எவ்வாறு?

திட்டமிடல் மற்றும் அபிவிருத்திப் பிரிவின் ஊடாக மேற்படி பணிக்காக அத்தினத்தில் சமூகமளிக்கும் அலுவலர்களினால் கணக்கெடுப்புப் பத்திரங்களை இளைஞர்களின் கைகளில் ஒப்படைத்து அதில் கேட்கப்பட்டு உள்ள வினாக்களுக்கு அவர்களினால் அவர்களின் சொந்தக் கருத்துக்களை வழங்குவதன் ஊடாக ஆகும்.

### யொவுன்புர நிகழ்ச்சித்திட்டங்களை மதிப்பீடு செய்தல்

இந்த மதிப்பீட்டுச் செயற்பாடுகளுக்காக 02 முறைகள் பயன்படுத்தப்படும்.

1. **செயற்பாடுகளை மதிப்பிடல்** – யொவுன்புர நிகழ்ச்சித்திட்டத்தின் நாளாந்த செயற்பாடுகள் ஒவ்வொன்றினையும் வெவ்வேறாக மதிப்பீடு செய்தல் இதன் கீழ் மேற்கொள்ளப்படும்.ஒரு செயற்பாட்டிற்காக பங்குபற்றும் இளைஞர் யுவதிகள் ஆகக்குறைந்தது 20 பேர்களின் மாதிரி ஒன்றினை எழுமாறாகத் தெரிவு செய்து மதிப்பீடுசெய்தல் மேற்கொள்ளப்படும். திட்டமிடல் பிரிவின் ஊடாக அந்தந்த பிரிவுகளுக்கு சமூகமளித்து மேற்படி மதிப்பீடு செய்தல் மேற்கொள்ளப்படும்.

மேற்படி கணக்கெடுப்பு மற்றும் மதிப்பீடு என்பன தொடர்பாக தெரிவிக்கும் கருத்துக்களை சுயாதீனமான முறையில் தெரிவிப்பதற்கான சந்தர்ப்பத்தினை அமைத்துக் கொடுத்தல் வேண்டும். ஒருங்கிணைப்பு மற்றும் வழிகாட்டல் நடவடிக்கைகள் உதவிப் பணிப்பாளரினால் (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி) மேற்கொள்ளப்படும். திட்டமிடல் மற்றும் அபிவிருத்திப் பிரிவின் அலுவலர் குழு ஒன்று முகாம் அமைந்துள்ள பிரதேசத்தில் முழு நேர அடிப்படையில் இதற்காகத் தங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவார்கள்.

**2. மொத்த மதிப்பீடு** - யொவுன்புர நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான மொத்த மதிப்பீடு ஒன்று இதன் ஊடாக மேற்கொள்ளப்படும். யொவுன்புர நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதித் தினத்தில் மேற்படி மதிப்பீட்டுப் பத்திரத்தினை நிரப்புதல் வேண்டும். உரிய மதிப்பீட்டுப் பத்திரங்கள் மாவட்ட உதவிப் பணிப்பாளரினால் பெயர் குறிப்பிடப்படும் அலுவலர் ஒருவரிடம் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கும்போது திட்டமிடல் பிரிவிலுள்ள அலுவலர்களினால் பகிர்ந்தளிக்கப்படும். சகல மதிப்பீட்டுப் பத்திரங்களையும் (7,000) பூர்த்தி செய்து உரிய மாவட்டத்தின் உதவிப் பணிப்பாளர் அல்லது மாவட்ட இளைஞர் சேவைகள் அலுவலர் ஊடாக திட்டமிடல் மற்றும் அபிவிருத்திப் பிரிவின் இளைஞர் சேவைகள் உத்தியாகத்தரிடம் ஒப்படைத்தல் வேண்டும். அதன் பின்னர் தரவுகளின் பகுப்பாய்வின் ஊடாக திட்டமிடல் பிரிவினால் மொத்த நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான மதிப்பீடு ஒன்றினை வழங்குதல் மேற்கொள்ளப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. முகாம்கள் அமைக்கப்பட்டுள்ள பிரதேச செயற்பாடுகள்

### 3.1. அறிமுகம்

1980 தசாப்தங்கள் பூராகவும் நடைபெற்ற யொவுன்புர நிகழ்ச்சிகளினதும் மற்றும் 2016 ஆம் ஆண்டிலும் மற்றும் 2017 ஆம் ஆண்டிலும் நடைபெற்ற நிகழ்ச்சித் திட்டத்தினதும் உள்ளடக்கத்திற்கோ அல்லது எண்ணக்கருவிற்கோ எந்தவொரு பாதிப்பும் ஏற்படாத வகையில் 2018 ஆம் ஆண்டிலும் இளைஞர் யுவதிகளின் பங்களிப்பில் மேற்படி முகாமிடல் நிகழ்ச்சித்திட்டம் மேற்கொள்ளப்படும். இம்முறை யொவுன்புர நிகழ்ச்சியில் 2030 நிலையான அபிவிருத்தி இலக்கினை அடைந்துகொள்வதற்கு துணையாகும் வகையில் தாபன ரீதியான பெறுபேறுகளுக்கு முகங்கொடுக்கும் செயற்பாடுகளை இலக்கு வைத்தல் விஷேட செயற்பாடு ஒன்றாகும்.

➢ **அரச கொள்கைகள்**

பல்வகைமையுடன் வெற்றிகரமாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரச கொள்கைகள் உறுதுணையாக அமைந்துள்ளது. அதற்காக கொள்கைகளை வகுக்கும்போது பொறுப்பினை அரசு ஏற்கும். மக்களின் பிரச்சினைகள் மற்றும் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காக அரசினால் மேற்கொள்ளப்பட்ட ஏராளமான செயற்பாடுகள் அரச கொள்கைகள் ஆக்கம் என அழைக்கப்படுகின்றது.மேற்படி கொள்கைகளின் நோக்கங்கள் மற்றும் தீர்மானங்களுக்கு ஏற்ப கொள்கைகளில் மாற்றங்கள் காணப்படும். மேலும் ஏதாவது ஒரு நோக்கத்தினை அடைந்துகொள்வதற்காக பிரதான மூன்று தரப்பினர்களின் ஈடுபாடு அவசியமாகும். மேற்படி ஏதாவது ஒரு தரப்பினரின் ஈடுபாடேனும் பலவீனமாயின் நோக்கத்தினை அடைந்துகொள்ளலும் பலவீனமாகும். இவ்வாறு பொதுமக்கள்,அரசியல்வாதிகள் மற்றும் அரசகொள்கைகள் ஆகிய தரப்பினர்களின் உரிய பங்களிப்பு மிகவும் முக்கியமானதாகும்.

தற்கால பொருளாதாரக் கொள்கையாவது அறிவின் மீது அடித்தாளமிடப்பட்ட போட்டித் தன்மையுடைய சந்தைப் பொருளாதாரமாகும். அவ்வாறே ஊழலை ஒழிப்பதனை முதன்மையாகக் கொண்ட நல்லாட்சிக் கோட்பாடுகளை வலுப்படுத்துவதும் முதன்மையான அரச கொள்கை ஒன்றாகும். வியாபாரங்கள் மற்றும் கைத்தொழில்களுக்குத் தேவையான வகையில் திட்டமிடப்பட்டவாறு அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைத் தாபித்தல்,அறிவு,பண்பு,சக்தி என்பவற்றைக்கொண்ட மனித நலன்சார் உணர்வுகளை கல்வியினூடாகப் பெற்றுக்கொடுத்தல் முதன்மையான அரச கொள்கையொன்றாகும். இதற்காக முன்னனியில் நின்று செயற்படும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சே மேற்படி நிகழ்ச்சித் திட்டத்திற்கான ஆலோசனையையும் வழங்குகின்றது.

➢ **கல்வி மற்றும் தொழிநுட்ப நிகழ்ச்சித் திட்டங்கள்**

மேற்படி முகாமிடல் நிகழ்ச்சித் திட்டத்தினை செயற்படுத்தும் ஒட்டு மொத்த நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றும் இளைஞர் யுவதிகளின் அறிவு,ஆற்றல்கள் மற்றும் உளப்பாங்கு விருத்தியின் மீது போதியளவு கவனம் செலுத்தப்படும். அதற்குத் தேவையான தகவல்களை வழங்கல்,விரிவுரைகள்,கலந்துரையாடல்கள், கண்காட்சிகள், போட்டிகள் போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயன்முறைச் செயற்பாடுகள் இக்கைநூலின் கல்வி மற்றும் தொழிநுட்ப கண்காட்சி நிகழ்ச்சிகள் எனும் அத்தியாயத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

### ➢ தகவல் தொழிநுட்பம்

மேற்படி முகாம்கள் அமைக்கப்பட்டுள்ள பிரதேசத்தில் தகவல் தொழிநுட்பத்தினை இளைஞர் சமுதாயத்திடம் பிரபல்யப்படுத்துவத்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அதற்காக பிரபல்யமான அரச மற்றும் தனியார் துறைகளின் பங்களிப்பினை இதன் கீழ் பெற்றுக்கொள்ளல் மேற்கொள்ளப்படும். கைநூலில் தகவல் தொழிநுட்ப நிகழ்ச்சித்திட்ட அத்தியாயத்தின் கீழ் விபரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

### ➢ ஊடகங்கள்

யொவுன்புர நிகழ்ச்சி பூராகவும் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக நிறுவனங்கள் என்பன தொடர்புகொள்ளப்படும்.மேலும் மேற்படி நிறுவனங்களுக்காக நேரடி மற்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சிகள் தயாரிப்பு மற்றும் கண்காட்சி நடவடிக்கைகளுக்காகத் தேவையான ஊடக வலயங்களும் நிர்மாணிக்கப்படும்.மேற்படி மொத்த நடவடிக்கைகளின் மூலம் நிகழ்ச்சிகளுக்குத் தேவையான ஊடகத் தழுவலினை பெற்றுக்கொள்வதுடன் ஊடகப் பாவனை தொடர்பான இளைஞர் யுவதிகளின் அறிவு,புரிந்துணர்வு என்பவற்றை விரிவுபடுத்தலும் இதன் மூலம் மேற்கொள்ளப்படும்.

மேற்படி பிரதான விடயங்கள் ஊடாக மொத்த நடவடிக்கைகளும் திட்டமிடப்பட்டுள்ளன.

## 3.2. செயன்முறை தலைமைத்துவப் பயிற்சிகள் மற்றும் ஆளுமை விருத்தி



பங்குபற்றும் இளைஞர் யுவதிகளின் அறிவினை விருத்தி செய்தல் இதன் மூலம் மேற்கொள்ளப்படும்.இம்முறை யொவுன்புர நிகழ்ச்சியில் பங்குபற்றும் இளைஞர்களின் அறிவினை விருத்தி செய்தல் இதன் முதன்மையான தொனிப்பொருளாகும்.

**நோக்கங்கள் :-**

சவால்களை வெற்றிகொள்ளல், தலைமைத்துவ ஆற்றல் விருத்தி, தீர்மானங்களை மேற்கொள்ளும் ஆற்றல்கள் விருத்தி, ஆளிடைத் தொடர்புகள் சார் திறன் விருத்தி,போட்டித்தன்மை மற்றும் வெற்றி என்பன தொடர்பான உணர்வுகளை ஏற்படுத்துதல்,வெற்றி தோல்விகளை ஏற்றுக்கொள்ளும் தன்மை மற்றும் உலகளாவிய அறிவு மற்றும் ஆசியாக் கண்டத்தின் இளைஞர்களின் நிலையான அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக இளைஞரிடம் காணப்படும் அறிவை மட்டிடல்.

### நடைமுறைப்படுத்தப்படும் விதம்:-

- நாள் ஒன்றிற்கு மாவட்டம் ஒன்றிலிருந்து 20 பேர் வீதம் ஒரு நாளைக்கு 08 மாவட்டங்கள் தழுவப்படும்.
- மு.ப.. 8.30 தொடக்கம் பி.ப. 12.30 மற்றும் பி.ப.. 1.30தொடக்கம் பி.ப. 5.30 இடையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பி.ப.. 6.30 தொடக்கம் பி.ப.. 8.00 வரையான காலப்பகுதியில் உரிய தினத்தில் வெற்றி பெற்ற மாவட்டத்திடம் சென்று வெற்றியாளர்களுக்கான கிண்ணங்களை வழங்குதல்.(தலைவர் / பணிப்பாளர் நாயகம் அவர்களின் / பணிப்பாளர் ஒருவரின் தலைமையில்)

- உரிய மாவட்டத்தினை நோக்கி செல்லும் வேளையிலேயே அந்த மாவட்டத்தின் இளைஞர்களை பங்குபற்றச்செய்து அறிவு அளவிடல் நிகழ்ச்சியொன்றினையும் நடாத்த எதிர்பார்க்கப்படுகின்றது. (உலகளாவிய அறிவு மற்றும் ஆசிய இளைஞர்களின் நிலையான அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக இளைஞனின் அறிவினை மட்டிடல்)

**செயற்பாட்டுத் திட்டம்:-**

01. நடைமுறைப்படுத்தப்படும் செயன்முறைத் தலைமைத்துவப் பயிற்சி நிகழ்ச்சிகள்
    - Twist and run game
    - Blind chair
    - Sand sack
    - Slipping ball
    - Filling glass
    - CB, CB ( Correct ball, Correct basket)
    - Jungle tour

### 3.2.1 No Drugs நாம் Youth எண்ணக்கருவினை பிரபல்யம் செய்தல்.

மதுபானம் மற்றும் போதைவஸ்துக்கள் தற்கால இளைஞர் சமுதாயம் எதிர்நோக்கும் பாரிய சவால் ஒன்றாகும்.ஏனெனில் பாரியதொரு சூறாவளி போல் மேற்படி அழிவு எமது இளைஞர் சமுதாயத்தை பின் தொடர்ந்தே செல்கின்றது.இந்து சமுத்திரத்தின் முத்து என்ற பெயர் பெற்ற இலங்கை தற்போது மதுபானம் மற்றும் போதை வஸ்துக்கள் பாவனையில் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது உச்ச நிலையில் இருப்பது மிகவும் அவலத்திற்குரிய ஒரு விடயமாகும்.

நாட்டின் உழைப்புப் படையணியாக அபிமானத்துடன் இருக்க வேண்டிய இளைஞர்கள் வெறுமனே அழிவு நிலைக்குச் செல்லல் அவர்களுக்கு மாத்திரமன்றி நாட்டின் அபிவிருத்திக்கும் நேரடித் தாக்கத்தை விளைவிக்கும்.பல்வேறு வகையான விஷங்களைக்கொண்ட போதைவஸ்துக்கள் மற்றும் மதுபானங்கள் பல்வேறு நாடுகளிலுமுள்ள கடத்தல்காரர்கள் ஊடாக இந்த நாட்டிற்கு கொண்டு வரப்படுவதன் காரணமாக பல்வேறு சமூகப் பிரச்சினைகள் எழுந்துள்ளன.

இளைஞர்களின் பண்புகளைப் பகுப்பாய்வு செய்யும்போது அவர்கள் போதைவஸ்துக்களின் பால் ஈர்க்கப்படல் மற்றும் மிகவும் கொடூரமான அனுபவங்களின் பால் பின்தொடரும் வீதம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன அதிகரித்துக்கொண்டே வருகின்றது.எதிர்பார்ப்புக்களை இழத்தல் அதன் மூலம் உள ரீதியான விடுதலை ஒன்றினைத் தேடும் இளைஞர்கள் போதைவஸ்துக்களுக்கு அடிமையாதல் மூலம் தமது வாழ்க்கையினை மிகவும் துரதிஷ்டவசமான நிலைக்கு இட்டுச் செல்கின்றனர்.

இச்சமுதாய அழிவினை தடுப்பதற்காக முன்னோடியாக இருக்க வேண்டியவர்கள் இளைஞர்களே ஆகையால்,2018 யொவுன்புர நிகழ்ச்சியில் ஜனாதிபதி செயலகம்,இலங்கை பொலிஸுடன் தேசிய இளைஞர் சேவைகள் சபை என்பன ஒன்றிணைந்து ஏற்பாடுகளை மேற்கொண்டு இளைஞர்களை அறிவூட்டுதல் மற்றும் போதைவஸ்துக்கள் ஒழிப்பு ஆகிய நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்குரிய நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

## 3.2.3. சர்வதேச இளைஞர் தொடர்புகள் நிகழ்ச்சித் திட்டம்

தேசிய இளைஞர் சேவைகள் சபை நடைமுறைப்படுத்தும் இளைஞர்களின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக வெளிநாட்டு இளைஞர் யுவதிகளின் பங்களிப்பு, பங்குபற்றுதல் என்பவற்றைப் பெற்றுக்கொள்வதன் ஊடாக அவர்களுடன் பரஸ்பர புரிந்துணர்வினைக் கட்டியெழுப்பி மிகவும் கூடிய விளைதிறனுடைய இளைஞர்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் ஆற்றல் கிடைப்பதுடன் உள்நாட்டு இளைஞர் யுவதிகளை வலுவூட்டல் மற்றும் புதிய முறைகளிலான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் , அவர்களின் அனுபவங்கள்,பயிற்சிகள் மற்றும் கருத்துக்களை பெற்றுக்கொள்வதன் ஊடாக நிகழ்ச்சித் திட்டங்களை மிகவும் கூடிய விளைதிறனுடன் நடைமுறைப்படுத்துவதற்கு வழிவகைகளை அமைத்துக்கொள்ளல் என்பவற்றை நோக்கங்களாகக்கொண்டு இம்முறையும் இலங்கை இளைஞர் கழகங்களின் இளைஞர் யுவதிகளுடன் ஒன்றிணைந்து 2018.03.28 ஆம் திகதி தொடக்கம் 2018.04.01 வரை குருணாகல் மாவட்டத்தில் நடாத்தப்படவுள்ள, யொவுன்புர நிகழ்ச்சித்திட்டத்திற்காக சர்வதேச இளைஞர் தொடர்புகள் பிரிவின் ஊடாக வெளிநாட்டு இளைஞர் யுவதிகள் 100 பேரினை பங்குபற்றச் செய்ய உத்தேசிக்கப்பட்டு உள்ளது.

**பிரதான நோக்கங்கள்**

1. வெளிநாட்டு இளைஞர் யுவதிகளுடன் பரஸ்பர தொடர்புகளைக் கட்டி எழுப்புதல்.

2. கலாச்சாரம் / விளையாட்டுக்கள் / இளைஞர் பரிமாற்றங்கள்/ முகாம்கள் / பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றிற்கான பங்களிப்பினையும் கருத்துப் பரிமாற்றங்களையும் மேற்கொள்ள இயலுமாதல்.

3. குழுக்கள், கல்வி மற்றும் ஆய்வு நிகழ்ச்சித்திட்டங்களின்போது அவர்களின் கருத்துக்கள் மற்றும் அனுபவங்கள் என்பவற்றினைப் பரிமாறிக்கொள்ள இயலுமாதல்.

4. வெளிநாடுகளின் தொழிநுட்ப அறிவு மற்றும் அனுபவங்கள் என்பவற்றினை பரிமாறிக்கொள்ள இயலுமாதல்.
5. வெளிநாட்டு இளைஞர்கள் நடைமுறைப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக உள்நாட்டு இளைஞர்கள, அவர்களின் அனுபவங்கள்,பயிற்சிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் கருத்துக்களை பெற்றுக்கொள்வதன் ஊடாக உள்நாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை மிகவும் கூடிய விளைதிறனுடன் நடைமுறைப்படுத்த இயலுமாதல்.

6. ஆங்கில மொழி தொடர்பாக இலங்கை நாட்டின் இளைஞர் யுவதிகளுக்கு உத்வேகம் ஒன்றினை ஏற்படுத்த முடிதல்.

7. பல்வேறு இனத்தவர்கள் / மதத்தவர்களுக்கு இடையில் ஒற்றுமையுடன் செயற்படும் ஆற்றல் உண்டாதல்.

8. இதனூடாக ஏற்படுத்தப்படும் தொடர்புகள் பல்வேறு வெளிநாட்டு நிகழ்ச்சித் திட்டங்களுக்காக இலங்கை நாட்டின் இளைஞர் யுவதிகள் பங்குபற்றும் வாய்ப்பினை ஏற்படுத்திக்கொள்ள இயலுமாதல்.

**பங்குபற்றச் செய்ய எதிர்பார்க்கும் நிகழ்ச்சித்திட்டங்கள்**

விஷேட கருத்திட்டப் பிரிவின் ஊடாக யொவுன்புர நிகழ்ச்சித் திட்டத்தில் உள்நாட்டு இளைஞர் யுவதிகளுக்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள சகல நிகழ்ச்சித் திட்டங்களுக்காகவும், வெளிநாட்டு இளைஞர் யுவதிகள் 100 பேரை குழுக்களாகப் பிரித்து உள்நாட்டு முகாம் நடவடிக்கைகளுக்காக பங்குபற்றச் செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

உதாரணங்கள்- மினி மரதனோட்டப் போட்டி /ஆய்வுகள்/சிரமதானங்கள்/ கயிறு இழுத்தல், கல்வி,மரம் நடுகை,தகவல்தொழிநுட்பம்,கலாச்சாரம் ஆகிய நிகழ்ச்சித்திட்டங்களுக்காக குழுக்களாகப் பிரித்து பங்குபற்றச் செய்தல்.

கடந்த வருடங்களில் போன்றே இம்முறையும் பங்குபற்றும்வெளிநாட்டுக் குழு நடைமுறைப்படுத்தும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்காகவும் குழுக்களாகப் பிரித்து வேறாக்கி பங்குபற்றச் செய்ய எதிர்பார்க்கப்படுவதுடன், முகாமில் இலங்கை உணவுகளை சமைத்தல் கல்வி நிகழ்ச்சிகள் என்பவற்றிற்காகவும் சகல மாவட்டங்களும் பிரிதிநிதித்துவம் பெறும் வகையில் குழுக்களாக அனுப்ப எதிர்பார்க்கப்படுகின்றது.மேலும் இரவு நேரத்தில் ஒவ்வொரு மாவட்டங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் முகாம்களில் நடைமுறைப்படுத்தப்படும் கலாச்சார நிகழ்ச்சிகளுடன் இணைந்த வகையில் வெளிநாட்டவர்களின் முகாம்களிலும் அவர்களுக்கேயுரிய கலாச்சார செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

பங்குபற்றும் நாடுகளுக்கிடையில் இந்தியா,பங்களாதேஷ், இங்கிலாந்து, பாகிஸ்தான்,ரசியா,யப்பான், அமெரிக்கா,மலேசியா மற்றும் கென்யா என்பன பிரதான இடம் வகிக்கின்றன.



## 3.3. விளையாட்டு நிகழ்ச்சிகள்

இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றும் தங்களது மாவட்டத்தின் இளைஞர் யுவதிகளுக்கு கீழே குறிப்பிடப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள போட்டித் தன்மையான விளையாட்டு நிகழ்ச்சிகள் மற்றும் விளையாட்டுப் பயிற்சி நிகழ்ச்சிகள் என்பவற்றை முகாமிடல் காலப்பகுதியில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டு உள்ளதுடன், அதற்காக தகைமை பெற்றுள்ள, உடற்றகைமைகளைக் கொண்டுள்ள இளைஞர் குழுக்களைத் தெரிவு செய்து அவர்களை அதற்காக அறிவூட்டி முகாமிற்காக பங்குபற்றச் செய்யுமாறு இத்தால் அறியத் தருகின்றேன்.

மேற்படி நிகழ்ச்சித் திட்டத்திற்காக தங்களது மாவட்டத்திலிருந்து இளைஞர் யுவதிகளைப் பங்குபற்றச் செய்யும்போது அறிமுகம் செய்யப்பட்டு உள்ள 01,02,03 ஆம் இலக்க மாதிரிப் படிவங்களைப் பயன்படுத்தி அவர்களை அனுப்ப வேண்டியதுடன், போட்டித் தன்மையில் நடாத்தப்படும் சகல போட்டிகளினதும் விண்ணப்பப்படிவங்கள் 2018 மார்ச் மாதம் 28 ஆந்திகதி பி.ப.6.00 மணிக்கு யொவுன்புர வளாகத்தில் விளையாட்டுத்துறைப் பிரிவிலுள்ள போட்டிகள் செயலகத்திற்கும்,இளைஞர் யுவதிகளைப் பங்குபற்றச் செய்ய வேண்டிய ஏனைய நிகழ்ச்சிகளின் பெயர்ப்பட்டியல் உரிய இடத்திலுள்ள ஒருங்கிணைப்பு அலுவலரிடமும் கட்டாயமாக சமர்ப்பித்தல் வேண்டும்.

## நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கும் நிகழ்ச்சித்திட்டங்கள்

| நிகழ்ச்சித்திட்டம் | எதிர்பார்க்கப்படும் மொத்த இளைஞர்களின் பங்களிப்பு |
|---|---|
| காலை நேர தேகாரோக்கிய நிகழ்ச்சி | யொவுன்புர நிகழ்ச்சியில் பங்குபற்றும் சகல இளைஞர் யுவதிகளும் |
| வெளிக்கள சவால்களுக்குரிய செயற்பாடுகள் | 2000 |
| மினி மரதன் ஓட்டப் போட்டி (பெண்/ஆண்) | 540 |
| பெண்/ஆண் கலப்பு வொலிபோல் போட்டித்தொடர் | 315 |
| கயிறு இழுத்தல் போட்டி (பெண்/ஆண்) | 520 |
| விளையாட்டுக்கு அடிப்படையான முதலுதவிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 260 |
| ஹேண்ட் போல் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 260 |
| த்ரோ போல் விளையாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 260 |
| படகுகளை நிர்மாணித்தல் மற்றும் அவற்றினை செலுத்தும் போட்டி | 260 |

### 3.3.1. நாளாந்த உடல் நல நிகழ்ச்சி

முகாமில் கலந்துகொள்ளும் சகல இளைஞர் யுவதிகளுக்குமாக ஒவ்வொரு நாளும் இந்த உடல்நல நிகழ்ச்சி காலை மு.ப.6.00 மணி தொடக்கம் 7.00 மணி வரை நடாத்தப்பட இருப்பதுடன், அதற்குப் பொருத்தமான விளையாட்டுகளுக்கான ஆடைகள் மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதணிகளைக் கொண்டுவருவதற்கு பங்குபற்றும் இளைஞர் யுவதிகளை அறிவூட்டுதல் வேண்டும்.

### 3.3.2. வீதி அஞ்சலோட்டப் போட்டி (பெண்/ஆண்)

முகாமை அண்டிய 10 கிலோ மீற்றர்கள் தூர அளவினைக்கொண்ட "மினி மரதன்" அஞ்சலோட்டப் போட்டியொன்றாக நடாத்துவதற்கு இப்போட்டி திட்டமிடப்பட்டுள்ளதுடன் அதற்காக போதிய உடற்றகைமை கொண்ட 10 பேர்களை உள்ளடக்கிய பெண்கள் மற்றும் ஆண்கள் இரு குழுக்களை ஆயத்தமாக்க வேண்டியதுடன் ஒரு வீரர் அல்லது வீராங்கணை ஒரு கிலோ மீற்றர் தூர அளவு ஓட்டத்தில் ஈடுபட வேண்டும்.

மாதிரிப்படிவ இலக்கம் 01 இனைப் பயன்படுத்தவும்.

### 3.3.3. கயிறு இழுத்தல் போட்டிகள் (ஆண்/பெண்)

முகாமில் தரிக்கும் காலப்பகுதியில் ஆண்கள் மற்றும் பெண்கள் என்ற வகையில் கயிறு இழுத்தல் போட்டிகள் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ள பிரதேசத்தில் நடாத்தப்படும்.அதற்காக வீரர்கள் மற்றும் வீராங்கனைகளாக 10 பேர்கள் ஆண்கள் மற்றும் பெண்கள் என்ற வகையில் இரு குழுக்களை ஆயத்தமாக்கி முகாமில் பங்குபற்றச்செய்தல் வேண்டும். மாதிரிப்படிவ இலக்கம் 01 இனைப் பயன்படுத்தவும்.

ஆண்கள் போட்டியின் நிறையின் அளவு 680 கி.கிராம் ஆவதுடன் பெண்களின் நிறையின் அளவு 600 கி.கிராம்களும் ஆகும்.

### 3.3.4. மின் மரதன் ஓட்டப் போட்டி (பெண்கள்/ஆண்கள்)

இந்தப் போட்டி யொவுன்புர வளாகத்திற்கு வெளியே நிகவெரட்டிய பிரதான வீதியில் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் அதற்காக 10 பேர்களைக் கொண்ட பெண்கள் குழு ஒன்றும் ஆண்கள் குழு ஒன்றும் ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் பங்குபற்றச் செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

### 3.3.5. வெளிக்கள சவாலுக்குரிய செயற்பாடுகள்

இந்த நிகழ்ச்சி யொவுன்புர வளாகத்தில் இலங்கை இராணுவப் படையினரின் நெறிப்படுத்தலின் கீழ் மேற்கொள்ளப்படுவதுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகையில் பங்குபற்றச் செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது. உரிய நிகழ்ச்சித்தட்டம் யொவுன்புர நடைபெறும் காலப்பகுதியில் 2 ½ நாட்களுக்குள் நடைபெறும்.

### 3.3.6. விளையாட்டிற்கான அடிப்படை முதலுதவிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்.

யொவுன்புர நிகழ்ச்சி நடைபெறும் காலப்பகுதியில் 05 நிகழ்ச்சிகளாக இந்த அடிப்படை முதலுதவிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் ஒரு நிகழ்ச்சித்திட்டத்திற்காக அது தொடர்பாக ஆர்வத்தினை வெளிப்படுத்தும் இளைஞர் யுவதிகள் இரண்டு பேர் வீதம் 05 நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 10 பேர் தெரிவு செய்யப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3.3.7. ஹேண்ட் போல் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்.

யொவுன்புர நிகழ்ச்சி நடைபெறும் காலப்பகுதியில் 05 நிகழ்ச்சிகளாக இந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் ஒரு நிகழ்ச்சித்திட்டத்திற்காக அது தொடர்பாக ஆர்வத்தினை வெளிப்படுத்தும் இளைஞர் யுவதிகள் இரண்டு பேர் வீதம் 05 நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 10 பேர் தெரிவு செய்யப்படல் வேண்டும்.

நிகழ்ச்சித்தட்டத்திற்காக கலந்துகொள்ளும்போது செயன்முறைப் பயிற்சிக்காக பொருத்தமான ஆடை ஒன்றினை பங்குபற்றுபவர்கள் அணிந்து இருத்தல் வேண்டும்.

### 3.3.8. த்ரோ போல் விளையாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

யொவுன்புர நிகழ்ச்சி நடைபெறும் காலப்பகுதியில் 05 நிகழ்ச்சிகளாக இந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் ஒரு நிகழ்ச்சித்திட்டத்திற்காக அது தொடர்பாக ஆர்வத்தினை வெளிப்படுத்தும் இளைஞர் யுவதிகள் இரண்டு பேர் வீதம் 05 நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 10 பேர் தெரிவு செய்யப்படல் வேண்டும்.

### 3.3.9. படகுகளை நிர்மாணித்தல் மற்றும் அவற்றினை செலுத்தும் போட்டி

இந்த நிகழ்ச்சித்திட்டம் யொவுன்புர வளாகத்திற்கு அடுத்ததாக உள்ள வாவியினை மையமாகக்கொண்டு போட்டித் தன்மையான விதத்தில் நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் இந்தப் போட்டிக்காக தங்களது மாவட்டத்தில் இருந்து 05 இளைஞர்கள் மற்றும் 05 யுவதிகள் என்ற வகையில் 10 பேர்களைக் கொண்ட குழு கலந்துகொள்ளல் வேண்டும்.

இங்கு பங்குபற்றுபவர்களுக்கு நீச்சல் திறமை இருப்பின் பொருத்தமாக இருக்கும்.

### 3.3.10. ஆண்/பெண் கலப்பு வொலிபோல் போட்டித்தொடர்

தங்களது மாவட்டத்திலிருந்து பங்குபற்றும் இளைஞர் யுவதிகளில் பெண்கள் மற்றும் ஆண்கள் கலந்த வொலிபோல் போட்டித்தொடர் ஒன்றினை முகாமிடல் காலப்பகுதியில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளதுடன், மேற்படி போட்டிக்காக தங்களது மாவட்டத்திலிருந்து 06 பெண்கள் மற்றும் 06 ஆண்களைக்கொண்ட கலப்பு வொலிபோல் குழு ஒன்றினை ஆயத்தமாக வைத்து சமூகமளித்தல் வேண்டியதுடன் போட்டிகள் தொடர்பான குறிப்புக்கள் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட உள்ளன. மாதிரிப்படிவ இலக்கம் 01 இனை பயன்படுத்தவும்.

### 3.3.11 அம்பு எறியும் நுட்ப முறைப் பயற்சிப் பாடநெறி

யொவுன்புர நிகழ்ச்சி நடைபெறும் காலப்பகுதியில் 05 நிகழ்ச்சிகளாக இந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் ஒரு நிகழ்ச்சித்திட்டத்திற்காக அது தொடர்பாக ஆர்வத்தினை வெளிப்படுத்தும் இளைஞர் யுவதிகள் இரண்டு பேர் வீதம் 05 நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 10 பேர் தெரிவு செய்யப்படல் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ச்சித்தட்டத்திற்காக கலந்துகொள்ளும்போது செயன்முறைப் பயிற்சிக்காக பொருத்தமான ஆடை ஒன்றினை பங்குபற்றுபவர்கள் அணிந்து இருத்தல் வேண்டும்.

**மாதிரிப்படிவ இல. 01**

## யொவுன்புரய- 2018 நிகவெரட்டிய
## விளையாட்டு நிகழ்ச்சித்திட்டங்களுக்காக குழுக்களைப் பங்குபற்றச் செய்யும் விண்ணபப்படிவம்

மாவட்டம் :- ..................................................................

போட்டி நிகழ்ச்சிகள்

I. வீதி அஞ்சலோட்டப் போட்டி (பெண்கள்/ஆண்கள்)

II. கயிறு இழுத்தல் போட்டி (பெண்கள்/ஆண்கள்)

III. கலப்பு வொலிபோல் போட்டி

IV. ஓடங்களை நிர்மாணித்தல் மற்றும் அவற்றினை செலுத்தும் போட்டி

| தொடர் இலக்கம் | விளையாட்டு வீரர்/ வீராங்கனையின் பெயர் | பிரதேச செயலாளர் பிரிவு | தேசிய அடையாள அட்டை இலக்கம் | கையொப்பம் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள விளையாட்டு வீராங்கனைகள்............................................ மாவட்டத்தில் இருந்து யொவுன்புர 2018 நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றுபவர்கள் என்பதனை உறுதிப்படுத்துவதுடன், இந்த சகல விளையாட்டு வீரர் வீராங்கனைகளும் எமது மாவட்டத்தில் நிரந்தரமாக வசிக்கும் இளைஞர் கழக உறுப்பினர்கள் என்பதனையும் உறுதிப்படுத்துகின்றோம்.

உதவிப் பணிப்பாளரின் பெயர் ..........................

கையொப்பம் ..........................

திகதி ..........................

மாவட்ட சம்மேளனத் தலைவர்/
யொவுன்புர நகர சபை உறுப்பினரின் பெயர் ..........................

கையொப்பம் ..........................

திகதி ..........................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதிரிப்படிவ இல 02

## யொவுன்புரய- 2018 நிகவெரட்டிய
## விளையாட்டு நிகழ்ச்சித்திட்டங்களுக்காக குழுக்களைப் பங்குபற்றச் செய்யும் விண்ணப்பப்படிவம்

மாவட்டம் :- ..................................................................

போட்டி நிகழ்ச்சிகள்

I. வெளிக்கள செயற்பாடுகள் மற்றும் வீரதீரச் செயற்பாடுகள்
II. ஹேண்ட் போல் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்
III. த்ரோ போல் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்
IV. முதலுதவிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

| தொடர் இலக்கம் | விளையாட்டு வீரர்/ வீராங்கனையின் பெயர் | பிரதேச செயலாளர் பிரிவு | தேசிய அடையாள அட்டை இலக்கம் | கையொப்பம் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள விளையாட்டு வீராங்கனைகள்.............................................. மாவட்டத்தில் இருந்து யொவுன்புர 2018 நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றுபவர்கள் என்பதனை உறுதிப்படுத்துவதுடன், இந்த சகல விளையாட்டு வீரர் வீராங்கனைகளும் எமது மாவட்டத்தில் நிரந்தரமாக வசிக்கும் இளைஞர் கழக உறுப்பினர்கள் என்பதனையும் உறுதிப்படுத்துகின்றோம்.

உதவிப் பணிப்பாளரின் பெயர் ..........................

கையொப்பம் ..........................

திகதி ..........................

மாவட்ட சம்மேளனத் தலைவர்/
யொவுன்புர நகர சபை உறுப்பினரின் பெயர் ..........................

கையொப்பம் ..........................

திகதி ..........................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.4. கலாச்சார போட்டிகள் மற்றும் நிகழ்ச்சிகள்



**போட்டிப் பிரிவுகள் மற்றும் நிகழ்ச்சிகள்**

01 சிறந்த இளம் பாடகர்

02 ஆக்கபூர்வமான நடனம்

03 நாட்டார் பாடல் (சிங்களம் / தமிழ்)

04 இன்னிசை ரசனை நிகழ்ச்சி (சிங்களம் / தமிழ்)

05 வெளியீட்டுச் சித்திரங்கள்

06 இளைஞர் அழகன் / அழகி

மாவட்ட இளைஞர் பங்குபற்றுதலிற்கு ஏற்ப சதவிகிதமாக உரிய போட்டிகளுக்காக தெரிவுசெய்யப்படுவர்.

### 3.4.1. சிறந்த இளம் பாடகர்

பாட்டுப்பாடல் தொடர்பான ஆர்வமும் திறமையுமுள்ள இளைஞர் யுவதிகளை சிரேஷ்ட நடுவர் குழுவொன்றின் முன்னிலையில் 2018 யொவுன்புர சிறந்த பாடகன் மற்றும் யொவுன்புர சிறந்த பாடகியாக கௌரவித்தல்.
பாடல் போட்டியில் முதலாம் இடத்தினைப் பெற்றுக்கொள்ளும் வெற்றியாளருக்கு யொவுன்புர வளாகத்தில் நடாத்தப்படும் கண்காட்சி மேடையில் பாடுவதற்காக சந்தர்ப்பம் ஒன்றினை வழங்க உத்தேசிக்கப்பட்டு உள்ளது.

- ❖ தகைமைகள் - பாடுவது தொடர்பான ஆர்வம் மற்றும் ஆற்றல்
- ❖ முன்வைத்தல் – மாவட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ள விகிதத்திற்கு ஏற்ப விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள போட்டியாளர்களுக்காக
- ❖ நடுவர்கள் குழு – சிரேஷ்ட பாடகர்கள் மற்றும் இசைக் கலைஞர்கள்
- ❖ முன்வைக்கப்பட வேண்டிய பாடல்கள் மற்றும் எண்ணிக்கைகள் - 03 பிரபல பாடல்களைப் பாடுவதற்கான ஆயத்தத்துடன் வருதல் வேண்டும்.
- ❖ பரீட்சிப்பு செய்தல் - தாளம், சுருதி அலங்காரத்திற்கேற்ப பாடுதல், பாடும் திறன், எளிமையான தன்மை, ஆயத்தம்,திறமை
- ❖ இசை – கலாச்சாரப் பிரிவின் மூலம் வழங்கப்படும்.

### 3.4.2. நடனப் போட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆக்கபூர்வமான நடனம் (இணைந்த ) –**

- ❖ ஆக்கத்திற்கான நேரம் – நிமி 03 – 05 இற்கு இடைப்பட்டிருத்தல் வேண்டும்.

- ❖ ஆக்கத்தினை நேரடியாகவோ அல்லது ஒலிப்பதிவு செய்யப்பட்ட இசை வாத்தியத்திற்கு ஏற்பவோ முன்வைக்க முடியும்.

- ❖ நேரடியாகவோ அல்லது ஒலிப்பதிவு செய்யப்பட்ட இசை வாத்தியத்திற்கு ஏற்பவோ முன்வைக்கப்படின் அதற்குத் தேவையான இருவட்டு (CD) ,பொருட்கள்,பண்டங்கள், நடனத்திற்கான ஆடை அணிகலன்களை தாமே கொண்டுவருதல் வேண்டும்.

- ❖ CD/DVD தட்டுக்கள் மற்றும் PEN DRIVE கொண்டுசெல்லும் பொறி ஒன்று வழங்கப்படும்

## 3.4.3. யொவுன்புர அழகன் மற்றும் அழகி

நாடு பூராகவும் பரவிக் காணப்படும் அழகான உடல் உருவ அமைப்பு பற்றிய ஆர்வமுள்ள அழகிகள் மற்றும் கம்பீரமான தோற்றமும் ஆளுமையுமுள்ள அழகர்களையும் அழகிகளையும் சிரேஷ்ட நடுவர்கள் முன்னிலையில் மதிப்பிட்டு கிறீடம் அணிவித்தல்.

- ❖ தேவையான ஆடை அணிகலன்களை தாமே கொண்டு வருதல் வேண்டும்.(அழகி – ஒசரி / அழகன் – தேசிய ஆடை)

- ❖ போட்டி பல சுற்றுக்களாக நடைபெறும்.

- ❖ நடுவர்கள் குழு - அழகு ஒப்பனைத் துறையில் சிரேஷ்டர்களான நடுவர்களின் மூலம் மத்தியஸ்தம் வகிக்கப்படும்.

- ❖ பங்குபற்றுபவர்கள் இளைஞர் அழகர்கள் -26 பேர் –யுவதி அழகிகள் – 26 பேர் எதிர்பார்க்கப்படுகின்றது. மாவட்டத்தின் உள்ளே நடாத்தப்படும் ஆரம்பப் போட்டி ஒன்றிலிருந்து ஆண் போட்டியாளர் ஒருவரினையும் பெண் போட்டியாளர் ஒருவரினையும் தெரிவு செய்து பெயரிடுதல் பொருத்தமானதாகும்.

### 3.4.4. இன்னிசை ரசனை நிகழ்ச்சி

ஆக்கபூர்வத்தன்மை மற்றும் இரசனை என்பவற்றில் ஆர்வமுள்ள இளைஞர் யுவதிகளுக்கு மேற்படி நிகழ்ச்சித் திட்டத்திற்காக பங்குபற்றும் ஆற்றல் உள்ளது. இசைத்துறையில் சிரேஷ்டர் ஒருவரினால் நிகழ்ச்சி நடாத்தப்படுவதுடன், சிங்கள மற்றும் தமிழ் பாடல் வடிவமைப்பு தொடர்பாக ஆழமான விளக்கமளித்தல் ஒன்று இங்கு மேற்கொள்ளப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழி மூலங்களில் வெவ்வேறாக தெரிவுசெய்யப்பட்ட இடம் ஒன்றில் இரண்டு நிகழ்ச்சிகளாக நடாத்தப்படும்.

(பங்குபற்றுபவர்கள் – சிங்கள மொழி மூலம் - 187, தமிழ் மொழி மூலம்- 100)

### 3.4.5 வெளியீட்டுச் சித்திரங்கள் போட்டி

வெளியீட்டுச் சித்திரங்களின் ஆக்கம் தொடர்பாக ஆர்வம் காட்டும் இளைஞர் யுவதிகளுக்காக இந்த நிகழ்ச்சி நடாத்தப்படும்.. (பங்குபற்றுபவர்கள் ஆகக் குறைந்தது 52)

- சித்திரத்தின் அளவு 17x24 ஆக இருத்தல் வேண்டும்.
- எண்ணெய்ச் சாயம் ( பெஸ்டல்) பயன்படுத்த முடியும்.
- சித்திரம் வெளியீட்டு வகைக்கு உரித்தாதல் வேண்டும்.
- ஏற்பாட்டுக் குழுவினால் வழங்கப்படும் தாளில் வரையப்பட்ட சித்திரத்தினை உரிய தினத்தில் உரிய இடத்திற்கு நீங்கள் ஒப்படைத்தல் வேண்டும்.
- உரிய சித்திரங்கள் காட்சிப்படுத்தப்படுவதுடன் பிரதான நடுவர்கள் சபை ஒன்றினால் சிற்நத சித்திரம் தெரிவு செய்யப்படும்.

### 3.4.6 நாட்டார் பாடல்கள் (சிங்களம் / தமிழ்)

நாட்டார் பாட்டுப்பாடல் தொடர்பான ஆர்வமும் திறமையுமுள்ள இளைஞர் யுவதிகளை சிரேஷ்ட நடுவர் குழுவொன்றின் முன்னிலையில் 2018 யொவுன்புர சிறந்த பாடகன் மற்றும் யொவுன்புர சிறந்த பாடகியாக (சிங்களம் / தமிழ்) கௌரவித்தல்.

### 3.4.7. கலாச்சாரக் கண்காட்சி நிகழ்ச்சிகளை முன்வைத்தல்.(இசை/நடனம்)

2018 எத்துகல்புர யொவுன்புர நிகழ்ச்சியுடன் இணைந்த வகையில் நடாத்தப்படும் கலாச்சாரக் கண்காட்சிகளை நடாத்துதல் கீழே குறிப்பிடப்பட்டவாறு நடைபெறும்.

- 2018.03.27 இரவு 8.00 மணிக்கு Youth Extream இசைக் குழுவினால் நடாத்தப்படும் இன்னிசை நிகழ்ச்சி கண்காட்சி வளாகத்தில்
- 2018.03.29 இரவு 8.00 மணிக்கு இலங்கை இராணுவ வீரர்களின் இசை / நடனக் குழுவினால் நடாத்தப்படும் இன்னிசை நிகழ்ச்சி - யொவுன்புர வளாகத்தில்
- 2018.03.30 இரவு 8.00 மணிக்கு இலங்கை வான்படை வீரர்களின் இசை /நடனக் குழுவினால் நடாத்தப்படும் இன்னிசை நிகழ்ச்சி - யொவுன்புர வளாகத்தில்
- 2018.03.31 இரவு 8.00 மணிக்கு Youth Extream இசைக்குழு நடாத்தும் இசை நிகழ்ச்சி - - யொவுன்புர வளாகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| அலுவலக உபயோகத்திற்கு | |

## 2018 யொவுன்புர கலாச்சார நிகழ்ச்சிகள் விண்ணப்பப் படிவம்

**போட்டிப் பிரிவு (உரிய போட்டிப் பிரிவினை அடையாளமிடுக)**

| | | |
|---|---|---|
| யொவுன்புர- சிறந்த பாடகர் | | யொவுன்புர- சிறந்த நடனம் |
| யொவுன்புர – அழகன் | | நாட்டார் பாடல் - சிறந்த பாடகர் (சிங்களம்/தமிழ்) |
| யொவுன்புர – அழகி | | இசை விருந்து நிகழ்ச்சி (சிங்களம்/தமிழ்) |
| வெளியீட்டுச் சித்தரப் போட்டி | | |
| 1. | விண்ணப்பதாரியின் பெயர் | |
| 2. | முகவரி | |
| 3. | பிறந்த திகதி | |
| 4. | வயது | |
| 5. | அடையாள அட்டை இலக்கம் | |
| 6. | மாவட்டம் | |
| 7. | பிரதேச செயலாளர் பிரிவு | |
| 8. | இளைஞர் கழகம் | |
| 9. | தொலைபேசி இலக்கம் | |

மேற்படி தகவல்கள் யாவும் சரியானது எனவும் மற்றும் உண்மையானது எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

| | |
|---|---|
| விண்ணப்பதாரியின் கையொப்பம் | |


மேற்படி ................................ இளைஞர் / யுவதி இளைஞர் கழகத்தின் உறுப்பினர் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்.

| | |
|---|---|
| இளைஞர் சேவைகள் அலுவலர்<br>(..........................................) | மாவட்ட இளைஞர் சேவைகள் அலுவலர்<br>(..........................................) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.5. சிரமதான நிகழ்ச்சிகள்




இளைஞர் யுவதிகளில் உழைப்பின் அபிமானம் தொடர்பான உணர்வினை விருத்தி செய்தல் மற்றும் சிரமதான நடைபெறும் இடங்களில் பிரதேசத்தினை அலங்கரித்தல் என்பவற்றின் ஊடாக அங்கு வசிப்பவர்களின் உளவியல் மற்றும் சூழலியல் கூருணர்வினை விருத்தி செய்தல். சூழலை தூய்மையாக்குவதன் ஊடாக ஆரோக்கியமாக வாழ்தல் மற்றும் தமது சுற்றுப்புறச் சூழலை தூய்மையாகவும் அழகாகவும் வைத்துக்கொள்ளல் தொடர்பாக புரிந்துணர்வு ஒன்றினை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளல்.

### சிரமதானங்கள் நடைபெறும் இடங்கள்

- முதியோர் இல்லம் மற்றும் விகாரை கலவெவ
- சிரி சங்கரக்கித ஆரம்பப் பிரிவெனா மற்றும் சிறுவர் இல்லம்
- ஆதார வைத்தியசாலை நிக்கவெரட்டிய
- வித்திக்குலிய வித்தியாலயம்
- மில்லகொட வித்தியாலயம்
- மாகல்ல வாவி
- தம்சக் வெஹர விகாரை,வன்னிகம
- வேலிகளை அமைத்தல் - NLDB விவசாயப் பண்ணை
- கும்புக்வெவ மகா வத்தியாலயம்

## 3.6. மரம் நடுகை



"வன நடுகை" நிகழ்ச்சித் திட்டத்திற்கு பங்களிப்பினை வழங்குதல் மற்றும் அரசின் தேசிய உணவுப் பயிர்கள் உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கும் பங்களிப்பினை வழங்குதல்., வனச் செய்கையினை அதிகரித்தலின் ஊடாக வருமானம் ஈட்டல் மற்றும் போசாக்கினை விருத்தி செய்தல். இளைஞர் யுவதிகளுக்கு மரம் நடுகையின் முக்கியத்துவம் மற்றும் அவர்களை அவர்களது சுற்றுப்புறச் சூழலில் பயிரிடுதல் என்பவற்றின் பால் ஆர்வமூட்டல் என்பன மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் இலக்காகக் கொள்ளப்படுகின்றன.,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மரம் நடுகை இடம்பெறும் இடங்கள்**

- எலவெக கிராம அலுவலர் பிரிவு - (குடும்பங்கள் 320)
- வித்திகுலிய கிராம அலுவலர் பிரிவு - (குடும்பங்கள் 462)
- வன்னிகம கிராம அலுவலர் பிரிவு - 1304 (குடும்பங்கள் 390)
- சிறி சங்கரக்கித ஆரம்பப் பிரிவெனா மற்றும் சிறுவர் இல்லம்
- NLDB Farm நிக்கவெரட்டிய
- வித்திக்குலிய வித்தியாலயம்
- மாகல்லேகம வித்தியாலயம்
- ரம்ப்பொகுண கனிஷ்ட வித்தியாலயம்

## 3.7. ஆய்வு நிகழ்ச்சிகள்



இளைஞர் யுவதிகளில் குழு உணர்வினை ஏற்படுத்துதல் மற்றும் ஆய்வுத் திறன்களை விருத்தி செய்தல். இளைஞர் யுவதிகளில் சமூக ரீதியான அறிவினை விருத்திசெய்தல். இலங்கையில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள் தொடர்பாக அறிவூட்டுதல். பரம்பரை ரீதியான மற்றும் தொல்பொருளியல் ரீதியான புத்தாக்கங்கள் தொடர்பாக இளைஞர் யுவதிகளுக்கு அறிவினையும் மற்றும் புரிந்துணர்வினையும் வழங்குதல்.

**ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் இடங்கள்**

- யாப்பகுவ இராசதானி
- பண்டுவஸ்நுவர இராசதானி
- NLDB Farm , தோனிகல கிரிலிபிய
- பரமாகந்த ரஜமகா விகாரை

## 3.8. விவசாய வியாபாரக் கூடங்கள்



இளைஞர்கள் மற்றும் யுவதிகளை விவசாயத்தின் ஊடாக வருமானம் ஈட்டும் வழிமுறை தொடர்பாக அறிவூட்டல்.தொழில்முயற்சி தொடர்பான அறிவினை விருத்தி செய்தல்.இளைஞர் யுவதிகளை விவசாயத்தில் ஈடுபடச் செய்தல் மற்றும் விவசாயப் பாடநெறிகள் தொடர்பாக அறிவூட்டல் என்பவற்றின் ஊடாக அவர்களுக்கு தொழிற் பயிற்சியினை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்களை வழங்குதல்.

மத்திய நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ள விற்பனை நிலையங்கள் தொடர்பான தகவல்கள் :-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தொடரிலக்கம் | மத்திய நிலையம் | வியாபாரக் கூடங்களில் மேற்கொள்ளப்படும் பணி |
|---|---|---|
| 01 | பன்னல | ஐஸ் கிறீம், பழச் சாறுகள் |
| 02 | எரமினியாய | புருட் செலட், புருட் ஜூஸ், பாபிர் கியு |
| 03 | படங்கல | அரிசி மா வெள்ளை அப்பம் மற்றும் முட்டை அப்பம் |
| 04 | தம்புள்ள | பழப்பானங்கள் |

## 3.9. தொழில் முயற்சியாண்மை,வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கல் நிகழ்ச்சிகள்



இளைஞர் கூட்டுறவு மற்றும் வியாபார அபிவிருத்திப் பிரிவினால் தங்களுக்கு

- வயது. 15-35 வருடங்கள் வரையான இளைஞர் யுவதிகளுக்கு நிஸ்கோ இளைஞர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்புரிமையினைப் பெற்றுக்கொள்வலாம்.
- சுயதொழில்களில் ஈடுபடுவதற்கு எதிர்பார்க்கும் இளைஞர் யுவதிகளுக்கு வியாபார முகாமைத்துவம் தொடர்பான அறிவினை வழங்குதல் மற்றும் வியாபாரத்திற்காக ஊக்குவித்தல்.
- கடன் பெற்றுக் கொள்வதற்காக வங்கிக்கு வழிகாட்டுதல்.
- தொழில்முயற்சிப் பயிற்சி நிகழ்ச்சிகளுக்காக பதிவு செய்தல்.
- ஏற்கனவே வியாபாரங்களை ஆரம்பித்து இருக்கும் வியாபாரிகளுக்காக நடைமுறைப்படுத்தப்படும் மாவட்ட வியாபாரக் குழுமத்திற்காக பதிவு செய்தல்.
- வியாபாரத் துறையின் பல்வேறு பிரிவுகளுக்காக பயன்படுத்தப்படும் புதிய தொழிநுட்ப உபாய முறைகள் மற்றும் உபகரணங்களின் பாவனை தொடர்பான தகவல்கள் மற்றும் அறிவினை வழங்குதல்.
- இளமையான தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகள் மற்றும் விற்பனை என்பவற்றினை மேற்கொள்வதற்காக சந்தை வசதிகளை வழங்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.10. வர்த்தகக் கண்காட்சி மற்றும் களியாட்டம்

யொவுன்புர நிகழ்ச்சியில் பங்குபற்றும் இளைஞர் யுவதிகளினதும் மற்றும் குருணாகல் பிரதேச மக்களின் விஷேட தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளல் என்பவற்றிற்காகவும் பொழுதுபோக்குச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்காகவும் வர்த்தகக் கண்காட்சி மற்றும் களியாட்டம் என்பன நடாத்தப்படும்.

### தொழில் முயற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

மேற்படி யொவுன்புர நிகழ்ச்சித் திட்டத்திற்காக கலந்துகொள்ளும் இளைஞர் யுவதிகளில் தெரிவுசெய்யப்பட்ட ஒரு குழுவினரை சுயதொழிலில் ஈடுபடுத்துவதற்கு அவர்களுக்கு வியாபாரப் பயிற்சியினை வழங்கி வங்கிக் கடனைப் பெற்றுக்கொள்வதற்காக அவர்களை முன்னளிப்பதும் மேற்படி கருத்திட்டத்தின் ஊடாக எதிர்பார்க்கப்படுகின்றது.

## 3.10.1. இளைஞர் யுவதிகளுக்கு சுயதொழிலுக்காக வழிகாட்டல்

3.10.1.1 யொவுன்புர நிகழ்ச்சியினை சார்ந்த வகையில் சுயதொழில்கள் தொடர்பான ஒரு நாள் தொழிநுட்பப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.900 இளைஞர் யுவதிகளுக்காக

- மெழுகுதிரி உற்பத்தி
- ஊதுவத்தி உற்பத்தி
- கழிவுப்பொருட்கள் மீள்சுழற்சி

உட்பட சுயதொழில் கருத்திட்டங்கள் 30 இதன் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

**3.10.1.2 தொழில் முயற்சிகள்தொடர்பான அறிவூட்டும் செயலமர்வுகளை நடைமுறைப்படுத்தல் – 800 இளைஞர் யுவதிகளுக்காக**

**3.10.1.3 யொவுன்புர நிகழ்ச்சித்திட்டதுடன் இணைந்த வகையில் இளைஞர் யுவதிகளுக்கு வியாபாரங்களுக்காக வழியமைத்தல், தேவையான வழிகாட்டுதல்கள் ,வசதிகளை வழங்குதல் - 500 இளைஞர் யுவதிகளுக்காக**

வடமேல் மாகாணத்திலுள்ள 2 மாவட்டங்களில் இருந்து 100 இளைஞர் யுவதிகளைத் தெரிவு செய்து தொழில்முயற்சிப் பயிற்சிகளை வழங்கி வங்கிக்கு அனுப்பி வியாபாரத்தினை ஆரம்பிப்பதற்காக நிதி வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல். நாடளாவிய ரீதியில் எஞ்சியுள்ள 24 மாவட்டங்களில் இருந்து 20 இளைஞர் யுவதிகளைத் தெரிவு செய்து வங்கிக்கு அனுப்பி நிதி வசதிகளை வழங்கி வியாபாரத்தை ஆரம்பிப்பதற்காக வழியமைத்துக் கொடுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3.10.2. யொவுன்பர பிரதேசத்தினை அருகில் சிறு சந்தைகள் (மினி மார்க்கெட்)

- யொவுன்புர வாசிகளுக்குத் தேவையான மீன் இறைச்சி வகைகள்
- யொவுன்புர வாசிகளுக்குத் தேவையான சகல காய்கறி வகைகள்
- யொவுன்புர வாசிகளுக்குத் தேவையான ஏனைய நுகர்வுப் பொருட்கள் (அரிசி,உலர் உணவுப்பொருட்கள்,சவர்க்காரம்,பற்பசை தேவையான தொலைபேசி முன் செலுத்துகை அட்டைகள் ஆகியன)
- யொவுன்புர வாசிகளுக்குத் தேவையான அலங்கார அணிகலன்கள் பரிசுப் பொருட்கள்
- யொவுன்புர வாசிகளுக்குத் தேவையான பல்வேறு உணவுப்பொருட்கள் மற்றும் குடிபான வகைகள்
- யொவுன்புர வாசிகளுக்குத் தேவையான ஆடை வகைகள் மற்றும் பாதணி வகைகள்

## 3.11 தொழில் சந்தை தொழில்சார் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை நிகழ்ச்சித்திட்டங்கள்

யொவுன்புர 2018 நிகழ்ச்சித்திட்டதுடன் இணைந்த வகையில் தொழில்சார் வழிகாட்டல் தொடர்பான அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஆலோசனை சேவை நிகழ்ச்சித்திட்டங்கள் என்பன நடைமுறைப்படுத்தப்படும்.

I. வேலை உலகின் புதிய வாய்ப்புக்கள்,நேர்முகப் பரீட்சைக்கு வெற்றிகரமாக முகங்கொடுப்பது எவ்வாறு? என்பது தொடர்பாக அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் நடைமுறைப்படுத்தப்படும்.

II. தனக்கு மன அழுத்தத்தைக் கொடுக்கும் அல்லது வேறு யாரிடமும் கூற முடியாத கஷ்டங்கள்,உள அழுத்தங்கள் என்பவற்றிற்காக ஆலோசனை ரீதியான நிவாரணம் ஒன்றினை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் யொவுன்புர நிகழ்ச்சியில் பங்குபற்றும் அவ்வாறான சிறிய மன அழுத்தங்கள் தொடக்கம் தீர்வு காண முடியாத உள அழுத்தங்கள் வரையான நிலைமைகளுக்கு நிவாரணம் ஒன்றினைப் பெற்றுக்கொள்வதற்காக உச்ச அளவில் இரகசியத் தன்மை பேணப்படுவதுடன் உளவியல் மருத்துவ ரீதியான ஆலோசனைச் சேவைகளும் யொவுன்புர நிகழ்ச்சியுடன் இணைந்த வகையில் நடைமுறைப்படுத்தப்படுவதனால் அவற்றிலும் உங்களுக்கு பங்குபற்ற முடியும்..

## 3.12 யொவுன்புர புகைப்படப் போட்டித்தொடர் மற்றும் கண்காட்சி

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் தொனிப்பொருள் "சமாதானம் மற்றும் அபிவிருத்தி" ஆகும். விஷேடமாக தற்கால சமூகத்தில் கலந்துரையாடப்படும் சமாதானம் மற்றும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகவாழ்வு தொடர்பான கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதற்கு மேடை ஒன்று இம்முறை யொவுன்புர நிகழ்ச்சியில் அமைத்தல் வேண்டும். இதற்கமைய பல்வேறு ஊடகங்கள் மற்றும் வழிமுறைகள் என்பவற்றின் ஊடாக இளைஞர்களின் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகள் மற்றும் அவர்களின் எதிர்பார்ப்புக்கள் என்பவற்றினை முன்வைப்பதற்கு யொவுன்புர நிகழ்ச்சியில் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

இதற்கு அமைய புகைப்பட ஊடகத்தினைப் பயன்படுத்தி சமாதானத்திற்கான இளைஞர்களின் கடமைப்பொறுப்புக்கள் தொடர்பாக சமூக எண்ணக்கரு ஒன்றினை உருவாக்குவதற்காக இந்த செயற்பாட்டின் ஊடாக பின்னணி அமைக்கப்படும். பங்குபற்றுபவர்களின் கையடக்கத் தொலைபேசி பயன்படுத்தப்படும் புகைப்படக் கண்காட்சிக்கும் மற்றும் போட்டித் தொடரிற்கும் சமர்ப்பிக்கப்படும் என்பதுடன் அதனூடாக போட்டித்தொடர் ஏற்பாடு செய்யப்படும்.

## 01. வழிமுறை :-

1. இதற்காக யொவுன்புர நிகழ்ச்சியில் பங்குபற்றும் சகலருக்கும் பங்குபற்ற முடியும்.

2. மேற்படி பங்குபற்றுபவர்கள் பயன்படுத்தும் கையடக்கத் தொலைபேசியினைப் பயன்படுத்தி மேற்படி தொனிப்பொருளின் கீழ் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் இப்போட்டிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.
3. யொவுன்புர வளாகத்தில் Asia Foundation நிறுவனத்திற்காக நிறுவப்படும் புகைப்படக் கண்காட்சிக் கூடத்தில் இந்த நிகழ்ச்சி நடாத்தப்படும்.

4. இதற்காக பங்குபற்றும் இளைஞர் யுவதிகளுக்கு தமது படைப்புக்களின் Soft Copies யொவுன்பர நிகழ்ச்சியின் போது Asia Foundation கண்காட்சி கூடத்திற்கு கொண்டு வந்து ஒப்படைக்க முடியும்.
5. போட்டித்தொடரில் 1,2 மற்றும் 3 ஆம் இடங்கள் தெரிவு செய்யப்படுவதுடன் அதற்காக சான்றிதழ் மற்றும் பரிசு என்பன வழங்கப்படும்.
6. ஆரம்ப தேர்வுகளின் போது தெரிவு செய்யப்படும் புகைப்படங்கள் தமக்கேயுரிய படைப்புக்கள் என்பதற்கான உறுதிப்படுத்தல் ஒன்றினை போட்டித்தொடரின் இறுதிச் சுற்றிற்கு முன்னர் தன்னால் Asia Foundation கூடத்திற்கு ஒப்படைத்தல் வேண்டும்.

7. யொவுன்புர வளாகத்திலோ அல்லது வெளிப் பிரதேசத்திலோ அதாவது யொவுன்புர நிகழ்ச்சிக்கு சமூகமளிக்கு முன் கையடக்கத் தொலைபேசியினால் பெற்றுக்கொள்ளப்பட்ட மேற்படி தொனிப்பொருளிற்கு ஏற்புடைய புகைப்படங்களை மேற்படி போட்டிக்காக சமர்ப்பிக்க முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.13. விஷேட வலயங்கள்



### 3.13.1. ஊடக வலயம்

#### 3.13.1.1. ஊடகங்களின் கூடம் மற்றும் கண்காட்சிக் கூடம்

யொவுன்புர வளாகத்தில் ஊடக வலயம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுக் காணப்படும். கண்காட்சி வளாகம் மற்றும் ஊடக மத்தியநிலையம் என்பவற்றினைக் கொண்ட இந்த ஊடக வலயத்தில் பல எண்ணிக்கையான ஊடக நிறுவனங்கள் தமது கண்காட்சி கூடத்தினை முன்வைத்துள்ளன.

கண்காட்சிக் கூடத்தில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் செய்து காட்டப்படும். இந்த நிலையத்தில் இருந்து நாளாந்தம் யொவுன்புர நிகழ்ச்சி தொடர்பாக விரிவான பிரச்சாரம் ஒன்றினை வழங்குவதற்கு ஊடக நிறுவனங்களின் மூலம் நிகழ்ச்சத் திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளன. தேசிய மற்றும் பிரதேச ஊடகவியலாளர்கள் ஏராளமானோர் இதற்காக ஆயத்தமாக உள்ளனர்.

ஊடக வலயத்திலும் ஏராளமான ஊடகவியல் நிறுவனங்கள் நிலைநிறுத்தப்பட்டு உள்ளன. மேற்படி ஊடக நிறுவனங்களின் ஊடாக யொவுன்புர வாசிகளுக்காக ஏராளமான நிகழ்ச்சிகள் நடைமுறைப்படுத்தப்படும். அவர்களின் ஊடகவியல் திறமைகளை வெளிக்காட்டுவதற்கு நாளாந்த நிகழ்ச்சிகள் முன்வைக்கப்படுவதுடன் ஊடக நிறுவனங்களின் மூலம் நேரடி நிகழ்ச்சிகள் பல யொவுன்புர வளாகத்தில் இருந்து கொண்டு வருவதற்கு திட்டமிடப்பட்டு உள்ளன.

#### 3.13.1.2. யொவுன்புர பத்திரிகை

லேக் ஹவுஸ் நிறுவனம் மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் என்பன ஒன்றிணைந்து யொவுன்புர வளாகத்தில் இருந்து வெளியிடும் யொவுன்புர லேக்ஹவுஸ் மேலதிக பதிப்பு யொவுன்புர நிகழ்ச்சி நடாத்தப்படும் காலப்பகுதியிலே நாளாந்தம் வெளியிடப்படும்.அதனை இலங்கை நாடு பூராகவும் விநியோகிப்பதற்கும் ஏற்கனவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. .

#### 3.13.1.3. யொவுன்புர வானொலி

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், இலங்கை வானொலி ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் என்பன கைகோர்த்த வண்ணம் இளைஞர்களுக்காக வழங்கும் யொவுன்புர FM யொவுன்புர வளாகத்தில் இருந்து 20 கிலோ மீற்றர்கள் வலயமொன்றினைத் தழுவிய வகையில் ஒலிபரப்பப்படுகின்றது. யொவுன்புர நிகழ்ச்சிகள் தொடர்பான தகவல்கள்,இளைஞர் யுவதிகளின் பல்வேறு திறமைகள் மற்றும் யொவுன்புர இளைஞர் தொலைத் தொடர்பாடல் உறுப்பினர்கள் இங்கு நிகழ்ச்சிகளை முன்வைப்பர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3.13.1.4. யொவுன்புர கெட்டபத் பவுர

யொவுன்புர மற்றும் யொவுன்புர வாசிகளின் விடுதலை,கருத்துக்கள்,படைப்புக்கள் என்பவற்றை கெட்டபத் பவுரவில் குறிப்பிடுவதற்கு இளைஞர் யுவதிகளுக்கு வாய்ப்புக் கிடைக்கும். மாகாண மட்டத்தில் இம்முறை யொவுன்புர கெட்டபத் பவுர அமைக்கப்பட்டு உள்ளதுடன் அங்கு யொவுன்ர வாசிகளுக்கு தமது ஆக்கங்களை கெட்டபத் பவுரவில் குறிப்பிட முடியும். சிறந்த ஆக்கத்திற்காக பரிசுகளை வழங்குவதற்கும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஊடகப் பிரிவின் ஊடாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.


### 3.13. 2 கண்காட்சி வலயம்

I. தகவல் தொழிநுட்ப அபிவிருத்திப் பிரிவு

II. தொலைத் தொடர்புப் பிரிவு

III. தொழிநுட்பப் பிரிவுகள்

IV. கல்விப் பிரிவு



## 3.13.2.1. தகவல் தொழிநுட்ப அபிவிருத்திப் பிரிவு

01. நாற்பரிமாண வீடியோ படக் கண்காட்சி (4D Film)

- ஒரு முறைக்கு 250 பேர் வீதம்
- நேரம் 45 நிமிடங்கள் (மு.ப. 8.30 – பி.ப. 8.00)

02. கணினி விளையாட்டுக்கள் நிலையம்

- ஒரு முறைக்கு 20 பேர் வீதம்
- நேரம் 15 நிமிடங்கள் (மு.ப. 8.30 – பி.ப. 8.30)

03. தொழில் தகவல்கள் பட்டமைப்பினைப் பதிவுசெய்தல்

- ஒரு முறைக்கு 10 பேர் வீதம்
- நேரம் 5 நிமிடங்கள் (மு.ப. 8.30 – பி.ப. 8.30)

04. முப்பரிமாண பிரிண்டிங் (3D Print)

- ஒரு முறைக்கு 30 பேர் வீதம்
- நேரம் 30 நிமிடங்கள் (மு.ப. 8.30 – பி.ப. 8.30)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டங்கள்**

i. வரலாற்றுச் சிறப்பு மிக்க குருணாகல் பிரதேசம் தொடர்பாக தொல்பொருளியல் ரீதியான,பொருளாதார விஞ்ஞான ரீதியான ,புவியியல் விஞ்ஞான ரீதியான தகவல்களை இணையத்தள பக்கம் ஒன்றின் ஊடாக இளைஞர் யுவதிகளுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

ii. இளைஞர் யுவதிகளுக்கு நவீனதொழிநுட்ப அறிவினை வழங்குவதற்காக . நாற்பரிமாண வீடியோ படக் கண்காட்சி (4D Film)

iii. நவீன தொழிநுட்ப வழிமுறை ஒன்றினைப் பயன்படுத்தி கணினி விளையாட்டு நிலையம் ஒன்றினைத் தாபித்தல்.

iv. யொவுன்புர நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும் இளைஞர் யுவதிகளின் தரவுகளை வங்கிப்படுத்தல் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில் வாய்ப்பு சந்தைக்கு தரவுகளை அனுப்புதல்.

v. நவீன விஷேட பண்புகளைக்கொண்ட தொலைபேசி மற்றும் இணையத்தள விஷேட பண்புகளை உள்ளடக்கிய சிம் அட்டை ஒன்றினை இளைஞர் யுவதிகளுக்கு வழங்குதல்.

vi. கூடிய வினைத்திறனுடன் இணையத்தளங்களை பரிபாலிப்பதற்காக யொவுன்புர பிரசேத்திற்கு இலவசமாக Wi-Fi வலயம் ஒன்றினை ஸ்தாபித்தல்.

vii. கல்வி சார் தகவல்தொழிநுட்பத் துறையில் முன்னே செல்லக்கூடிய துறைகளான இணையத்தள நிர்மாணிப்பு,எப் நிர்மாணம், CCTV வலைமைப்பினை மேற்கொள்ளல் மற்றும் நவீன தகவல்தொழிநுட்ப கண்டுபிடிப்புக்களை மேற்கொள்ளல் என்பவற்றிற்கான விரிவுரைகளை நடாத்துதல்

viii. இளைஞர் யுவதிகளுக்கு இலவசமாக இணையத்தளத்தின் ஊடாக தொடர்புகொண்டு செயற்பாட்டு ரீதியாக இணையத்தளத்தில் சஞ்சரிக்கும் மற்றும் தேடிப்பார்க்கும் வாய்ப்புக்களை வழங்குதல்.

ix. டிஜிடல் அரசு – ஈ அரச ஈடுபடுத்தல்கள் தொடர்பாக அறிவினை வழங்குவதும் இளைஞர் சமுதாயத்தினை அடிப்படையாக்கொண்ட தற்கால ஈ அரசு துறையின் பாவனைகள்,ஈடுபடுத்தல்கள் மற்றும் தொழிநுட்பங்களை செயன்முறையின் ஊடாக மேறகொள்வதற்கு வாய்ப்புக்களை வழங்குதல் மற்றும் கலந்துரையாடல்.

x. இளைஞர் சமுதாயத்தினை இலக்காகக்கொண்டு தகவல் பாதுகாப்பு தொடர்பாகவும் மற்றும் தகவல்களைப் பயன்படுத்தும்போது பின்பற்றப்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய ஒழுக்க விழுமியங்கள் மற்றும் சிறந்த பழக்கவழக்கங்கள் தொடர்பாகவும் அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.

xi. ட்ரோன் தொழிநுட்பத்தின் ஊடாக புகைப்ப டங்கள்மற்றும் காட்சிகள் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளல் தொடர்பாக அறிவூட்டல் மற்றும் மொத்த முகாமிடல் பிரதேசத்தின் செயற்பாடுகளை Cod கெமராவின் மூலம் தழுவல் செய்தல் மற்றும் காட்சிப்படுத்தல்.

xii. யொவுன்புர நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் விரிவுரைகள் தொடர்பாக குறுஞ் செய்திகளின் மூலம் நிதமும் அறிவித்தலை மேற்கொள்ளல்.

xiii. யொவுன்புர பிரதேசத்தில் தெரிவுசெய்யப்பட்ட அலுவலகங்களுக்காக இணையத்தள வசதிகளை வழங்குதல், ஒவ்வொரு பிரிவிற்கும் கையடக்கத் தொலைபேசி மற்றும் நிலையான தொலைபேசித் தொடர்புகளை வழங்குதல்.

xiv. தகவல் தொலைத்தொடர்பு தொழிநுட்ப முகவர் நிறுவனத்துடன் ஒன்றிணைந்து Smart Social Circle நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்தல் மற்றும் Face Book பாவனையின் முக்கியத்துவம் தொடர்பாக அறிவூட்டுதலை மேற்கொள்ளல்.

xv. டிஜிடல் தொழிநுட்பம் தொடர்பாக புரிந்துணர்வினையும் மற்றும் அனுபவங்களையும் வழங்குவதற்காக நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

xvi. "Wall Garden" தொழிநுட்பத்திற்கு ஏற்ப இணையத்தளத்தில் விஷேட பொது இணையத்தள வலயங்களை உருவாக்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

xvii. யொவுன்புர பிரதேசத்தில் ஆகெட் இனை ஸ்தாபிப்பதன் ஊடாக Smart Phone, Laptop பயன்படுத்துவதற்கு இலவச வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுத்தல்.

xviii. Interactive Zone இனை ஸ்தாபிப்பதன் ஊடாக நவீன அறிவினை வழங்குவதற்கு மற்றும் தொழிநுட்பம் தொடர்பாக கற்றுக்கொள்வதற்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

xix. யொவுன்புர நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும் இளைஞர் யுவதிகளுக்கான அடையாள அட்டைகளைத் தயாரித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3.13.2.2. தொலைத் தொடர்பாடல் பிரிவு

**வெளியீடுகள் மற்றும் துண்டுப் பிரசுரங்களை வெளியிடுதல்.**

I. தொழிநுட்ப மற்றும் தொழிற் பயிற்சிகள் பிரிவு மற்றும் பரீட்சைகள் பிரிவு என்பவற்றினால் நடைமுறைப்படுத்தப்படும் இளைஞர் சேவைகள் மன்றத்தின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடக்கப்பட்ட வழிகாட்டல் புத்தகம் ஒன்றினை நிர்மாணித்து அச்சுப்பதிப்பு செய்து பங்குபற்றுபவர்களுக்கு வழங்குதல்.

### 3.13.2.3. தொழிநுட்பக் கண்காட்சி

இலங்கை நாட்டின் இளைஞர்களை சரியான திசையில் கொண்டுசெல்ல வேண்டுமாயின் அவர்கள் ஆக்கபூர்வமான நவீன அறிவினால் இற்றைப்படுத்தப்பட்ட ஒரு குழுவினராக இருத்தல் வேண்டும். அவ்வாறான நோக்கின் பால் அவர்களை இட்டுச்செல்லும் எதிர்பார்ப்புடன் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கௌரவ தலைவர் பணிப்பாளர் நாயகம் சட்டதரணி எரந்த வெளிஅங்கே அவர்களின் ஆலோசனைகளுக்கு ஏற்ப யொவுன்பர வளாகம் கல்வி மற்றும் தொழிநுட்பக் கண்காட்சியின் ஊடாக நாம் அதனை அர்த்தமுள்ளதாக்குவதற்கு எதிர்பார்க்கின்றோம். மேற்படி எதிர்பார்ப்பினை யதார்த்தப்படுத்திய வகையில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தொழிநுட்ப மற்றும் தொழில்சார் பயிற்சிகள் பிரிவின் ஊடாக நாடு பூராகவும் அமைந்துள்ள எமது சகல தொழிற்பயிற்சி நிலையங்களையும் ஒன்றிணைத்த வகையில் புத்தாக்கம் மற்றும் நவீன தொழிநுட்ப மாதிரிகள் பல உள்ளடங்கிய கண்காட்சி அலகுகள் மேற்படி கண்காட்சிக்காக முன்வைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

அவ்வாறே முப்படைகள் மற்றும் இலங்கையின் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் பலவும் மேற்படி கண்காட்சிக்காக எம்முடன் கைகோர்த்துள்ளன என்பதனையும் குறிப்பிடுதல் வேண்டும்.

புதியதைத் தேடிச் செல்லும் இளைஞர் யுவதிகளுக்காக தொழிநுட்ப மற்றும் கல்வி சார் அறிவினைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் கீழே குறிப்பிடப்பட்டு உள்ள கண்காட்சி அலகுகளை முன்வைத்தல் மேற்கொள்ளப்படும்.

- மோட்டார் இயந்திரத் தொழிநுட்பம்
- மின் மற்றும் இலத்திரனியல் தொழிநுட்பம்
- உணவுத் தொழிநுட்பம்
- ஒப்பனை மற்றும் சிகை அலங்காரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மோட்டார் இயந்திரத் தொழிநுட்பம்

உலகிற்கு அன்றாடம் இற்றைப்படுத்தப்படும் நவீன தொழிநுட்ப புத்தாக்கங்களை உருவாக்கும் துறை ஒன்றாக மோட்டார் இயந்திரத் துறையினை குறிப்பிட முடியும். தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மோட்டார் இயந்திரத் தொழிநுட்பப் பிரிவிற்கு உரிய ஏராளமான பாடநெறிகளின் பங்களிப்பு மேற்படி கண்காட்சிப் பிரிவிற்கு வழங்கப்பட்டு உள்ளது. அதன் கீழ் ஏராளமான புத்தாக்க மாதிரிகளை தங்கள் முன் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.விஷேடமாக முச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள்,விவசாய இயந்திர உபகரணங்கள், சாரதிகளுக்கான செமியுலேட்டர் ஆகிய கவர்ச்சி மிகு மற்றும் பொழுதுபோக்கான நிர்மாணிப்புக்கள் இதில் உள்ளடக்கப்பட்டு உள்ளன.

### மின் மற்றும் இலத்திரனியல் தொழிநுட்பம்

தொழிநுட்பத்தின் விருத்தியுடன் வேகமாக உலகம் பூராகவும் பரவிச்செல்லும் துறையொன்றாக இலத்திரனியல் துறையினைக் குறிப்பிட முடியும். தொழிநுட்பத்தின் நவீன அனுபவங்களை அனுபவிக்க விரும்பும் இளைஞர் யுவதிகளுக்காக ரோபோ தொழிநுட்பம்,நவீன கட்டிடங்கள் மற்றும் கட்டிட பாதுகாப்பு முறைகள்,கணினி சார் தன்னிச்சை உற்பத்தித் தொழிநுட்ப வழிமுறைகள் ஆகிய கவர்ச்சியான புத்தாக்கங்கள் மற்றும் மாதிரிகள் உள்ளடங்கிய மின் மற்றும் இலத்திரனியல் கண்காட்சி அலகு ஒன்று முன்வைக்கப்படும்.

### உணவுத் தொழிநுட்பம்

கண்காட்சி வளாகத்திற்கு வருகை தரும்,இளைஞர் யுவதிகளுக்கான உணவுத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கும்,பல்வேறு வடிவிலான மற்றும் சுவையினைக் கொண்ட உணவுகளை நேரடியாகத் தயாரித்து நுகர்வோரிற்கு வழங்குவதற்காக ஆயத்தம் செய்யும் விதத்தினை கண்டுகொள்ளக்கூடிய கண்காட்சி அங்கம் ஒன்றாக இதனைக் குறிப்பிட முடியும். இதற்காக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் சிற்றுண்டிகள் மற்றும் பேக்கரி தயாரிப்புக்கள், தலைமைச் சமையற்காரர்,கேக் மற்றும் கேக் மாதிரிகள் பாடநெறியினைக் கற்கும் பயிலுநர்களின் திறமைகளை நேரடியாகக் கண்டுகொள்ள வாய்ப்பு அளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

### ஒப்பனை மற்றும் சிகை அலங்காரம்

நாளுக்கு நாள் வாடிக்கையாளர்களின் கேள்விகள் அதிகரிக்கும் ஒப்பனை மற்றும் சிகை அலங்காரத் துறையினை பிரதிநிதித்துவப்படுத்திய வகையில் இந்த கண்காட்சி அலகு முன்வைக்கப்படும். கூந்தலை வெட்டுதல் மற்றும் சிகை வடிவமைப்பு,நகங்களை வடிவமைத்தல்,ஒப்பனைச் சிகிச்சைகள் ஆகிய சகல ஒப்பனை மற்றும் சிகை அலங்கார சேவைகளையும் சலுகை விலைக்கு வழங்கல்,மணப் பெண்களை அழகுபடுத்தல்,அழகு பேண் ஆலோசனைகளை வழங்குதல் போன்ற யொவுன்புர இளைஞர் யுவதிகளுக்காக மிகவும் கூடிய கவர்ச்சியான சேவைகள் ஏராளமானவற்றை இந்தப் பிரிவு வழங்குவதற்கு ஆயத்தங்களை மேற்கொண்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரீட்சைகள் மற்றும் மதிப்பீடுகள் பிரிவு

இளைஞர்களின் கல்வி மற்றும் தொழிநுட்பக் கண்காட்சி வளாகத்தில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒருங்கிணைப்புடனான அவர்களின் பங்களிப்பு யொவுன்புர நிகழ்ச்சியின் அபிமானமானத்தினைப் பாதுகாக்கின்றது.

அவ்வாறே இந்தக் கண்காட்சிக்காக பங்களிப்பினை வழங்கும் முப்படைகள்,இலங்கை பொலிஸ் திணைக்களம்,சிவில் பாதுகாப்புத் திணைக்களம்,பிரதான அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் என்பனவும் பல்வேறு துறைகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் இளைஞர் யுவதிகளுக்காக பாரிய சேவை ஒன்றினை வழங்குவதற்கு நடவடிக்கைகளைத் திட்டமிட்டு உள்ளன.

## கல்விப் பிரிவு

அறிவுள்ள இளைஞர்களைத் தோற்றுவிப்பதற்காக துணை ஒன்றினை வழங்கி மேற்படி பிரிவின் கீழ் சுகாதாரக் கல்விப் பணியகம்,போதைப் பொருள் ஒழிப்பு சனாதிபதி செயலகப் படையணி,ஆட் பதிவுத் திணைக்களம்,ஆபத்து விளைவிக்கும் மருந்துகள் கட்டுப்பாட்டுத் தேசிய சபை,மனச கல்வி வெளியீட்டு நிறுவனம்,பொலிஸ் போதைப் பொருட்கள் பணியகம், கடற்றொழிலியல் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு, இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனம், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் பிரிவு மற்றும் (UNDP), தெங்கு அபிவிருத்தி அதிகார சபை,இலங்கை காணிகளை ஈடு செய்யும் மற்றும் அபிவிருத்தி செய்யும் கூட்டுத்தாபனம், கால்நடை வளர்ப்பு மற்றும் சுகாதாரத் திணைக்களம்,கிராமிய பொருளாதாம் தொடர்பான அமைச்சு மற்றும் சிறு வியாபார அபிவிருத்திப் பிரிவு,இமாஷி வெளியீடுகள், Esoft Metro Campus நிறுவனம் என்பன தனது பங்களிப்பினை வழங்குகின்றன. விரிவுரைகளை வழங்குதல்,ஆலோசனைப் பத்திரங்களை, விநியோகித்தல், அறிவூட்டும் நிகழ்ச்சிகள் என்பன இதன் கீழ் நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டு உள்ளன. ,

## தொழிற் பயிற்சிக் கல்வி

மேற்படி பிரிவின் கீழ் யொவுன்புர நிகழ்ச்சியில் பங்குகொள்ளும் இளைஞர் யுவதிகளின் தொழில்சார் பயிற்சிகள் தொடர்பான அறிவு மற்றும் புரிந்துணர்வு என்பவற்றினை விருத்தி செய்வதற்கும், பயிற்சிப் பாடநெறிகளுக்கான ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கும் நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளன. அதற்காக கீழே குறிப்பிடப்பட்டு உள்ள நிறுவனங்களின் மூலம் பங்களிப்பினை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

தொழில்சார் பயிற்சிகள் மற்றும் திறன் விருத்தி அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும்,

- இலங்கைத் தொழிற் பயிற்சி அதிகார சபை
- இலங்கை ஜேர்மன் தொழிநுட்பப் பயிற்சி நிறுவனம்.
- தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனம்
- தொழிநுட்பக் கல்வி மற்றும் தொழிற் பயிற்சி வழங்கல் அதிகார சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழு
- தொழில்சார் தொழிநுட்பப் பல்கலைக்கழகம்.
- சமுத்திரவியல் பல்கலைக்கழகம் எனும் நிறுவனம் மற்றும் தனியார் தொழில்சார் பயிற்சி நிறுவனங்களின் கீழ்,
- வடமேல் தொழிநுட்பக் கல்லூரி

## பாதுகாப்புப் பிரிவு

இலங்கையின் அபிமானத்தினை மேம்படுத்துவதற்காக உயரிய சேவை ஒன்றினை வழங்கும் முப்படைகள்,இலங்கை பொலிஸ் திணைக்களம்,சிவில் பாதுகாப்புத் திணைக்களம்,தேசிய இளைஞர் படையணி, என்பன இதன் கீழ் கண்காட்சிகளை முன்வைப்பார்கள். இங்கு ஆகாய விமானங்களைக் காட்சிப்படுத்தல்,கடற்படை உபகரணங்களை கண்காட்சிப்படுத்தல்,யுத்த உபகரணங்களைக் காட்சிப்படுத்தல்,பொலிஸ் பாதுகாப்பு நாய்களின் கண்காட்சி மற்றும் குதிரைப்படைக் கண்காட்சி,பயிலுநர்களை இணைத்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சைகளை நடாத்துதல்,என்பன உட்பட யொவுன்புர இளைஞர் யுவதிகளுக்காக ஏராளமான நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்துவதற்கு மேற்படி பிரிவின் கீழ் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

## தகவல் தொழிநுட்ப அபிவிருத்திப் பிரிவு

உலகளாவிய அறிவினை உலகம் பூராகவும் பரவச் செய்வதற்கான பங்களிப்பினை வழங்கும் தொலைத்தொடர்பாடல் துறை தொடர்பாக செயன்முறை அனுபவங்களைப் பெற்றுக்கொண்டு அதன் பயன்களை அனுபவிப்பதற்காக இளைஞர் யுவதிகளுக்கு சந்தர்ப்பத்தினை வழங்குவதன் ஊடாக மேற்படி பிரிவு கண்காட்சிக்கு தனது பங்களிப்பினை வழங்குகின்றது. இதற்காக தொலைத்தொடர்பாடல்கள் மற்றும் டிஜிடல் வசதிகளை வழங்கும் அமைச்சு,தகவல் மற்றும் தொலைத்தொடர்பாடல் நிறுவனம் (ICTA),சிறிலங்கா ரெலிகொம்,மொபிடெல் தனியார் என்பன தொடர்புகொண்டு கண்காட்சிக்காக பெறுமதிமிக்க சேவை ஒன்றினை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு உள்ளன.

ஆக்கபூர்வமான மற்றும் சவால்களுக்கு முகங்கொடுக்க முடியுமான அறிவுள்ள இளைஞர் யுவதிகள் குழு ஒன்றினை உருவாக்குவதற்குத் தேவையான கல்வி,தொழிநுட்ப,தொழில்சார் அறிவினை வழங்கி புதிய,வியக்கத்தக்க அனுபவங்கள் பலவற்றையும் அவ்வாறே பொழுதுபோக்கான அனுபவங்கள் ஏராளமானவற்றையும் நேரடியாகப் பார்த்து ரசிக்க தங்கள் அனைவருக்கும் கண்காட்சிப் பிரதேசத்தின் ஊடாக இலவச வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளும் ஆற்றல் கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3.13.2.4 கல்வி மற்றும் வர்த்தகக் கண்காட்சி

இதற்காக புத்தாக்கம்,புதிய படைப்புக்கள் என்பவற்றினை சந்தைக்கு அறிமுகம் செய்யும் நிறுவனங்கள் பங்குபற்றுவதுடன் இளைஞர் யுவதிகளின் உள மற்றும் சமூக அபிவிருத்திக்குத் துணை புரியும் நிறுவனங்களும் இதில் பங்குபற்றும். மேலும் இளைஞர் யுவதிகளுக்கு நவீன தொழில் முயற்சிகள் தொடர்பாக தன்னம்பிக்கை ஒன்றினைக் கட்டியெழுப்புதவற்கு இதனைப் பார்வையிடல் மூலம் இயலுமாவதுடன் இளைஞர் யுவதிகளின் வழக்கமான எண்ணங்களில் இருந்து விடுபட்டு புதியதோர் கோணத்தில் உலகினைப் பார்க்கத் துணையாக அமையும்.

# 4. முகாம்களின் பொது வசதிகள்

## 4.1. நீர்ப் பாவனை



யொவுன்புர நிகழ்ச்சி நடைபெறும் காலப்பகுதியில் நீர்ப்பாசன நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக காரியாலயம் ஒன்று தாபிக்கப்பட்டுள்ளது. மேற்படி அலுவலகத்திற்குப் பொறுப்பாக அலுவலர் குழுவொன்று இருப்பதுடன் அதற்குரிய விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

I. குடி நீருக்காக

யொவுன்புர நிகழ்ச்சியின் மொத்த தேவைப்பாட்டிற்காக 25 நீர் பவுஸர்கள் வழங்கப்படும்.

II. குளித்தல் மற்றும் துப்பரவு நடவடிக்கைகளுக்கான நீர்

நீர் வளங்கள் சபையினால் சுத்திகரிக்கப்பட்ட நீர் வழங்கப்படும்.

முகாம் அமைக்கப்பட்டுள்ள பிரதேசத்தில் நீரினைப் பாவிக்கும்போது கீழ்வரும் அறிவுருத்தல்களைப் பின்பற்றுவதன் மூலம் நீர் தொடர்பான பிரச்சினைகளைக் குறைத்துக்கொள்ள முடியும்.

a. நீரினைப் பாவிக்கும்போது மிகவும் சிக்கனமாகவும் ,தேவையற்ற விதத்தில் வீண் விரயம் செய்யாதும் பாவித்தல் வேண்டும்.

b. குடிப்பதற்கும் மற்றும் சமையலறை நடவடிக்கைகளுக்குமாக நீர் வழங்கப்படும்போது அந்தந்த முகாம்களுக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள நீர்த் தாங்கியின் மூலம் நீரினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

c. நீரினைப் பாவிக்கும்போது முகாம் அமைக்கப்பட்டுள்ள பிரதேசத்தினை அசுத்தம் செய்வதிலிருந்து தவிர்ந்துகொள்வதில் கவனம் எடுத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

d. நீர் கசிதல் ஒன்று ஏற்பட்டால் உடனே அது தொடர்பாக நீர்ப் வழங்கலினை மேற்கொள்ளும் அலுவலகத்திற்கு அறிவித்து உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளுதல் வேண்டும்.

## 4.2. மின் பாவனை

மின்சாரம் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது மிகவும் கவனமாக செயற்படுதல் வேண்டும்.மின் தொடர்பான வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தற் கோவையின் பிரகாரம்

செயற்படுவதற்கு சகலரும் கட்டுப்பட்டுள்ளனர். ஒவ்வொரு மாவட்டக் காரியாலயத்திற்கும் தேவையான மின்சாரம் வழங்கப்படும். இதற்காக மின் ஆளிகள் தேவையான வகையில் பொருத்திக் கொடுக்கப்படும்.

மின்சாரம் துண்டிக்கப்படும்போது உரிய பகுதிக்காக நியமிக்கப்பட்டுள்ள மின் தொழிநுட்பவியலாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

## 4.3. கூடாரங்கள்



யொவுன்புர நிகழ்ச்சியில் ஒரு மாவட்டத்திற்காக உரிய வகையில் கூடாரங்களை நிர்மாணித்தல்.மேற்படி சகல கூடாரங்களையும் தூய்மையாகவும், முறையாகவும், அழகாகவும் வைத்திருப்பதற்காக திட்டம் ஒன்றினைத் தயாரித்துக்கொள்ளல் மாவட்டம் சார் பொறுப்பாகும். விஷேடமாக தமது மாவட்டத்திற்குரிய வகையில் முகாம்களை அமைத்து அலங்காரம் செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.
முகாமினுள்ளே வைக்கப்பட்டிருக்கும் தத்தமது பொருள் பண்டங்கள் தொடர்பாக கூடிய கவனத்துடன் இருக்க வேண்டியதுடன் அதன் பாதுகாப்பு தொடர்பாக தாமே பொறுப்பெடுத்தல் வேண்டும்.

கூடாரங்களை நிர்மாணித்தல் (மாவட்ட உதவிப் பணிப்பாளர்களின் ஆலோசனையின் பேரில் மாவட்டத்தின் முன்னோடிக் குழுக்கள் கூடாரங்களை நிர்மாணித்தலை மேற்கொள்ளும்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

i. பங்குபற்றும் இளைஞர் யுவதிகளுக்காக அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட பிரதேசத்தில் ஆண்கள் மற்றும் பெண்களாக வேறாக்கப்பட்ட தூங்கும் கூடாரங்களை அமைத்தல்.

ii. பங்குபற்றும் சகலருக்குமாக சமையலறை ஒன்றினை தகரங்களைப் பயன்படுத்தி அமைத்தல்.

iii. சாப்பாட்டறைக்காக பொது மண்டபம் ஒன்றினை டாபோலினயன் அல்லது தகரங்களைப் பாவித்து நிர்மாணித்தல்.

iv. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் கூடாரங்களைப் பொறுப்பேற்றல்,ஒப்படைத்தல் என்பவற்றிற்காக அலுவலர் ஒருவர் பெயரிடப்பட்டு உள்ளதனால் அவர் நிகழ்ச்சித்திட்ட இறுதியில் சரியான முறையில் மேற்படி கூடாரங்களை ஒப்படைத்தல் வேண்டும்.

கூடாரங்களை வழங்குதல்,பொருத்துதல், கழற்றி அகற்றுதல் ஆகிய நடவடிக்கைகள் இராணுவப் படையின் உதவியுடன் மேற்கொள்ளப்படும். கூடாரத்தில் பங்குபற்றுபவர்களுக்கான இருப்பிட வசதிகள்,பிரயாணப் பைகளை வைக்கும் இடங்கள் மற்றும் பிரத்தியேகப் பொருட்களை (சப்பாத்து,ஆடைகள்,பீங்கான் ,கோப்பைகள் ஆகியன) வைப்பதற்கு சந்தர்ப்பத்திற்குத் தேவையான உபகரணங்களைச் செய்துகொள்ளல் மாவட்ட உதவிப் பணிப்பாளர்களின் மேற்பார்வையின் கீழ் முன்னோடிக் குழுவின் பொறுப்பாகும்.

கூடாரங்வை நிர்மாணித்தல் தொடர்பாக தலைமை அலுவலகத்தில் நியமிக்கப்பட்டு உள்ள அலுவலர்களுடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

அவ்வாறே அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக முன்னோடிக் குழு கவனத்தை மேற்கொள்ள வேண்டியதுடன் திடீர் அனர்த்தம் ஒன்றிற்கு முகங்கொடுக்கக் கூடியதான ஆயத்தத்தை முன்னோடிக் குழு திட்டமிடுதல் வேண்டும்.அதற்குத் தேவையான அனர்த்த முகாமைத்துவக் குழு ஒன்று (பயிற்சி பெற்ற) முகாமில் தரித்திருப்பார்கள்.

கூடாரங்களுக்கு அல்லது ஏனைய தயாரிப்புக்களுக்கு ஏதேனும் அனர்த்தம் ஏற்பட்டால் அதனைத் தவிர்க்கக்கூடிய வகையிலான ஆயத்தங்கள் இருத்தல் வேண்டும்.

## 4.4. சுகநலன் பேண் நடவடிக்கைகள்



ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தேவையான கழிவகற்றல் கொள்கலன்கள் வழங்கப்படவுள்ளன. துப்பரவு வேலைப்பிரிவின் ஊடாக சகல இடங்களிலுமுள்ள கழிவுகளை அகற்றுதல் மேற்கொள்ளப்படும்.இதற்காக தங்களது மாவட்டத்திற்கு பெற்றுத் தரப்படும் கழிவகற்றல் கூடையில் மிஞ்சிய உணவுகள்/ பிளாஸ்டிக் –பொலித்தீன் / ஏனைய பொருட்கள் என வெவ்வேறாக இடுதல் வேண்டும்.அறிவிக்கப்படும் குறிப்பிட்ட ஒரு நேரத்தில் இக்கழிவுகள் அகற்றப்படும். நகர சபைகளினதும் பிரதேச சபைகளினதும் ஒத்துழைப்பு வழங்கப்படும்.யொவுன்புரவின் சகல இடங்களினதும் துப்பரவு வேலைகள் இதனூடாக மேற்கொள்ளப்படும்.கழிவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடப்பட்ட கூடைகளை தமது மாவட்டத்திலிருந்து கொண்டுசெல்லல்,மற்றும் அகற்றுதல் என்பவற்றிற்காக பிரதேச சபையினதும் மற்றும் நகர சபையினதும் வேலையாட்களின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்படும்.

யொவுன்புர நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றுபவர்கள் 15 பேரிற்கு ஒன்று என்ற வகையில் குளியலறைகள் மற்றும் மலசலகூடங்கள் நிர்மாணிக்கப்பட்டு உள்ளதனால் பொருத்தமான வகையில் பயன்படுத்துதல் வேண்டும். மேலும் வெளிநாட்டு இளைஞர் யுவதிகளுக்காக VIP மலசல கூட வசதிகளும் வழங்கப்பட்டு உள்ளன.

## 4.5. யொவுன்புர பிரதேசத்தை துப்பரவு செய்யும் நடவடிக்கைகள்

**<u>உதவி பெறும் நிறுவனங்கள்</u>**

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
வடமேல் மாகாண சபை

- நாளாந்த சுத்தம் மேற்கொள்ளல் 2018.03.28 ஆந்திகதி முதல் நிகழ்ச்சி முடிவடையும் வரை மேற்கொள்ளல்.
- தொழிலாளர்கள் தேவையான வகையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.
- மாவட்டம் ஒன்றிற்கு 03 வீதம் கழிவுக் கூடைகளை வழங்குதல்.
- கழிவுகளை அகற்றுவதற்காக டிரக்டர்கள் மற்றும் டிப்பர் வாகனங்கள் பயன்படுத்தப்படும்.
- கழிவு நீரினை அகற்றுவதற்காக முறையான கால்வாய்க் கட்டமைப்பு ஒன்று அமைக்கப்படும். .
- கழிவுகள் மற்றும் கழிவு நீரினை அகற்றுவதற்கு கலி பவுஸர்கள் பயன்படுத்தப்படும்.

## 4.6. மருத்துவச் சேவைகள் மற்றும் முதலுதவிகள்



யொவுன்புர 2018 நிகழ்ச்சிக்காக வைத்திய சேவைகள் மற்றும் முதலுதவிச் சேவைகளை வழங்கும்போது பிரதேச வைத்தியசாலைச் சேவைகள் வழங்கப்படும். இதற்கு மேலதிகமாக யொவுன்புர பிரதேசத்தில் இராணுவப் படைகள் வைத்திய அலகின் முதலுதவி அலகு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு உள்ளதுடன் முகாமிற்கு உள்ளே மூன்று இடங்களில் புனித ஜோன் நோயாளர் வண்டிச் சேவை மற்றும் செஞ்சிலுவைச் சங்க அமைப்பு மற்றும் விளையாட்டுத்துறை வைத்திய அலகின் முதலுதவியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர்.

முதலுதவிகளைப் பெற்றுக்கொள்ளும்போது கீழ்வரும் படிமுறைகளைப் பின்பற்றுதல் கட்டாயமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I. ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் வருகை தரும் இளைஞர் குழுக்களுக்கு தேவையான முதலுதவிப் பெட்டியொன்றினை வைத்துக்கொள்ளல் மிகவும் முக்கியமானதாகும்.

II. குழுவினால் வழங்கப்படும் முதலுதவி போதியதாக இல்லாத சந்தர்ப்பங்களில் முதலுதவிக் குழுக்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்.

III. யொவுன்புர பிரதேசத்தில் முதலுதவிச் சேவைக் கூடங்கள் மற்றும் பிரதான வைத்தியசாலை அலகு ஒன்று என்பன செயற்படும்.

IV. மேற்படி கூடங்கள் குருணாகல் மாவட்ட சுகாதார சேவைகள் ,விளையாட்டுத்துறை வைத்திய அலகு,புனித ஜோன் நோயாளர் வண்டிச் சங்கம்,மற்றும் செஞ்சிலுவைச் சங்கம் என்பவற்றின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.

V. மேற்படி ஒவ்வொரு கூடங்களிலும் தங்களது வசதிக்காக ஒவ்வொரு வைத்தியர் அல்லது இரு வைத்தியர்கள் இருப்பார்கள்.

VI. முதலுதவிக்காக தாங்கள் மேற்படி கூடங்களுக்குச் செல்ல முடியும் என்பதுடன் மேற்சிகிச்சைக்காக நோயாளர்கள் வண்டியின் மூலம் தலைமை வைத்தியசாலை அலகிற்கு அனுப்பப்படுவர்.

VII. தலைமை வைத்தியசாலை அலகின் முதலுதவி நடவடிக்கைகள் தொடர்பாக வைத்தியர்கள், மருந்தகர்கள், மருந்து கலப்பவர்கள்,பொது சுகாதாரப் பரிசோதகர்கள்,தாதி அலுவலர்கள் மற்றும் துணைச் சேவைக் குழுவொன்றும் இருப்பதுடன் தங்களது வைத்திய சிகிச்சை சேவைகள் தொடர்பான தொடர்புகளுக்காக ஒருங்கிணைப்பு அலுவலர்களும் இங்கு காணப்படுவார்கள்.

VIII. முகாமின் வைத்தியசாலை தங்கிச் சிகிச்சை பெறும் மற்றும் வெளி நோயாளர் சிகிச்சைப் பிரிவு எனும் இரு பிரிவுகளைக்கொண்டது.

IX. முகாமிற்குரிய வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெறும் இளைஞர் யுவதிகளுக்கான உணவு,உரிய மாவட்டத்தின் மூலம் வழங்கப்பட வேண்டியதுடன் மு.ப.7.00 மணி நண்பகல் 12.00 மணி மற்றும் பி.ப.6.00 மணி ஆகிய நேரங்கள் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ளன.மேற்படி நேரங்களுக்கு மேலதிகமாக வைத்தியசாலைக்கு வருவதைத் தவிர்த்துக் கொள்ளல்வேண்டும்.

X. இளைஞர் யுவதிகள் முதலுதவி அலகு ஒன்றிலோ அல்லது ஏனைய வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு தங்கிச் சிகிச்சை பெறுவார்களாயின் அவர்களுக்கான உணவு உரிய மாவட்டத்தினால் வழங்கப்பட வேண்டும்.

XI. முகாமில் கலந்துகொள்ளும் இளைஞர் யுவதிகளைத் தெரிவு செய்யும்போது நிலையான நோய்கள் உள்ளவர்களைத் தெரிவுசெய்தல் தவிர்க்கப்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியதுடன் ஏதேனும் ஓர் சந்தர்ப்பத்தில் அவ்வாறான ஒருவர் குழுவிற்கு உள்வாங்கப்பட்டால் அவனின் அல்லது அவளின் நோய் நிலைமை தொடர்பாக அறிய வந்தவுடனேயே முகாம் அமைந்துள்ள பிரதேசத்தில் உள்ள வைத்தியசாலைக்கு மேற்படி இளைஞரை அல்லது யுவதியை அனுமதித்தல் வேண்டும்.

## 5. சிறந்த மாவட்டத்தினைத் தெரிவு செய்தல்



யொவுன்புர நிகழ்ச்சியில் சிறந்த மாவட்டத்தினைத் தெரிவு செய்யும் போட்டி 2018.03.28 தொடக்கம் 2018.04.01 வரையான காலப்பகுதியில் நடைபெறும்.அதற்கு மேலதிகமாக அழகான அதாவது ஆக்கபூர்வமான மாவட்டத்தினைத் தெரிவுசெய்யும் போட்டியும் நடைபெற உள்ளது.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக்கொண்டு புள்ளிகள் வழங்கப்படும்.

| A. ஆக்கபூர்வமான மாவட்டத்தினைத் தெரிவுசெய்வதற்கான அளவுகோல் | | புள்ளிகள் |
|---|---|---|
| 1 | முன்னோடிக் குழுவின் முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் | 30 |
| 2 | தூய்மை மற்றும் அலங்காரம் | 20 |
| 3 | முகாமின் உபகரணங்கள் மற்றும் ஆக்கபூர்வத் தன்மை | 20 |
| 4 | நுழைவாயில் | 30 |
| 5 | கழிவுப் பொருட்களை வெளியேற்றல் | 20 |
| 6 | சூழலுக்குச் சாதகமான தன்மை | 20 |
| 7 | அனர்த்த முகாமைத்துவம் | 20 |
| 8 | நேர்த்தி மற்றும் முறையான தன்மை மற்றும் பாதுகாப்பு வேலைத் திட்டங்கள் | 20 |
| 9 | முகாமிற்குள் ஒழுக்கம் தொடர்பான கூட்டங்கள் / ஆலோசனைகளை வழங்குதல் | 20 |
| மொத்தம் | | **200** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| B. சிறந்த மாவட்டத்தினைத் தெரிவுசெய்வதற்கான அளவுகோல் | | புள்ளிகள் |
|---|---|---|
| 1 | முகாமிற்குள் மற்றும் வெளியே ஒழுக்கம் மற்றும் பாதுகாப்பு | 30 |
| 2 | யொவுன்புரவிற்கு எதிர்பார்க்கப்பட்ட இளைஞர் பங்களிப்பு | 20 |
| 3 | போட்டிகளிலிருந்து பெற்ற வெற்றிகள் | 30 |
| 4 | நிகழ்ச்சிகளுக்கான பங்களிப்பு | 30 |
| 5 | போட்டிகளுக்கான பங்களிப்பு | 20 |
| 6 | அலுவலர்களின் செயலூக்கம் மிக்க பங்களிப்பு | 10 |
| 7 | அலுவலர்களின் ஒழுக்கம் | 10 |
| 8 | முகாமின் ஆக்கபூர்வத் தன்மை | 30 |
| 9 | கணக்கெடுப்பு | 20 |
| மொத்தம் | | 200 |

போட்டிகளை இரு பிரிவுகளாக நடாத்த உத்தேசிக்கப்பட்டு உள்ளதுடன் இதில் ஆகக் கூடிய புள்ளிகளைப்பெறும் மாவட்டத்திற்கு 1,2,3 இற்காக பணப் பரிசுகளும் மற்றும் நினைவுச் சின்னமும் வழங்கப்படும். அவ்வாறே 4 ஆம் இடம் முதல் 10 ஆம் இடம் வரையான மாவட்டங்களுக்கு கேடயம் ஒன்றினையும் சான்றிதழ் ஒன்றினையும் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## 6. பொது அறிவுருத்தல்கள்

ஒவ்வொரு மாவட்டமும் செயலாளர் அலுவலகம் ஒன்றினை கொண்டு நடாத்தவேண்டியதுடன் அங்கு குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை காட்சிப்படுத்தவும் வேண்டும்.

- மாகாணங்கள் மற்றும் மாவட்டத்தின் பெயர் மற்றும் மாவட்டக் கொடி
- முகாமிற்குரிய நேர அட்டவணை
- பங்குபற்றும் மொத்த இளைஞர்களினதும் எண்ணிக்கையினை கீழ்வருமாறு குறிப்பிடுதல் வேண்டும்.
    a. பெண்/ஆண்
    b. இளைஞர் கழகங்கள் / ஏனையவை
    c. வெளிநாட்டு இளைஞர் யுவதிகள் நாடுகளுக்கு ஏற்ப
    d. நோய்வாய்ப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை அந்தந்த செயற்பாடுகளுக்கு ஏற்ப
    e. நிகழ்ச்சிகளுக்காக வெளியே சென்றுள்ளவர்களின் எண்ணிக்கை அந்தந்த செயற்பாடுகளுக்கு ஏற்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ பங்குபற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை

- பெண்/ஆண் எண்ணிக்கை
- ஒவ்வொவ்வொரு அலுவலரினதும் பெயர்,தொலைபேசி இலக்கம் மற்றும் பதவி

I. மாவட்ட மட்டத்தில் இளைஞர்களின் பரிமாறல் நிகழ்ச்சிகள் மற்றும் உறவு ஊர்களைத் தேடிச் செல்லல் என்பவற்றை ஏற்பாடு செய்தல் வேண்டும்.

II. மாவட்டத்தின் தற்றுணிபு அடிப்படையில் இளைஞர்களின் திறமைகள், ஆக்கங்கள், முகாமில் ஆக்கப்பட்ட ஓவியங்கள், பாடல்கள், புகைப்படங்கள், செதுக்கல் வேலைப்பாடுகள் ஆகிய ஆக்கங்களை காட்சிப்படுத்துவதற்காக கண்காட்சிக் கூடம் ஒன்றினை நிர்மாணித்தல் வேண்டும்.

III. முகாம் வாசிகள் பொருத்தமான, ஒழுக்கமான, எளிமையான ஆடைகளை அணிய வேண்டியதுடன் குறைந்தளவான ஆடைகளைக் கொண்டு வருதல் வேண்டும்.

IV. முகாமிற்கு வருபவர்கள் அவர்களது பிரயாணப்பைகளில் பெயர்,முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும்.அவ்வாறே எல்லாப் பிரயாணப்பைகளையும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒழுங்கு முறையாக வைக்கப்பட வேண்டியதுடன் அவை தொடர்பாக கண்காணிப்புடனும் இருத்தல் வேண்டும்.

V. முகாமில் பல்வேறு துறைகளில் ஏற்படும் குறைபாடுகளை உரிய நகரக் குழுவின் ஊடாக புதிய ஒருங்கிணைப்பு அலுவலர் ஊடாக நகர சபை அலுவலகத்திற்கு அறிவித்தல் வேண்டும்.

VI. யொவுன்புர நிகழ்ச்சிக்காகப் பயன்படுத்தும் சூழலையும் மற்றும் வளங்களையும் பாதுகாத்தல் வேண்டும்.

VII. கலந்துரையாடல் நேரங்களில் கையடக்கத தொலைபேசியினை செயலிழக்கச் செய்து வைத்துக்கொள்ளல் வேண்டும்.

VIII. யொவுன்புர அடையாள அட்டைகளை சகலரும் கட்டாயமாக அணிந்திருத்தல்வேண்டும்.

IX. யொவுன்புர நிகழ்ச்சியின் மொத்த மதிப்பீட்டினை பங்குபற்றிய சகலரும் பூர்த்தி செய்து மாவட்டத்தின் இளைஞர் சேவைகள் அலுவலர் ஊடாக மாவட்ட உதவிப் பணிப்பாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.மாவட்ட உதவிப் பணிப்பாளர் அவர்கள் 2018.03.31 ஆந்திகதி மு.ப.10.00 மணிக்கு தமது மாவட்டத்திற்குரிய மதிப்பீட்டுப் பத்திரங்கள் திட்டமிடல் மற்றும் அபிவிருத்திப் பிரிவின் அலுவலரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6.1 சிரமதான மற்றும் ஆய்வு நிகழ்ச்சிகள் என்பவற்றில் பங்குபற்றுபவர்களுக்கான அறிவுருத்தற் கோவை

I. உரிய நிகழ்ச்சிகளுக்காக பொருத்தமான,எளிமையான மற்றும் ஒழுக்கமான ஆடை ஒன்றினை அணிதல் வேண்டும்.

II. உரிய நேர காலத்தில் வழங்கப்பட்டுள்ள இலக்கினைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

III. மொத்த நிகழ்ச்சியினதும் நோக்கங்களை நிறைவேற்றுவதனை இலக்காகக்கொண்டு வெளிநாட்டு இளைஞர் குழுவினரும் மற்றும் இலங்கையின் நாலா பக்கங்களில் இருந்தும் வருகை தந்துள்ள இளைஞர்களும் ஒருவருக்கு ஒருவர் அறிமுகமாகி ஒத்துழைப்புடனும் எளிமையாகவும் நிகழ்ச்சியில் பங்குபற்றுதல் வேண்டும்.

## 7. பாதுகாப்பு மற்றும் ஒழுக்கம் தொடர்பான அறிவறுத்தல்கள்



01. முகாம்கள் அமைந்துள்ள பிரதேசத்திற்காக வருகை தரும் ஒவ்வொருவரும் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும்.

02. முகாமிடல் நடவடிக்கைகளுக்குத் தேவையான பொருட்கள்,உபகரணங்கள்,தனிப்பட்ட பாவனைக்குத் தேவையான பொருட்கள்,பண்டங்கள்,உபகரணங்கள்,ஆடைகள் தவிர்ந்த ஏனையவைகளை முகாம் அமைந்துள்ள பிரதேசத்திற்கு கொண்டுவருதலைத் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

03. தரவுகளைக் கொண்டுசெல்லக்டிய மற்றும் களஞ்சியப்படுத்தக்கூடிய தங்களிடம் உள்ள உபகரணங்களை (Memory உடனான கையடக்கத் தொலைபேசி, , Memory Card, Pen Drives, Lap top, Tabs, Mini Tabs ஆகியன ) அத்தியவசியமாயின் மாத்திரம் முகாமிற்குக் கொண்டு வருதல் வேண்டும்.மேலும் மேற்படி உபகரணங்களைப் சோதனையிடுவதற்காக பாதுகாப்பு தொடர்பாக பொறுப்புக் கூறும் அலுவலர் ஒருவர் கேட்டுக்கொள்ளும் எச்சந்தர்ப்பத்திலும் அவற்றை வழங்கவும் மற்றும் சோதனையிடுவதற்காக ஒத்தழைப்பு வழங்கவும் வேண்டும்.

04. தமது தனிப்பட்ட பொருட் பண்டங்களை உள்ளடக்கிய பையினை வேறு யாரும் திறக்க முடியாத வண்ணம் சாவிப்பூட்டு இடுதல் வேண்டும்.பிரயாணப்பைகளைச் சோதனையிடும் எந்த சந்தர்ப்பத்திலும் பிரயாணப்பையில் உள்ள சகலவை தொடர்பாகவும் பொறுப்புக்களை தனிப்பட்ட ரீதியில் தாமே பொறுப்பேற்க வேண்டும்.

05. யொவுன்புர நிகழ்ச்சிக்காக முகாம்கள் அமைக்கப்பட்டுள்ள பிரதேசத்திற்குள் உட்பிரவேசித்த பின்னர் மேற்படி முகாம் அமைந்துள்ள பிரதேசத்திலிருந்து வெளியேறிச் செல்ல அனுமதி வழங்கப்பட மாட்டாது. நோய் நிலைமைகளின்போது உரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுமதியினைப் பெற்றால் மாத்திரம் வைத்திய சிகிச்சைக்காக வெளியே செல்ல அனுமதி வழங்கப்படும்.

06. யொவுன்புர பிரதேசத்திற்குள் நுழையும்போதும் மற்றும்வெளியேறும்போதும் தங்களது ஆளடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்காக 2018 யொவுன்புர நிகழ்ச்சிக்காக வழங்கியுள்ள அடையாள அட்டையினை அணிந்திருத்தல் கட்டாயமானதாகும்.

07. யொவுன்புர நிகழச்சியில் நிலைத்து இருக்கும் காலத்தில் அதில் பங்குபற்றுபவர்கள் அல்லாத வெளி நபர்கள்,உறவினர்கள் மற்றும் நண்பர்களைச் சந்திக்க பங்குபற்றுபவர்களுக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

08. மதுபானங்கள்,போதை வஸ்துக்கள்,புகைக்கும் பொருட்கள் அல்லது வேறு எந்தவொரு அபாயகரமான ஔடதத்தினையும் முகாம் அமைந்துள்ள பிரதேசத்திற்குள் கொண்டு வருதல்,பயன்படுத்துதல் போன்ற எந்தவொரு செயலையும் மேற்கொள்ள முடியாது.

09. முகாமில் பங்குபற்றுபவர்கள் தமது நேர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்ச்சிகளுக்கும் மற்றும் செயற்பாடுகளுக்கும் கட்டாயமாகப் பங்குபற்றுதல் வேண்டும்.

10. கட்டாயமாக யொவுன்புர நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும் சகலரும் மற்றைய முகாம்களில் கலந்துகொள்பவர்களும் அலுவலர்களும் விடயப்பொறுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும், பொறுப்புக்களை ஏற்று செயற்படும் இளைஞர்களின் தலைவர்களுடன் நட்புறவுடன் செயற்படுதல் வேண்டும். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பிரச்சினைகளை ஏற்படுத்தல் கூடாது.எப்போதும் நட்புறவினை விருத்தி செய்யும் வகையிலும் அவ்வாறே பரஸ்பர கௌரவத்தினை பாதுகாக்கும் வகையிலும் நடந்துகொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

10. முகாம்கள் அமைந்துள்ள பிரதேசத்தில் மனித கௌரவம்,பொறுப்புடனான நடத்தை அவ்வாறே வேற்று இனத்தவர்கள்,வேற்று மதத்தவர்கள் மற்றும் எந்தவொரு வேறுபாடுகளைக்கொண்ட உறுப்பினர்களுக்கும் அவர்களது கலாச்சார அடையாளத்துடன் கூடிய செயற்பாடுகளை மேற்கொள்ளும்போது நிராகரிக்காமலும் மற்றும் மறுக்காமலும் கௌரவத்துடன் கவனத்தைச் செலுத்தல் முகாம்களில் பங்குபற்றும் சகலரினதும் பொறுப்பாகும்.

11. முகாம்கள் அமைந்துள்ள பிரதேசத்திற்கு சேவைகளை வழங்குவதற்காக அல்லது விஷேட அனுமதி ஒன்றினைப் பெற்றுக்கொண்ட வாகனங்கள் தவிர்ந்த ஏனைய சகல வாகனங்களும் (மோட்டார் சைக்கிள்கள் உட்பட) உட்பிரவேசித்தல் தடையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. முகாமில் பங்குபற்றுபவர்கள் தமது தனிப்பட்ட பாவனைக்குத் தேவையான சகலவற்றையும் கொண்டு வரவேண்டியதுடன் பொருட்களை வாங்குவதற்காக முகாம் அமைந்துள்ள பிரதேசத்தில் இருந்து வெளியே செல்வதற்கு எந்த ஒருவருக்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

13. பங்குபற்றுபவர்கள் தாம் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளுக்குப் பொருத்தமான ஆடைகளை அணிந்து மேற்படி நிகழ்ச்சிகளுக்காக கலந்துகொள்ள வேண்டியதுடன் தேவையான பொருத்தமான ஆடைகளையும் கொண்டு வருதல் வேண்டும்.

14. பங்குபற்றுபவர்கள் பெறுமதி மிக்க பொருட்களைக்கொண்டு வருவதாயின் தமக்கு அத்தியவசியமான பொருட்களை மாத்திரம் கொண்டு வருதல் வேண்டும்.பெறுமதி வாய்ந்த பொருட்களின் பாதுகாப்பு தொடர்பாக தாமே பொறுப்பேற்றல் வேண்டும்.

15. யொவுன்புர நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் சகல உறுப்பினர்களும் தமது பிரயாணப் பையில் தமது பெயர் மற்றும் மாவட்டம் என்பவற்றைக்கொண்ட லேபல் ஒன்றினை தொங்கவிடுதல் வேண்டும்.

16. யொவுன்புர மின் கட்டமைப்புடன் தற்காலிகமாகவோ அல்லது எந்த ஒரு தொடர்பினையும் ஏற்படுத்துவதற்கு அதில் பங்குபற்றும் எவரும் முயற்சி எடுத்தல் கூடாது.தமது மாவட்டத்திற்குரிய சமையலறை மற்றும் அத்தியவசிய இடங்களுக்குத் தேவையான மின் கட்டமைப்பினை பாதுகாப்பான முறையில் நிறுவி தொடர்பினைப் பெற்றுக்கொள்வதற்காக அது தொடர்பான கடமையில் ஈடுபட்டுள்ள தொழிநுட்பவியலாளர் ஒருவரின் உதவியினைப் பெற்றுக்கொள்ளல் கட்டாயமானதாகும்.

17. .தமது தனிப்பட்ட மின் பாவனைப்பொருட்களுக்கான அதாவது உலர்மின் கலங்களை மின்னேற்றல்,கையடக்கத் தொலைபேசியை மின்னேற்றல் என்பவற்றிற்கான Charging Points மாவட்டங்களுக்கு ஏற்ப அமைத்துக்கொடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் மேற்படி உபகரணங்களின் பாதுகாப்பினை பங்குபற்றுபவர்கள் பொறுப்பேற்க வேண்டும்.

18. தற்காலிக கூடாரங்களுக்கு மின் இணைப்புக்கள் வழங்கப்பட மாட்டாது என்பதுடன் அவற்றிற்காக மீள் மின்னேற்றக் கூடிய மின் விளக்குகளை (Rechargeable Lamps) பங்குபற்றுபவர்கள் கொண்டு வருதல் வேண்டும்

19. முகாம் அமைந்துள்ள பிரதேசத்தில் நீர் வழங்கல் வரையறைக்கு உட்பட்டுள்ளதனால் நீரினை சிக்கனமாகப் பாவித்தல் முகாமில் பங்குபற்றும் சகலரினதும் பொறுப்பாகும்.

20. முகாம் அமைந்துள்ள பிரதேசத்தில் விஷேடமாக தங்குமிடங்களில் தீ மூட்டல் தடை செய்யப்பட்டுள்ளதுடன் தீ மூட்டல் நிகழ்ச்சிகளுக்காக ஒதுக்கப்பட்ட இடங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில் தீ மூட்டுவதில் இருந்து தவிர்ந்துகொள்ளல் வேண்டும்.



